# கார்த்திகேயினி

# புதுமுறை அகராதி

தொகுப்பாசிரியர்

எஸ். நடராஜன்


கார்த்திகேயினி பிரசுரம்

இராமச்சந்திரபுரம் P.O.

திருச்சி ஜில்லா

கார்த்திகேயினி

# புதுமுறை அகராதி

முன்னுரை :

உயர்திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.
'தமிழ்-லெக்ஸிக்கன்' பதிப்பாசிரியர்.

தொகுப்பாசிரியர் :

திரு. எஸ். நடராஜன்
(முன்னாள் "தாய்நாடு" ஆசிரியர்)
தமிழாசிரியர், சுப்பராமய்யர் மத்யதரகலாசாலை
புதுக்கோட்டை,

வெளியிடுவோர் :

கார்த்திகேயினி பிரசுரம்

இராமச்சந்திரபுரம் :: புதுக்கோட்டை.

நிர். 39
முதற் பதிப்பு: நவம்பர் 49

உரிமை ஆசிரியற்கு

(அகராதி)

விலை ரூபாய் 1—8—0

அச்சிட்டோர்:
மதராஸ் ரிப்பன் பிரஸ்,
புதுக்கோட்டை.

# முன்னுரை

திரு எஸ். நடராஜன் அவர்கள் தொகுத்த "புது முறை அகராதி" யைப் பார்வையிட்டேன். ஆசிரியர் மிக்க சிரமம் எடுத்து இவ் அகராதியை இயற்றியுள்ளார். தற்காலத்து மாணவர்கள் ரகர றகர பேதங்களை அறிந்து கொள்வதில் பெரிதும் இடர்ப்படுகிறார்கள். இங்ஙனமே ணகர னகர பேதங்களும், லகர ளகர ழகர பேதங்களும், அவர்களுக்கு இடையூறாயுள்ளன. இப்பேதங்களைவிளக்கி யமைத்த ஓர் அகராதி நூல் இன்றியமையாததுதான். இதனையுணர்ந்து புதுமுறையில் இவ்வகை அகராதியை இயற்றியுதவிய ஆசிரியர்பால் தமிழ் மாணவர்களும் எழுத்தாளர்களும் மிக்க நன்றி பாராட்டுங் கடப்பாடு உடையார். இருசாரார்க்கும் இந்நூல் நன்கு பயன்படும் எனக்கருதுகின்றேன்.

இந்நன்முயற்சியைப் போல, பிறநூல்களும் இயற்றித் தமிழ்ப்பணி புரியுமாறு ஆசிரியருக்குத் தமிழுலகம் ஊக்கம் அளிக்குமென நம்புகிறேன்.

சென்னை
7—11—49

எஸ். வையாபுரிப்பிள்ளை,
'தமிழ்-லெக்ஸிக்கன்' பதிப்பாசிரியர்.

# பதிப்புரை

அகராதி ஓர் அரிய திரவியசாலை. எளியோரிடம் உள்ள செப்புக் காசும் அதனில் உண்டு. ஏந்தலிடம் உள்ள பொற்காசும் அதனில் ஒளிவிடும். ஆனால் அதைச் செலவிடுவோர் அளவறிந்து செய்ய வேண்டும். அவ்விதம் செய்யாவிடில் ஒளி மாறிய, ஒலி மாறிய பொத்தலாகிய செல்லாக்காசைப் போன்று சொல்லின் பொருள் வேறுபட்டு விகார உருவில் காட்சியளிக்கும். அவ்வித நிலை அகல ஒரு உதவுகோலாக இவ்வகராதி உதவுமென்று கருதுகின்றோம்.

இவ்வகராதியைத் தொகுத்து, தமிழ் மக்களுக்கு அளித்த ஆசிரியர், **எஸ். நடராஜன்** அவர்கள் மேலும் இவ்விதப் புதுமுயற்சியில் புகுந்து தொண்டாற்றுவாரென்று விரும்புகின்றோம்.

இந் நூலுக்கு உயர்திரு **எஸ். வையாபுரிப் பிள்ளை**, தமிழ்-லெக்ஸிக்கன் பதிப்பாசிரியர் அவர்கள் அணிந்துரை அளித்து ஆதரித்தமைக்கு எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தமிழ் மக்கள் சார்பாக உவந்து அளிக்கின்றோம்.

தமிழ் மக்கள் இவ்வரிய நூலை ஆதரித்து, முன்னூல்களைப்போல் ஊக்கம் அளிப்பார்களென நம்புகின்றோம்.

**இராமச்சந்திரபுரம்**
**10—11—49.**

**கார்த்திகேயினி பிரசுரத்தார்**

# முகவுரை

தமிழ் மொழி தழைத்தோங்கும் காலம் இது. தமிழ் மொழியின் பொற்காலமென்று பொறிக்க வேண்டிய காலம் இது வென்று தலைநிமிர்ந்து தைரியமாகக் கூறலாம்.

அமிழ்தினும் இனிய தமிழ் மொழி எழுத்து, சொல், பொருள், என்ற முப்பிரிவை உடலும் உயிருமாகக்கொண்டு உலவி வருகின்றது. உடல் எழுத்தும் சொல்லுமாகும். எழுத்துக்களாலான சொற்கள் பிழையுற சிலரால் எழுதப்பட்டு, ஊறு விளைவிக்கப்படுகின்றது. இது அறிந்த செய்கை யல்ல. அறியாச்செய்கை. இக்குறையை நீக்கி, தமிழ்த்தாயின் இனியவடிவு கண்டு இன்புற எழுந்ததே இப் "புதுமுறை அகராதி."

இந்நூலில் சில அரிய சொற்களைச் சேர்த்துள்ளோம். ஏவற் சொற்களையும், வினைச்சொல் 'தல்' '(த்)தல்' முதலிய விகுதிகளை ஏற்று வருவதால் ஏற்படும் பொருள் வேறுபாடுகளை அறியவேண்டுமென எடுத்துக்காட்டியும், சொற்கள் இல்லாத இடங்களுக்கு ......... இக்குறியிட்டும், வழக்கத்தில் உள்ள சொற்களை ( ) இக்குறியிட்டும் காட்டியுள்ளோம். போலிச் சொற்களை அரிதாகச் சேர்த்து, அகராதிக்கேற்ப அகரமுதல் "ண, ர, ல" வைகளையும் அதற்கு நேரில் "ன; ற; ழ, ள" க்களையும் அமைத்துள்ளோம்.

இந்நூல் ஒரு தொகுப்பு நூல். இஃது ஆசிரியர்கள், மாணவர்கள், கட்டுரையாளர்கள், மற்றோர் யாவருக்கும் உறுபயன் விளைக்குமென்று நம்புகின்றோம்.

தமிழ்த்தொண்டே தலையாயத் தொண்டென அரசியல், ஆராய்ச்சி, மொழிபெயர்ப்பு முதலியவைகளை கதை, கட்டுரை, கவிதை மூலமாக வெளியிட்டுவரும் 'கார்த்திகேயினி' பிரசுரத்தார் இந்நூலை வெளியிட்டமைக்கு தமிழ் மக்கள் சார்பாக எம் நன்றி உரித்தாகுக.

இந்நூலை பல்வேலைகளுக்கிடையில் பாங்குற அச்சிட்டுக்கொடுத்த "மதராஸ் ரிப்பன்" அச்சகத்தார்க்கு எம் நன்றி.

தமிழ்மொழியை பிழையற எழுதவேண்டுமென்ற பெருநோக்குடன் வெளியிடப்பட்டதே இந்நூல். இம்முயற்சியை அறிஞர் பலரிடம் கூறினோம். அவர்களின் ஆசியே இந்நூல் என்று அகமகிழ்கின்றோம். எம் சிற்றறிவுக்கு எட்டிய வரை செப்பம் செய்துள்ளோம். இந்நூலைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் ஆதரித்து, மேன்மேலும் இம்முறையான சிறிய நோக்கங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்படி விரும்புகின்றோம்.

வணக்கம்.

புதுக்கோட்டை
10-11-49.

இங்ஙனம்
எஸ். நடராஜன்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ண, ன பேதங்கள் | 1 |
| 2. | ர, ற ,, | 21 |
| 3. | ல, ழ, ள ,, | 53 |

கார்த்திகேயினி

# புதுமுறை அகராதி



**அணங்கு :** அழகு, அச்சம், குட்டி, கொலை, சண்டாளன், தெய்வம், தெய்வமகள், தெய்வத்திற்கு ஒப்பான மாதர், நோய், மையல்நோய், வடிவு, வருத்தம், வருந்திக் கொல்லுந் தெய்வ மகள், வெறியாட்டு.

**அணல் :** அலைதாடி, உள்மிடறு, கழுத்து, கீழ்வாய்ப்புறம், தாடி, மேல்வாய்ப்புறம்.

**அணி :** அணியிலக்கணம், அழகு, அன்பு, ஆபரணம், இனிமை, ஒப்பனை, ஓர் உவம உருபு, கம்மாளர் கருவி, சமீபத்தில், செய்யுளணி, படையுறுப்பு, படைவகுப்பு, பெருமை, முகம், வரிசை.

**அணிதல் :** அலங்கரித்தல், சூழுதல், பூணுதல், பொருந்துதல், வர்ணித்தல்.

**அணிகம் :** அணிகலம், வாகனம்.

**அணிலம் :** அணில்.

**அணு ;** உயிர், சூட்சுமசரீரம், நுண்மை, நுண்மையானது, பொடி.

- ன -

**அனங்கு :** அனங்கன், மன்மதன்.

**அனல் :** இடி, உஷ்ணம், கொடிவேலி.

**அனி :** நெற்பொரி, பத்தாயப் பெட்டி.

**அனிகம் :** சிவிகை, சேனை.

**அனிலம் :** காற்று, வாதரோகம்.

**அனு :** தாடை, பிரதிச் செயல்; மோனையெழுத்து, வடமொழி உபசருக்கங்களிலொன்று.

**அணுக்கம் :** அணிமை, சமீபம்.

**அணை :** அணைக்கட்டு, ஆசனம், உதவி, சேது, தடை, துயிலிடம், நீர்க்கரை, புணர்ச்சி, முட்டு, மெத்தை.

**அணைதல் :** அவிதல், சார்தல், படுத்தல், பிறத்தல், புணர்தல், பொருந்துதல்.

**அணைத்தல் :** அணையச் செய்தல், அவித்தல், உண்டாக்குதல், கட்டுதல், கூட்டிமுடித்தல், தழுவுதல்.

**அண் :** மேல், தடியில் வெட்டிய வரை, வேட்டை நாயின் உருவு கயிறு.

**அண்மை :** சமீபம்.

**அண்ணம் :** உண்ணுக்கு, மேல் வாய்ப்புறம்.

**அண்ணல் :** அரசன், பெருமை, தலைமை, பெருமையிற் சிறந்தோன், முல்லை நிலத்தலைவன், கடவுள்.

**அண்ணை :** அறிவின்றி மயங்கியிருப்பவன்.

**அண்ணன் :** தமையன்.

**அரண் :** காவற்காடு, கோட்டை, வேலாயுதம்.

**அவண் :** அவ்விடம், அவ்விதம்.

**ஆணகம் :** சுரை.

**ஆணம் :** குழம்பு, குழம்புத்தான், கொள்கலம், சிறுமை, நேயம், பற்றுக்கோடு.

**அனுக்கம் :** அச்சம், கம்பித இசை, பலவீனம், பால வியாதி, முணக்கம், வருத்தம்.

**அனை :** அந்த, மீன் வகை.

**அன் :** ஆண்பால் வினை விகுதி, ஒரு சாரியை, தன்மை ஒருமை விகுதி.

**அன்மை :** அல்லாமை, தீமை.

**அன்னம் :** ஒரு பறவை, கவரிமான், சோறு.

**அன்னல் :** அனல், புகை.

**அன்னை :** தாய், தமக்கை, பார்வதி.

**அன்னன் :** அப்படிப்பட்டவன்.

**அரன் :** எப்பொருட்கு மிறை, சிவன்.

**அவன் :** ஆண்பால், கேடு, பயனின்மை.

**ஆனகம் :** சுரை, துந்துபி, தேவதாரு, படகம்.

**ஆனம் :** எழுத்துச் சாரியை, கள், தெப்பம், மரக்கலம்.



**ஆணன் :** ஆண்மையுடையவன்.

**ஆணி :** அச்சாணி, ஆசை, ஆதாரம், இரும்பாணி, உரையாணி, எழுத்தாணி, புண்ணுணி, மரவாணி, மேன்மை.

**ஆணை :** அதிகாரம், ஆன்றோர்மரபு, இலாஞ்சனை, கட்டளை, சபதம், தடுக்கை, பிரமாணம், மெய், வெற்றி.

**ஆண் :** ஆண்பாற்பொது, ஆண்மரம், தலைமை, வீரன், வீரியம்

**இணை :** இசைவு, இணைத்தொடை, இரட்டை, எல்லை, ஒப்பு, கூந்தல், சகாயம்.

**இணைதல் :** இசைதல், ஒத்தல், சேர்தல்.

**இணைத்தல் :** கட்டுதல், சேர்த்தல்.

**இவண் :** இவ்விடம், இம்மை.

**உண்ணம் :** உடை, வெப்பம்.

**உண்ணல் (உண்ணுதல்) :** அனுபவித்தல், இசைவாதல், உட்கொள்ளுதல், உணவைக் கடியாது உட்கொள்ளுதல், ஒத்தல், கவர்தல், சாப்பிடுதல், பொருந்துதல்.

**உண்ணி :** உண்பவள், செந்து வகை, பாலுண்ணி.

**உவண் :** மேலிடம்.

**ஆனன் :** சிவன்.

**ஆனி :** உத்திராடம், ஆன் பொருளை, கேடு, மூலம், தமிழ் மூன்றும் மாதம்.

**ஆனை :** அத்திமரம், யானை.

**ஆன் :** அவ்விடம், இடபம், எருமை, ஒரு சாரியை.

**இனை :** இன்ன.

**இனைதல் :** அஞ்சுதல், இரங்குதல், வருந்துதல்.

**இனைத்தல் :** கெடுத்தல், வருந்துதல்.

**இவன் :** சுட்டுப்பெயர்.

**உன்னம் :** அன்னப் பறவை வகை, கருத்து, சிறு விரலும் பெருவிரலும் தம்முட்கூட மற்றை மூன்று விரல்களும் விட்டு நிமிரும் இணையாவினைக்கை. நசை கிழிக்குங்கருவி, நிமித்தம் குறிக்கும் ஓர் மரம்.

**உன்னல் :** நினைக்கை, மனம்.

**உன்னி :** அழிஞ்சில், குதிரை, செடி வகை, தியானத்திற்குரிய பொருள்.

**உவன் :** முன்னிற்பவன்.

**ஊணம் :** ஒரு தேசம்.

**ஊணன் :** மிகவுண்போன்.

**ஊணி :** உணவு கொள்ளுபவன்-ள்.

**ஊண் :** ஆன்மாவின் சுகதுக்கானுபவம், உணவு, உண்கை.

**எண் :** அறிவு, ஆலோசனை, இலக்கம், எண்ணம், கணக்கிடுகை, கணிதம், சோதிட நூல், தர்க்கம், மதிப்பு, மந்திரம், மனம், மாற்று, வரையறை.

**எண்ணுதல் :** கணக்கிடுதல்.

**எண்ணை (எண்ணெய்) :** எண்ணெய்ப் பொது, நல்லெண்ணெய், மர வகையில் ஒன்று.

**எண்பது :** எட்டு—பத்து.

**ஏணம் :** நிலைபேறு, மான்.

**ஏணல் :** வளைவு.

**ஏணை :** நிலை, புடவைத் தொட்டில்.

**ஏண் :** உயர்ச்சி, எல்லை, கர்வப் பேச்சு, திண்மை, வலிமை, வளைவு.

**ஒண்ணு :** இயலென்னும் ஏவல்.

**ஒண்ணு-தல் :** இயலுதல், தக்கதாதல், பெண்மை.

**ஊனம் :** அழிவு, இறைச்சி கொத்தும் பட்டடை மரம், குறைவு, குற்றம், தீமை, பழி, பிணம்.

**ஊனன் :** உடற்குறைபாடுள்ளவன்.

**ஊனி** :மாமிசதேகத்திலுள்ளவன்.

**ஊன் :** உடல், தசை, மாமிசம்.

**என் :** எது அல்லது எதை யெனப் பொருள்படும் இடைச்சொல், என்ன, ஓர் அசை, ஓர் இகழ்ச்சிக் குறிப்பு, தன்மை ஒருமையில் வரும் வினை விகுதி, யான் என்பது வேற்றுமையில் அடையும் திரிபு.

**என்னுதல் :** என்று சொல்லுதல்.

**என்னை :** என் பிதா, என் தலைவன், என் தாய், என்ன பயன், யாது.

**என்பது :** ஒரு அசை நிலைச்சொல்.

**ஏனம் :** ஆபரணம், ஆய்த எழுத்தின் சாரியை, ஓலைக்கலம், கருவி, பன்றி, பாத்திரம், பாவம்.

**ஏனல் :** கதிர், கருந்தினை, செந்தினை, தினைப்புனம்.

**ஏனை :** ஓர் இசை விகற்பம், மலங்கு மீன், மற்றை.

**ஏன் :** எதற்கு, ஒழிதல் பொருளில் வரும் இடைச்சொல், தன்மை ஒருமைப் பெயர் வினைகளில் வரும் விகுதி, பன்றி.

**ஒன்னு :** ஒன்று என்பதின் போலி.

**ஒன்னுதல் :** பொருந்துதல், பொறுத்தல்.



**ஓணம் ;** ஆறு, திருவோணநாள்.

**கணகம் :** தனித்தனி யாகவுள்ள தேர் 27 யானைகள் 27 குதிரைகள் 81 காலாட்கள் 135 உள்ள படைப் பிரிவு.

**கணகன் :** கணக்கப்பிள்ளை, சோதிடன்.

**கணப்பு :** கணப்புச்சட்டி, குளிர் காயுந்தீ.

**கணம் :** அற்பம், கூட்டம், திரண்டோர், திரட்சி, நட்சத்திரம், பதினெண்கணம், பேய், வட்டம்.

**கணி :** கலை, சித்திரமெழுதுவோன், சோதிடன், நூல்வல்லவன், மருதநிலம்.

**கணித்தல் :** கணக்கிடுதல், குறித்தல், சிருட்டித்தல், படித்தல், மதித்தல், மனதினுள்ளேயே செபித்தல்.

**கணிப்பு :** அளவிடுகை, கௌரவிக்கை. மகிப்பிடுகை.

**கணை :** அம்பு, அம்பினலகு, ஆயுதக் காம்பு, கணைக்கால், கணைச் சூடு, கணையமரம், கரும்பு, சிவிகையின் வளைக்கொம்பு, திப்பிலி, திரட்சி, பூரநாள்.

**ஓனம் :** எழுத்தின் சாரியை.

**கனகம் :** பொன்.

**கனகன் :** பொன் போன்ற மேனியையுடையவன் (இரணிய கசிவு).

**கனப்பு :** அழுத்தம், இறுமாப்பு, கொழுப்பு, பருமை, பாரம்.

**கனம் :** அகலம், உறுதி, ஒரெண்ணை அதனாலேயே இருமுறை பெருக்க வரும் இலக்கம், கன வடிவு, கூட்டம், கோரைக் கிழங்கு, செறிவு, பருமன், பாரம், பெருமை, பொன், மிகுதி, மேகம், வட்டம், வேத பாட விசேஷம்,

**கனி :** இனிமை, கனிவு, சாரம், பழம்.

**கனிதல் :** அளிதல், இனித்தல், தழல் மிகுதல், பழுக்கக் காய்தல், பழுத்தல், மனம்முதலியன இளகுதல், முதிர்தல், முன்கோபம் அடைதல்.

**கனித்தல் :** இளகச்செய்தல்.

**கனிப்பு :** இனிமை.

**கனை :** ஒலி, செறிவு, நிறைவு, மிகுதி.

**கனைதல்:** ஒலித்தல், மிகுதல், நெருங்குதல்.

**கனைத்தல்:** இருளுதல், ஒலித்தல், குதிரை முதலியன கத்துதல், கொக்கரித்தல், திரளுதல், மூண்டு செல்லுதல்.

**கண்:** இடம், உடம்பு, உணர்த்துவது, கண்ணோட்டம், ஞானம் உணர்த்துவது, தேங்காய் பனங்காய்களின் கண், துவாரம், பற்றுக்கோடு, பீசம், பீலிக்கண், புண்ணின்கண், பெருமை, மரக்கணு, முரசு முதலியவற்றின் அடிக்குமிடம், மூலைக்கண், முன்பு, மூங்கில், விழி.

**கன்:** உறுதிப்பாடு, கல், கன்னார் தொழில், சிறு தராசுத் தட்டு, செம்பு, வேலைப்பாடு.

**கண்ணன்:** கண்ணுடையவன், கிருஷ்ணன், திருமால்.

**கன்னன்:** இடைவள்ளலில்ஒருவன்

**கண்ணு:** திப்பிலி, சிறுமரவகை.

**கன்னு:** ஒருவகை வாத்தியம்.

**கண்ணுதல்:** அருமையாதல், கருத்து வைத்தல்.

**கண்ணார்:** பகைவர்.

**கன்னார்:** கல்நார்(ஒருவங்கமருந்து)

**கண்ணி:** அரும்பு, கயிறு, கொழுந்து, சூடும்பூமாலை, தாமணி, பூங்கொத்து, புஷ்பம் அடுக்கும் முடிப்புக்கயிறு, பூமாலை, போர்ப்பூ, முடிச்சு.

**கன்னி:** அழிவின்மை, அஸ்த நக்ஷத்திரம், இளமை, என்றும் இளமையழியாதவன், கற்றாழை, கன்னியாராசி, காக்கணம் (ஒரு கொடி), குமரி, குமரியாறு, தசை நாடியிலொன்று, தவப் பெண், துர்க்கை, பார்வதி, புதுமை, புரட்டாசி, பெண், முதன் முதலான நிகழ்ச்சி.

**கண்ணிகை:** தாமரைப்பொகுட்டு.

**கன்னிகை:** குமரி, தாமரைக் கொட்டை, பூவின் மொட்டு.

**கண்ணிமை:** ஒரு மாத்திரைக் கால அளவு, கண்ணிதழ்.

**கன்னிமை:** கன்னித்தன்மை.

**கரண்:** காய்கறிகளின் முண்டு, புண் வடு.

**கரன்:** ஓர் அரக்கன், நிலையுள்ளவன்.



**கருணை:** அவலச்சுவை, காருக் கருணை, கிருபை.

**கருனை:** பொரிக்கறி.

**கலணை:** குதிரைக்கல்லணை.

**கலனை:** கலப்பை, கலப்பையுறுப்பு.

**கவணம்:** அடிபட்ட காயக்கட்டு.

**கவனம்:** கலக்கம், கவிபாடுகை, கருத்து, காடு, படை, போர், வெப்பம், வேகம்.

**கழணி:** கழுநீர்.

**கழனி:** இடுதிரை, செங்குவளை, சேறு, மருத நிலம்.

**காணம்:** ஒரு செக்கின் அளவைக் கொண்ட முகத்தளவை, கொள்ளு, செக்கு, நிறுத்தளவையுளொன்று, பாகம், பொருள், பொற்காசு, பொன்.

**கானம்:** இசைப்பாட்டு, காடு, தேர், தொகுதி, நந்தவனம், பேதை, வாசனை, வானம்பாடி.

**காணல்:** காண்கை, மனத்தால் குறிக்கை, வணங்குகை.

**கானல்:** உப்பளம், உவர்நிலம், ஒளி, கடற்கரை, கடற்கரைச் சோலை, கழி, சூரியகிரணம், பரல்நிரம்பியநிலம், பேய்த் தேர், மலைசார்ந்த சோலை, வாசனை, வெப்பம்.

**காணு:** சிறுபாம்பு.

**கானு:** சுக்கான் கைப்பிடி.

**காண்:** அழகு, காட்சி.

**கான்:** ஜலதாரை, மரக்கலத்தின் அறை, வாய்க்கால்.

**கிணி:** கைத்தாளம்.

**கினி:** கிரகபீடை.

**கினிதல்:** முற்றுங்கவிதல்.

**கிணை;** உடுக்கை, ஒருவகை மருத நிலப்பறை.

**கினை:** புடமிடுதற்குரிய கவசம், விளாமரம்.

**கிண்ணம்:** சிறுவட்டில், நாழிகை வட்டில்.

**கின்னம்:** துன்பம்.

**கிண்ணி:** கத்தியின் கைபிடியுறை, கிண்ணம், நண்டின் கால், நாயின் கிண்ணக்கால்.

**கின்னி:** மழைக்கிளி.

**கீணம்:** சிதைவு.

**கீனம்:** இழிவு, குறைவு.

**குணகு:** பூதபிசாசம்.

**குணகுதல்:** சோர்தல், மனந்தடுமாறுதல், வளைதல்.

**குனகுதல்:** கொஞ்சிப்பேசுதல்.

| - ண - | - ன - |
|---|---|
| **குணட்டு :** கதிர் முதலியவற்றின் சிறு கொத்து. | **குனட்டு :** குறும்பு. |
| **குணட்டுதல் :** குதித்து விளையாடுதல், செல்லங் கொஞ்சுதல், பகட்டுப் பண்ணுதல், மயக்கிப் பேசுதல். | |
| **குணி :** சொத்தைக்கையன், நற்குணமுடையவன், பண்டி, முடமானது. | **குனி :** வளைந்தகை, வில். |
| | **குனிதல் :** இரங்குதல், தாழ்தல், வணங்குதல், வளைதல், வீழ்தல். |
| **குணித்தல் :** ஆலோசித்தல், கணித்தல், பெருக்குதல், வரையறுத்தல். | **குனித்தல் :** ஆடுதல், குரல்நடுங்குதல், வளைத்தல். |
| **குணிப்பு :** அளவு, ஆராய்ச்சி, மதிப்பு. | **குனிப்பு :** ஆடல், கூத்துவகை, செய்யுட்சந்தவகை, வளைந்தகை. |
| **கோசணை :** பேரொலி. | **கோசனை :** கோரோசனை, பேரொலி. |
| **கோண் :** கோணம், கொடுங்கோண்மை, நுண்ணிய பகுதி, பாத்திரத்தின் மூக்கு, மாறுபாடு, வளைவு. | **கோன் :** அரசன், இடையர் பட்டப் பெயர், தலைவன். |
| **சகுணம் :** குணத்தோடு கூடியது. | **சகுனம் :** நன்மை தீமைக்குறி, பறவை, நிலாமுகிப்புள், கிழங்கு. |
| **சணகம் :** கடலை, புளியாரை. | **சனகம் :** சாதிக்குக் காரணமான சூக்குமவினைவகை, புளியாரை. |
| **சணம் :** ஒரு செடி வகை (சணல்), நொடி நேரம். | **சனம் :** மக்கள், இனத்தார், கூட்டம். |
| **சண்ணம் :** ஆண் குறி. | **சன்னம் :** குரல் இழைவு, நுண்மை, நுண்ணிய பொடி, நேர்மை, பொடி ரத்தினம், மறைபொருள், மெல்லியதாய் அறைக்கப்பட்ட காரை, ரவை குண்டு. |
| **சமணம் :** சமணமதம். | **சமனம் :** தணியச் செய்கை. |



| - ண - | - ன - |
|---|---|
| **சமண் :** அருகமதம், அம்மணம். | **சமன் :** ஒப்பு, சமீபம், நியாயஸ்தலத்து அதிகாரியின் அழைப்புக்கட்டளை, யமன். |
| **சாணகம் :** சாணி. | **சானகம் :** வில். |
| **சாணம் :** சாணி, சாணைக்கல், சாதிலிங்கம், சந்தனக்கல், தழும்பு, நாராலாகியபொருள். | **சானம் :** சாதிலிங்கம், தியானம், பெருங்காயம். |
| **சாணி :** குதிரை பழக்குவோன், சாணம், புத்தி நுட்பமுள்ளவன். | **சானி :** மனைவி, வேசி. |
| | **சானித்தல் :** தியானித்தல். |
| **சிண் :** கூட்டாளி, சூதாட்டத்தின் கூட்டாளி, விளையாட்டிற்குப் பின்னும் ஒரு முறை விளையாடுதல். | **சின் :** ஓர் அசைச் சொல். |
| **சீணம் :** அழிவுறுகை, சோர்வு. | **சீனம் :** ஒரு தேசம், படிக்காரம். |
| **சீணி :** அழிவு. | **சீனி :** சாத்துக்குடி ஆரஞ்சு, சீனிச் சருக்கரை, சேணம், மரநங்கூரம், மரவகை. |
| **சீணித்தல் :** அழிவுறுதல், வலி குறைதல். | |
| **சுணம் :** அழகுதேமல், சுண்ணம். | **சுனம் :** வெள்ளுள்ளி. |
| **சுணை ,** அறிவு, இலைகாய் முதலியவற்றின் மேலுள்ள சிறுமுள், கூர்மை, சுரணை, தினவு, வைசூரி கண்டகாலத்தில் தேகத்தினுள்ளிடமாகத் தங்கும் அம்மைப் பால். | **சுனை :** நீர் நிலை, மலையூற்று. |
| | **சுனைதல் :** குழைதல், வாடுதல். |
| | **சுனைத்தல் :** தினவெடுத்தல். |
| **சுணைவு :** பேய்க்கடலை. | **சுனைவு :** சுனைநீர், பேய்க்கடலை. |
| **சுண்ணம் :** பட்டுவகை, பூந்தாதுத் தூள், பொடி, மலர். | **சுன்னம் :** சுண்ணும்பு, சுழி. |
| **சுவணம் :** பொன். | **சுவனம் :** சொப்பனம். |
| **சென்ணம் :** அழகியவடிவு, நுண் தொழில். | **சென்னம் :** நீர்ப்பறவை வகை. |

**சேணம் :** கலணை, சுவர்க்கம், மெத்தை.

**சேண் :** அகலம், ஆகாயம், உயரம், சுவர்க்கம், சேய்மை, நீளம், நெடுங்காலம், மலைமுகடு.

**சோணம் :** ஒரு நதி, சிவப்பு, பொன்,

**சோணி :** இரத்தம், பலகறை.

**சோணை :** ஒரு நதி, காதினடித் தண்டு, புகையிலை முதலிய வற்றின் காம்பினடி, மண்வெட்டியில் காம்பு சொருகும் அடிப் பகுதி.

**தகண் :** தடை, தழும்பு, பழக்கம்.

**தணி :** குளிர்ச்சி, தேர் நம்புங் கட்டை, மலை.

**தணிதல் :** ஆறுதல், ஒன்றோடொன்று இசைதல், குறைதல், தாமதித்தல், தாழ்தல், திருத்தியாதல், நிறைதல், பருத்தல், வற்றுதல், விளக்கு முதலியன அவிதல்.

**தணித்தல் :** அவித்தல், ஆற்றுதல், குறைத்தல், தண்டித்தல், தாழ்த்துதல், தீர்த்தல்.

**தணிகி :** மேற்பார்வை யிடுகை.

**தணிகை :** திருத்தணிகை எனும் ஸ்தலம்.

**தணிப்பு :** குறைகை, தணிவு.

**தண் :** அருள், குளிர்ச்சி.

**சேனம் :** பருந்து.

**சேன் :** ஒரு பழைய பட்டப்பெயர்.

**சோனம் :** ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்று, மேகம்.

**சோனி :** மெலிந்தவன்-ள், வளர்ச்சி யற்றது.

**சோனை :** கார்மேகம், கைப்பிடிச் சுவர், திருவோணம், மழைச் சாரல், விடா மழை.

**தகன் :** வேர்விட்ட பனங் கொட்டை.

**தனி :** உதவியின்மை, சீட்டாட்டத்தில் எல்லாச் சீட்டையும் ஒருவனே பிடித்தல், தேர் நெம்புந் தடி.

**தனித்தல் :** உதவியற்றிருத்தல், ஏகாந்தமாதல், ஒன்றியாதல், நிகரற்றிருத்தல்.

**தனிகி :** கணக்குச்சோதனை.

**தனிகை :** இளம் பெண், கற்புடையவள்.

**தனிப்பு :** உதவியற்ற நிலை, ஒதுக்கம், ஒப்பின்மை, ஒன்றியாயிருக்குந்தன்மை.

**தன் :** தான் என்ற சொல்லின் திரிபு.



**தண்ணம் :** ஒரு கண் பறை, காடு, குளிர்ச்சி, மழு.

**தவண் :** கடித்த இடத்திலேயே விஷம் தங்குமாறு இடும் சுண்ணம்பு வட்டம் அல்லது கயிற்றுக்கட்டு.

**தாணி :** தான்றி (ஒரு மரம்), பூண்டு வகை.

**தாணித்தல் :** இமையோட்டுதல், உறுதிப்படுத்துதல், சாமர்த்தியமாய்ப் பொய்க்குற்றம் மேற்றுதல், துப்பாக்கி கெட்டித்தல், பதித்தல், மண் முதலிய வற்றைக் கெட்டிப்படுத்தல், விரைவிற் கடைதல்.

**தாணு :** குற்றி, சிவன், தாவரம், தூண், நிலைபேறு, பற்றுக் கோடு, மலை.

**தாணையம் :** கோட்டைக் குள்ளிருக்கும் சேனை, பாளையம், மந்தை.

**திணம் :** வலிமை.

**திணை :** இடம், ஒழுக்கம், குலம், பூமி, வீடு.

**திண்மை :** உறுதி, கலங்கா நிலைமை, பருமன், மெய்மை, வலிமை.

**துணி :** ஆடை, ஒளி, துண்டம், நிச்சயம், மரவுரி.

**துணிதல் :** கிழிதல், தெளிவாதல், தைரியமடைதல், தொடங்குதல், நீங்குதல், நிச்சயித்தல், வெட்டுண்ணுதல்.

**துணித்தல் ;** வெட்டுதல்.

**தன்னம் :** சிறுமை, பசுவின் கன்று, மரக்கன்று, மான்கன்று.

**தவன் :** தவசி, தவம், நாயகன்.

**தானி :** இடத்திலிருப்பது, இருப்பிடம், கொடுப்போம், பண்டசாலை.

**தானு :** காற்று, கொடையாளன், வெற்றியாளன்.

**தானையம் :** கால் நடைகளின் மந்தை.

**தினம்** நட்சத்திரம், நாள், பகல்.

**தினை :** ஒருவகைப்புல், சிறுதானிய வகை, தினைவகை, மிகச்சிறிய அளவு.

**தின்னம் :** சாவு, தீமை, தீயசெயல்.

**துனி :** அச்சம், இடையூறு, குற்றம், கோபம், துன்பம், தோஷம், நதி, நோய், பிரிவு, புலவிநீட்டம், வறுமை, வெறுப்பு.

**துனித்தல் :** கலாய்த்தல், நெடிது புலத்தல், வெறுத்தல்.

**துணை :** அம்பு, அளவு, ஆயுதமுனை, இரட்டை, இரண்டு, உடன் பிறப்பு, உதவி, உதவிபுரிபவன், ஒப்பு, கணவன், காப்பு, புணர்ச்சி, மனைவி, வரை.

**துணைதல் :** ஒத்தல்.

**துணைத்தல் :** ஒத்தல், மாலைமுதலியன கட்டுதல்.

**தூணம் :** அசுபநாள்வகை, அம்புக்கூடு, தூண், பகை, பற்றுக்கோடு, பாத்திரந்தூக்க இடும் கயிற்றுச் சுருக்கு.

**தெண்ணர் :** அறிவிலிகள்.

**நசணை :** தொந்தரவு பிடித்தவன்.

**நணி :** அணிமையான இடம்.

**நண்ணி :** நன்றி.

**நண்ணுதல் :** இருத்தல், கிட்டுதல், செய்தல், பொருந்துதல்.

**நண்பு :** அன்பு, சினேகம், உறவு.

**நாணம் :** இலச்சை, பயபக்தி, வெட்கம்.

**நாண் :** அரைஞாண், கயிறு, மகளிர்க்குரிய கூச்சம், மாங்கலியங்கோத்த சரடு, வில்லின் நாண், வெட்கம்.

**நீண்மை :** பழமை.

**நுணி :** முனை.

**நுணிதல் :** தேய்தல்.

**நுணித்தல் :** கூர்மையாக்குதல், நுணுகி ஆராய்தல், பொடியாக்குதல்.

**துனை :** விரையென்னேவல்.

**துனை-தல் :** விரைதல்.

**தூனம் :** அசைவு, வருத்தம்.

**தென்னர் :** தெற்கு, தென்னாட்டவர், பகைவர், பாண்டிய அரசர்.

**நசனை :** மாணிக்கக் குற்றத் தொன்று.

**நனி :** மிகுதி.

**நன்னி :** சிறியது.

**நன்னுதல் :** பெண்.

**நன்பு :** நன்மை, செவ்வை.

**நானம் :** கஸ்தூரி, கவரிமான், ஞானம், சுத்தமாவதற்காக நீரில் மூழ்குதல், புழுகு, பூசுவன, வாசனைப்பொடி.

**நான் :** தன்மை ஒருமைப் பெயர்.

**நீன்மை :** நீலநிறம்.

**நுனி :** நுண்மை, முனை.

**நுனித்தல் :** குணம், கூராக்குதல், கூர்ந்து நோக்குதல்.



**நுணை :** கோட்சொல்.

**நுணைத்தல் :** தடவித்தெரிதல், நாவால் தடவி யுணர்தல்.

**பட்டணம் :** நகரம்.

**பணம் :** திரவியம், பாம்பு, பாம்பின் படம், பந்தயப்பொருள், பருமை, பழைய சிறு நாணயம், பொற்காசு, வியாபாரச் சரக்கு, விலை, வீடு, வேலை.

**பணர் :** அடர்ந்த கொம்பு, மரக்கிளை.

**பணி :** ஆபரணம், ஈகை, கட்டளை, செயல், சொல், தொண்டு, தொழில், தோற்கருவி, நாகம், பட்டாடை, பணிகை, பாக்கை, பிரயாசமான வேலை, போக்கியப் பொருள், மலர்களால் அலங்கரிக்கை, வகுப்பு, விதி, வேலைப்பாடு.

**பணிதல் :** இறங்குதல், உண்ணுதல், எளிமையாதல், குறைதல், தாழ்ச்சியாதல், தாழ்தல், பரத்தல், பெருமிதமின்றியடங்குதல், வணங்குதல்.

**பணித்தல் :** அருளிச் செய்தல், ஆணையிடுதல், குறைத்தல், கொடுத்தல், தாழ்த்துதல், மிதித்தல்.

**பணை :** அரசமரம், ஐந்தாண்டு கொண்ட அளவு, குதிரையானைதங்குமிடம், சாணைக்கல், தவறுகை, நீர்நிலை, பரண், பருமை, பெருமை, மரக்கொம்பு, மருதநிலம், மருதநிலப்பறை, முரசு, மூங்கில்,

**நுனை :** முனை.

**பட்டனம் :** கடற்கரையில் உள்ள நகரம்.

**பனம் :** பெருமை.

**பனர் :** கிளை.

**பனி :** அச்சம், இனிமையானது, கண்ணீர், குளிர், குளிர்ச்சி, சுரம், துக்கம், துன்பம், நடுக்கம், நீராவி குளிர்ந்து விழும் துளி, நீர், நோய்வகை, பனிக்கட்டி, மஞ்சு, மழை.

**பனை :** அனுஷநாள், ஒரு பேரளவு, ஒரு மீன், மரவகையில் ஒன்று.

வயல். வாத்தியம், விலங்குதுயி லிடம்.

**பணைத்தல் :** செழித்தல், பருத்தல், பிழைத்தல்.

**பண் :** அமைவு, அலங்காரம், இசை, இசைப்பாட்டு,ஓசை, குதிரைக் கலணை, குதிரை முதலிய வற்றின் கதி, கூத்துவகை, தகுதி, தொண்டு, நீர் நிலை, பருவம், யாழ்முதலிய நரம்புக் கருவிகள்.

**பண்ணல் :** எண்வகைக் கலையில் பாடநினைத்தபண்ணுக்கு மாத் திரையறிந்து பாடுகை.

**பண்ணு :** செய்.

**பண்ணுதல் :** அலங்கரித்தல், ஆயத் தம் செய்தல், இசைவாசித்தல், சமைத்தல், சுருதியமைத்தல், செய்தல்.

**பண்ணை :** இசை, ஓடை, சொந்த விவசாயம், தடவை, தொகுதி, தோட்டம், நீர்நிலை, பனந் தோப்புக்குடிசை, பெருங்குடும் பம், மகளிர்கூட்டம், மகளிர் விளையாட்டு, மக்கட்கூட்டம், மரக்கலம், மிகுதி, மருதநிலம், வயல், வாரக்குடி, விவசாயம், விலங்கு துயிலிடம், விலங்கின் மேற் சேணம்.

**பரண் :** காவல்மேடை, மச்சு, மேற்றட்டு.

**பாணம் :** அம்பு, ஆகாசவாணம், செடிவகை, திப்பிலி, பூம்பட்டு.

**பாணல் :** வெற்றிலை.

**பன் :** அரிவாளின் பல், நாணல் வகை, பருத்தி.

**பன்னல் :** ஆராய்தல், குகை, சொல், சொல்லுகை, நெருக்கம், பஞ்சை, பருத்தி.

**பன்னு :** இறுக்கப்படும் வரிப்பணம்.

**பன்னுதல் :** அரிவாளைக் கூராக் குதல், ஆராய்ந்து செய்தல், கொய்தல், நெருங்குதல், பஞ்செஃகுதல், படித்தல், பாடுதல், பின்னுதல், புகழுதல், பேசுதல், வாசித்தல்.

**பன்னை :** கடல் மீன்வகை, சூடன், செடிவகை, தறி.

**பரன் :** அன்னியன், கடவுள், சிவான்மா.

**பானம் :** குடித்தல், பருகுமுணவு, மது.

**பானல் :** கடல், கருங்குவளை, கள்,



**பாணி :** அழகு, அன்பு, இசைப் பாட்டு, இசையுறுப் பாகிய தாளம், இலைச்சாறு, ஊர், ஊர்சூழ்சோலை, கடைத்தெரு, காடு, காலம், கூத்து, கை, சங்கீதம், சருக்கரைக்குழம்பு, சொல், தாமதம், நாடு, நீண்ட காலம், நீர், பக்கம், பழரசம், பறைப்பொது,பூப்பந்தல், நீதி.

**பாணித்தல் :** தாமதித்தல், தாமதப் படுத்தல், நிறைவேற்றுதல், பாவித்தல், பின்வாங்குதல், மதிப்பிடுதல்.

**பாணியம் :** வலம்புரிமரம்.

**பாணு :** பாட்டு.

**பாண் :** இச்சகவார்த்தை, தாழ்ச்சி, பாட்டு, பாணர்சாதி.

**பாண்மை :** தாழ்ச்சி, பாணனின் தன்மை.

**பிணை :** இணைக்கப்படுகை, உடன் பாடு, உத்தரவாதம், கட்டு, புறந்தருகை, பூமாலை, பெண் மான், பொருத்து, விருப்பம், விலங்கின்பெண்.

**பிணைதல் :** செறிதல், சேர்தல், புணர்தல்,

**பிணைத்தல் :** இணைத்தல், கட்டுதல், கைகோத்தல்.

**புணரி :** அலை, ஒலிக்கை, கடல், கரை.

**புணை :** ஆள் ஜாமீன், ஈடு, உதவி, ஒப்பு, தெப்பம், மரக்கலம், மூங்கில், விலங்கு.

குதிரை, வெற்றிலை, மருத நிலம்.

**பானித்தல் :** குடித்தல்.

**பானியம் :** நீர், பருகுமுணவு.

**பானு :** அரசன், அழகு, எசமான், ஒளி, சிறப்புநூல்வகை,சூரியன்.

**பான் :** ஒரு வினையெச்ச விகுதி.

**பான்மை :** குணம், சிறப்பு, தகுதி, நல்வினைப்பயன், பகுதி, முறைமை.

**பினை :** பிசை எனும் ஏவல்.

**பினைதல் :** தொந்தரவு படுத்துதல், பிசைதல்.

**புனரி :** பூடுவகை.

**புனை :** அலங்காரம், அழகு, ஆபரணம், சீலை, நீர், புதுமை, பொலிவு.

**புணைத்தல் :** கட்டுதல்.

**புணையல் :** பிணைப்பு.

**பூணை :** முல்லை நிலம்.

**பேணம் :** பதனம், போஷித்தல், மதிப்பு.

**பேண் :** துலாத்தாங்குமரம், புறந்தரல், விருப்பம்.

**போணம் :** சோறு.

**மணங்கு :** ஆட்டுக்குட்டி, இருவாட்சி, நிறைவகையில்ஒன்று, மடங்கு.

**மணம் :** கூடுகை, நறுநாற்றம், நன்னிலை, மதிப்பு, வாசனைப் பொருள், விவாகம்.

**மணு :** நிறை அளவில் ஒன்று.

**மணை :** ஆசனப்பலகை, தேங்காய்த்துருவலகு, பருத்தியினின்று பஞ்சு பிரிக்கும் கருவி, பலகை, பாதம்வைக்கும் படி, மணமேடை முதலியன, மழுங்கல், மழுங்கலாயுதம், யானைமேல் உள்ள தவிசு, வெட்டுக் கருவியின் அடிக்கட்டை.

**மண் :** அணு, ஒப்பனை, கழுவுகை, சுண்ணச்சாந்து, தரை, புழுதி,

**புனைதல் :** அலங்கரித்தல், ஒழுங்காக அமைத்தல், கட்டுதல், கற்பித்தல், சித்தம்செய்தல், சித்திரமெழுதுதல், சிறப்பித்துக் கூறுதல், சூடுதல், செய்தல்; செய்யுள் அமைத்தல், தரித்தல், முடைதல்.

**புனையல் :** மாலை.

**பூனை :** விலங்குவகை.

**பேனம் :** நுரை.

**பேன் :** தலைமயிரிலுண்டாகுஞ் செந்து.

**போனம் .** அன்னம், உணவு, நிலக்கடம்பு.

**மனங்கு :** தோட்பட்டை, மணங்கு.

**மனம் :** இந்துப்பு, எண்ணம், ஞாபகம், நெஞ்சம், விருப்பம்.

**மனு :** ஓர் அரசன், தருமநூல், மனு, மந்திரம், மனிதன், மனுதர்மசாஸ்திரம், வார்த்தை, விண்ணப்பம்.

**மனை :** இல்வாழ்க்கை, குடும்பம், சூதாடுபலகையின் அறை, நற்றாய், மனைவி, வீடு, வீடு கட்டுதற்குரிய வெற்றிடம்.

**மனைதல் :** சிருட்டித்தல்.

**மன் :** அரசன், உத்திரட்டாதி, இழிவு, ஓர் அசைநிலை, கண



பூவுலகம், மனை, மாட்சிமை, வயல்.

**மண்ணன் :** மந்தன்.

**மண்ணு :** ஒரு மீன்.

**மண்ணி :** மந்தன்.

**மண்ணுதல் :** அலங்கரித்தல், கழுவுதல், செப்பமிடுதல், செய்தல், நீராடுதல், பூசுதல், மூழ்குதல்.

**மண்ணை :** இளமை, காலின் கெண்டைச் சதை, கூர் மழுக்கம், கொடி வகை, பேய், மூடன்.

**மாணம் :** மாட்சிமை.

**மாணல் :** நன்மை.

**மாணவம் :** பதினாறு கோவையுள்ள முத்தாரம்.

**மாணவன் :** படிக்கும் சீடன், பிரமச்சாரி.

வன், தலைவன், பெருமை, மணங்கு, மந்திரம், க்ஷத்திரியன்.

**மன்னன் :** அரசன், எப்பொருட்கு மிறையன், கணவன், தலைவன்.

**மன்னு :** உணவாக உதவும் இனிய பிசின் வகை.

**மன்னி :** தமையன் மனைவி.

**மன்னித்தல் :** குற்றத்தைப் பொறுத்தல்.

**மன்னுதல் :** அடுத்தல், ஆடையைத் தூக்கிப்பிடித்துக்கொள்ளுதல், உறுதிவிடாது முயலுதல், தங்குதல், நிலைபெறுதல், பொருந்துதல், மிகுதல்.

**மன்னை :** கதுப்பு, தொண்டை.

**மானம் :** அபிமானம், அவமானம், பிரமாணம், புலவி, பெருமை, மண்டபம், மாற்றாணி, வலிமை, பட்டணம்படியில் அரைப்படி கொண்ட அளவு, அளவுக் கருவி, அன்பு, ஆகாயம், இலச்சை, ஒப்புமை, கணிப்பு, கற்பு, குற்றம், கௌரவம், சபதம், சவ்வாது.

**மானல் :** இலச்சை, ஒப்பு, சந்தேகிக்கை, மயக்கம்.

**மானவம் :** உபபுராணம் பதினெட்டினுள் ஒன்று.

**மானவன் :** அரசன், சேனைத்தலைவன், பெருமையுடையவன், மனிதன், வீரன்.

**மாணர் :** பகைவர்.

**மாணி :** அழகு, ஆண்குறி, குறள் வடிவம், பிரமச்சாரி.

**மாண் :** குறள்வடிவம், பிரமச்சாரி, மடங்கு, மாட்சிமை.

**மாண்(ணு)தல் :** நன்றுதல், நிறைதல், மிகுதல், மாட்சிமைப்படுத்தல்.

**முணங்கு :** அடக்கம், சோம்பல் முறிப்பு, சோம்பு.

**முணங்குதல் :** அடங்குதல், உள்ளடங்குதல், குரலை அடக்கிப் பேசுதல்.

**முணை :** மிகுதி, வெறுப்பு.

**முணைதல் :** வெறுத்தல்.

**முரண் :** கொடுமை, பகைமை, பெருமை, போர், மாறுபாடு, முருட்டுக்குணம், வலிமை.

**மானர் :** பகைவர், பெண்டிர்.

**மானி :** கர்வமுள்ளவன், கௌரவமுள்ளவன், மாமன்.

**மானித்தல் :** கர்வங்கொள்ளுதல், நாணுதல், பெருமைப்படுத்தல்.

**மான் :** ஒப்பு, ஒருவகை விலங்கு, ஓர் இடைச்சொல், குதிரை, சிங்கம், பெரியோன், மகரமீன், மகரராசி, மலை, மானுடன், விலங்கின்பொது.

**மான்(னு)தல் :** ஒத்தல்.

**மான்தல் :** (மான்றல்) ஐயுறுதல், மயங்குதல்.

**முனங்கு :** ஓரம்.

**முனங்குதல் :** முணுமுணுத்தல், வேதனையாற் புலம்புதல்.

**முனை :** கடலுட் செல்லும் நீண்டு கூரிய தரைப்பாகம், தலைமை, தவம், திரள், துணிவு, நுனி, பகை, பகைப்புலம், போர், போர்க்களம், முகம், முன், வெறுப்பு.

**முனைதல் :** ஊக்கங்கொள்ளுதல், கோபித்தல், பொருதல், மூண்டுநிற்றல், வெறுத்தல்.

**முனைத்தல் :** எதிர்த்தல், காரியத்தில் முற்படுதல், அதிகமாதல்.

**முரன் :** திருமால் வதஞ்செய்த ஓர் அசுரன்.



**மோணம் :** பாம்புப்பெட்டி, பழத்தின் வற்றல்.

**யாண் :** அழகு.

**வணை :** மாட்டுக்கு வயிற்றிலுண்டாகும் ஒரு வகை நோய்.

**வணைதல் ;** வளைதல்.

**வணைத்தல் :** வளைத்தல்.

**வண்ணம் :** அழகு, இசைப்பாட்டு, இயற்கையழகு, இனம், இராகம், ஒப்பனை, கனம், குணம், சந்தப்பாட்டு, சாதி, சாந்துப்பொது, சித்திரமெழுதுதற்குரிய கலவை, சிறப்பு, செயல், நன்மை, நிறம், வகை, வடிவு, மாலை.

**வண்ணி :** வருணி என்பதின் திரிபு.

**வண்ணி-த்தல் :** உவமித்தல், தோத்தரித்தல், புனைந்துரைத்தல், மிகைபடக்கூறுதல், விரித்தல்.

**வண்மை :** அழகு, ஈகை, குணம், புகழ், வாய்மை, வலிமை, வளப்பம்.

**வாணம் :** அம்பு, ஆகாசவாணம் முதலியன, தீ.

**வாணி :** அம்பு, இந்துப்பு, ஓமம், கல்வி, கூத்துவகை, சரசுவதி, சொல், நாதந்தோன்றுமிடம்,

**மோனம் :** மௌனம்.

**யான் :** தன்மை ஒருமைப்பெயர்.

**வனை :** அலங்கரி எனும் ஏவல்.

**வனைதல் :** அலங்கரித்தல், உருவமையச்செய்தல், சித்திரமெழுதுதல்.

**வன்னம் :** எழுத்து, தங்கம், நிறம்.

**வன்னி :** கிளி, குதிரை, நெருப்பு, பிரமச்சாரி, மரவகை, வன்னியன்.

**வன்னித்தல் :** வருணித்தல், வர்ணம் வைத்தல்.

**வன்மை :** ஆற்றல், கடினம், கடுஞ்சொல், கருத்து, கோபம், சொல்லொழுக்கம், பலவந்தம், வலிமை, வல்லெழுத்து.

**வானம் :** அக்கினி, அஸ்திவாரக்குழி, ஆகாயம், உலர்ச்சி, உலர்ந்த காய், உலர்ந்தமரம், சீவனோடிருத்தல், சுவற்றிலுள்ள மாடம், புற்பாய், தேவருலகு, நீர்த்திரை, மரக்கனி, மழை, மேகம், வாசனை.

**வானி :** இடிக்கொடி, ஓமம், காற்றுடிப்பட்டம், கூடாரம், துகிற்கொடி, படை, மேற்கட்டி.

நீர், மனோசிலை.

**வாணிதம் :** கள்.

**வாணிதி :** நாடகக்கணிகை, நாணமற்றவள்.

**வாணியம் :** ஊதியம், வியாபாரம்.

**விடாணி :** கொம்புடைய பிராணி, யானை.

**வெண்ணீர் :** சுக்கிலம். × **வெந்நீர் :** சுடுநீர்.

**வேண் :** விருப்பம், வேணாடு (திருவிதாங்கூரைச் சேர்ந்த தமிழ் நாடு).

**வானிதம் :** நுண்ணிதாயிருக்கும் சருக்கரை.

**வானிதி :** மனோசிலை.

**வானியம் :** மரம்.

**விடானி :** சதுரக்கள்ளி.

**வென் :** வெற்றி. × **வெந்** = முதுகு.

**வேன் :** மிகுதி.



**அர :** பாம்பு.

**அரம் :** அராவுங் கருவி.

**அரவு :** ஆயிலியம், உடைப்படைக்கும் வைக்கோற் பழுதை, ஒலி, தொழிற்பெயர் விகுதி, பாம்பு.

**அரவுதல் :** அரவஞ் செய்தல், வருந்துதல்.

**அரன் :** எப்பொருட்குமிறை, சிவன்.

**அரி :** அரிக்கை, அரிதாளம், அரிகை, அரிசி, அழகு, ஆயுதம், இடைவிடுகை, இந்திரன், இயமன், உட்டுளை, ஒளி, கண், கண்வரி, கட்டில், கடல், கதிர் அறுக்கும் பருவம், கதிர்க்குவியல், கைப்பிடிக்கதிர், கள், காற்று, கிளி, குடியிறை, குதிரை, குற்றம், குரங்கு, கூர்மை, கொடிவேலி, சக்கரம், சத்துரு, சந்திரன், சிவன், சிங்கம், சிங்கராசி, சிலம்பினுட்பரல், சிலம்பு, சூரியன், சோலை, தகட்டுவடிவு, தவளை, திருமால், திருவோணம், தெருச்சந்தி, தேர், நித்திரை, நிறம், நீர்த்திவலை, நெருப்பு, நெல், நெற்கதிர், பச்சை, பன்றி, பனங்கருக்கு, பாம்பு, புகை, பூமாலை, பொன், மக்கள் துயிலிடம், மஞ்சள் நிறம், மரக்காழ், மரகதம், மலை, மூங்கில், மென்மை, வண்டு, வலிமை, விசி.

**அரிதல் :** அறுத்தல், செங்கல் அறுத்தல்.

**அற :** செவ்வையாக, தெளிவாக, மிகவும், முழுதும்.

**அறம் :** அறச்சாலை, சமயம், ஞானம், தகுதியானது, தருமம், தருமதேவதை, நோன்பு, யமன்.

**அறவு :** ஒடிகை, ஒழிகை.

**அறன் :** வேள்வித்தலைவன்.

**அறி :** அறிவு.

**அறிதல் :** அனுபவித்தல், உணர்தல், நிச்சயித்தல், நினைத்தல், பயி

**அரித்தல் :** இடைவிடுதல், இமிசித்தல், கூட்டுதல், கொழித்து எடுத்தல், சங்கரித்தல், சிறிது சிறிதாகக் கவர்தல், துரு முதலியன தின்னுதல், தினவெடுத்தல், நீக்குதல், நீர் அறுத்துச் செல்லுதல், நீரில் கழுவிப் பிரித்தல், படைத்தல், பூச்சி தின்னுதல், மேய்தல்.

**அரிவை :** இருபது முதல் இருபத்தைந்து வயதுக்குட்பட்ட பெண், பெண்.

**அரு :** அட்டை.

**அருமை :** அபூர்வம், இன்மை, எளிதிற் பெறக்கூடாமை, சிறுமை, பிரயாசம், பெருமை.

**அரும்பு :** அணிகளின் அரும்பு வேலை, அரிசி, முகத்தில் தோன்றும் இளமயிர், மொட்டு.

**அரும்புதல் :** தோன்றுதல், முகிழ்த்தல்.

**அரை :** அரசியல், அல்குல், இடை, தண்டு, பாதி, மரத்தின் அடிப்

ஆதல், மதித்தல்.

**அறிவை :** ஞானம்.

**அறு :** இறு, தீர், பாழ்.

**அறுதல் :** இல்லாமற் போதல், கயிறு முதலியன இறுதல், தங்குதல், தீர்தல், நட்புச்செய்தல், பாழாதல்.

**அறுத்தல் :** அரிதல், இடைவிடுதல், இல்லாமற் செய்தல், ஊடறுத்தல், சீரணித்தல், செங்கல் முதலியன அறுத்தல், 'தாலியறுத்தல், நீக்குதல், பங்கிட்டுக் கொடுத்தல், முடிவு செய்தல், வருத்துதல், வழிதோண்டுதல், வெல்லுதல்.

**அறுமை :** ஆறு என்னும் எண், நிலையின்மை.

**அறும்பு :** துஷ்டத்தனம், பஞ்சம்.

**அறை :** அடு, அம்மி, அலை, அறுகை, உள்வீடு, ஓசை, சதுரங்கம்



பாகம், மரவகை, வயிறு.

**அரைகுறை :** முற்றுப்பெருமை.

**அரைதல் :** தேய்தல்.

**அரைத்தல் :** அம்மி முதலியவற்றால் அரைத்தல், அழித்தல், கொட்டைநீக்குதல், தேய்த்தல்.

**இர :** இரவு.

**இரகு :** ஓர் அரசன்.

**இரக்கம் :** ஒலி, தயை, மனவருத்தம், மனவுருக்கம்.

**இரக்கை :** காப்பு, திருநீறு.

**இரங்கல் :** அழுகை, ஒலி, நெய்தல் நிலஉரிப்பொருள், யாழ்நரம்போசை.

**இரங்கு :** இரக்கப்படு எனும் ஏவல்.

**இரங்குதல் :** அழுதல், ஒலித்தல், கருணை செய்தல், பச்சாதாபப் படுதல், பரிதபித்தல், மனமழிதல், யாழொலித்தல்.

**இரத்தல் :** யாசித்தல், வேண்டுதல்.

முதலியவற்றின் கட்டம், சல்லி, சுரங்கம், சொல், திரைச்சீலை, துண்டம், பாத்தி, பாசறை, பாறை, பிரசவவீடு, பெட்டியினுட்பகுதி, மலைக்குகை, மோதுகை, வஞ்சனை, வகுத்த இடம், விடை, வீடு, வெட்டுகை.

**அறைகுறை :** முற்றுப்பெருமை.

**அறைதல் :** அடித்தல், அலை காற்று முதலியன மோதுதல், ஒலித்தல், கடாவுதல், சொல்லுதல், துண்டித்தல், பறை முதலியன கொட்டுதல்.

**இற :** செத்துப்போ எனும் ஏவல்.

**இறகு :** சிறகு, மயிற்பீலி.

**இறக்கம் :** இறங்குகை, இறங்குதுறை, சரிவு, நிலைதவறுகை, மிருகங்கள் செல்லும்வழி.

**இறக்கை :** சிறகு.

**இறங்கல் :** அடைபடுதல், அரசுயிறையின்மை, இறங்குமிடம், நெல்வகை.

**இறங்கு :** கீழிறங்கு எனும் ஏவல்.

**இறங்குதல் :** அடியில் தங்குதல், இழிதல், உட்செல்லுதல், கரைசேர்தல், செல்லுதல், தங்குதல், தாழ்ந்து வணங்குதல், தாழ்வடைதல், நிலைகுலைதல், விலைகுறைதல், விஷம் நோய் முதலியன தணிதல்.

**இறத்தல் :** கடத்தல், கழிதல்,

**இரப்பு :** யாசிக்கை.

**இரவி :** சூரியன், மலை, வாணிகத் தொழில்.

**இரவு :** இராத்திரி, மஞ்சள், யாசிக்கை.

**இரவை :** கோதுமைக் குறுநொய், துப்பாக்கியிலிடும் ஈயச்சன்னம், நுட்பமான பொருள், வயிரம்.

**இரா :** இரவு.

**இராவுதல் :** அரத்தால் தேய்த்தல், உரசுதல், மாறுபடுதல்.

**இரு :** இவ்விடத்தில் தங்கு எனும் ஏவல்.

**இருக்கன் :** பிரமன்.

**இருக்கு :** இருக்குவேதம், வேத மந்திரம்.

**இருத்தல் :** ஆயத்தமாய் இருத்தல், உட்காருதல், உத்தேசித்தல், உளதாதல், உள்ளிறங்குதல், சீவித்தல், நிலைபெறுதல், முல்லை உரிப்பொருள்.

**இருப்பு :** ஆசனம், இருப்பிடம்,

சாதல், நீங்குதல், நெறிகடந்து செல்லுதல்.

**இறப்பு :** அதிக்கிரமம், இறந்த காலம், உயர்ந்த பொருள், போக்கு, மரணம், மிகுதி, மோக்ஷம், வீட்டிறப்பு (கூரை).

**இறவி :** சாவு.

**இறவு :** இரு எனும் மீன், சாவு, தேன்கூடு, நீக்கம், முடிவு.

**இறவை :** இறை கூடை, ஏணி, நீர் இறைக்கும் மரப்பத்தல்.

**இரு :** ஒருவகை மீன்.

**இருவுதல் :** தீயில் வாட்டி மயிர் போக வழித்தல்.

**இறு :** முறி எனும் ஏவல்.

**இறுக்கன் :** உலோபி.

**இறுக்கு :** இறுகல் முடிச்சு, ஒடுக்குகை, கண்டிக்கை.

**இறுக்குதல் :** அழுந்தக் கட்டுதல், இறுகவுடுத்துதல், உள்ளழுத்துதல், உறையச் செய்தல், ஒடுக்குதல்.

**இறுதல் :** கெடுதல், சாதல், தளர்தல், முடிவுறுதல், முறிதல்.

**இறுத்தல் :** அழித்தல், அம்பு முதலியன தைத்தல், உடைத்தல், எறிதல், தங்குதல், முடித்தல், முறித்தல், வடித்தல், வரி முதலியன கொடுத்தல், விடை சொல்லுதல், விளைதல், வீழ்த்துதல்.

**இறுப்பு :** கடன் செலுத்துகை, குடி



குதம், கையிருப்பு, நிலை, பொருள்முதல்.

**இரும்பு :** ஆயுதம், கரும்பொன்.

**இரை :** உண்ட உணவு, ஒலி, நாக்குப்பூச்சி, பறவை விலங்குகளின் உணவு.

**இரைதல் :** ஒலித்தல்.

**இரைத்தல் :** ஒலித்தல், சீறுதல், மூச்சுவாங்குதல், வீங்குதல்.

**இரைப்பு :** இரைச்சல், சுவாசகாச நோய், மூச்சுவாங்குதல்.

**ஈரல் :** தேகத்திலுள்ள ஓர் உறுப்பு.

**உரத்தல் :** எடுப்பாதல், கடுமையாதல், கெட்டியாதல், கொந்தளித்தல், பலத்தல், மிகுதல், முருடாதல்.

**உரப்பு :** அதட்டு, கடினம், பேரொலி, மனத்திண்மை, முருடு.

**உரப்புதல் :** அதட்டியொலித்தல், உரத்து ஒலிக்கச் செய்தல், திரண்டொலித்தல், பயமுறுத்தல்.

வரி, தங்குகை.

**இறும்பு :** அதிசயம், காந்தள், குறுங்காடு, தாமரை, தூறு, மலை.

**இறை :** அரசன், அரசிறை, அற்பம், ஆசனம், இறகு, இறக்கை, உடலுறுப்பின் மூட்டுவாய் மூலை, உயரம், உயர்ந்தோன், கடவுள், கணவன், கை, சிவன், சிறகு, தங்கல், தமையன், தலை, தலைமை, தலைவன், நடுவு நிலைமை, பிரமன், மாமரம், முன்கை, விடை, விரல்வரை, விரலிறை அளவு, வீட்டின் கூரை.

**இறைதல் :** சிதறிப்போதல், வணங்குதல்.

**இறைத்தல் :** சிதறுதல், நிறைத்தல், நீர்பாய்ச்சுதல், நீரை வீசித் தெளித்தல், மிகுதியாகச் செலவிடுதல்.

**இறைப்பு :** நீர் இறைத்தல்.

**ஈறல் :** துக்கம், நெருக்கம்.

**உறத்தல் :** அழுத்துதல், உறிஞ்சுதல், ஒட்டக் கறத்தல், கிள்ளியெடுத்தல், சிறிதாதல், செறிதல், பிளத்தல், முற்றுங் கவர்தல்.

**உறப்பு :** செறிவு.

**உரல் :** இடிக்கும் உரல், இடியப்பம் தேங்குழல் முதலியன பிழியும் அச்சு.

**உரவன் :** அறிஞன், வலியோன்.

**உரவு :** மிகுதல், மனோபலம், வலிமை, விஷம்.

**உரவுதல் :** உலாவுதல், வலியுறுதல்.

**உராவுதல் :** இடம்விட்டுப் பெயர்தல், செல்லுதல், பரத்தல், பரவுதல், வலியுடைதல்.

**உரி :** அரைப்படி, உரிச்சொல், ஒகாத்துமல்லி, தோல், பட்டை.

**உரிஞ்சுதல் :** உராய்தல், தேய்த்தல், பூசுதல்.

**உரிதல் :** ஆடைகளைதல், அபகரித்தல், தோல் முதலியவை கழலுதல்.

**உரித்தல் :** தோல் பட்டை முதலியவற்றைக் கழற்றுதல்.

**உரு :** அச்சம், அட்டை, இசைப்பாட்டு, உடல், உருவமுள்ளது, உளியாற்செய்த சித்திரவேலை, கரு, தாலி முதலியவற்றில் கோக்கும் உரு, தோணி, நிறம், பலமுறை செய்யும் அனுசந்தானம், மான், வடிவு, வடிவழகு, விக்கிரகம்.

**உருக்கு :** உருக்கின பொருள், எஃகு.

**உருக்குதல் :** அழித்தல், இளகிவிழச் செய்தல், மனம் நெகிழ்த்துதல், மெலியச் செய்தல், வருத்துதல்.

**உறல் :** அடைதல், உறவு, பரிசம்.

**உறவன் :** உறவுடையான்.

**உறவு :** உறுகை, சுற்றம், நட்பு, பிரவிருத்தி, விருப்பம்.

**உறுவுதல் :** சோர்தல்.

**உறி :** பண்டம் வைக்கும்பொருட்டுத் தொங்கவிடும் உறி.

**உறிஞ்சுதல் :** உள்ளே யிழுத்தல், மூக்கால் உறிஞ்சுதல், வாயால் உள்ளிழுத்தல்.

**உறிதல் :** உறிஞ்சுதல்.

**உறு :** மிகுதி.

**உறுக்கு :** அதட்டுதல்.

**உறுக்குதல் :** அதட்டுதல், கோபித்தல், தண்டித்தல், தாண்டுதல்.



**உருத்தல் :** அழலுதல, உருவெடுத்தல், ஒத்தல், கோபித்தல், சுரத்தல், தோன்றுதல், மிகுதல், முதிர்தல், முளைத்தல், பெருஞ்சினங் கொள்ளுதல்.

**உருப்பு :** கொடுமை, சினத்தீ, மிகுதி, வெப்பம்.

**உருமு :** அச்சம், இடி.

**உருமுதல் :** கர்ச்சித்தல், முறுமுறுத்தல்.

**உரும்பு :** கொதிப்பு.

**உருவல் :** காதணிவகை.

**உரை :** ஆகமப்பிரமானம், உரைக்கை, எழுத்தொலி, சொல், தேய்வு, பிறருக்குக் கேட்கும்படி செபிக்கும் வாசக செபம், புகழ், பொன், மாற்று, முழக்கம், வியாக்கியானம்.

**உறுதல் :** அடைதல், அனுபவித்தல், அன்புகொள்ளுதல், இருத்தல், உறுதியாதல், ஒத்தல், ஓரிடத்தை அடைதல், சம்பவித்தல், சார்ந்திருத்தல், தங்குதல், தொடங்குதல், நன்மையாதல், நினைத்தல், படுதல், பரிசித்தல், பழுதுபடுதல், பொருந்துதல், மனத்தினிகழ்தல், மிகுதல், வருந்துதல்.

**உறுத்தல் :** ஒற்றுதல், சேர்த்தல், நினைப்பித்தல், பயத்தல், வருவித்தல்.

**உறுப்பு :** அங்கம், அங்கலட்சணம், அவயவம், உடம்பு, காணியாட்சிப்பத்திரம், பாலையாழ்த்திறம், மரக்கொம்பு, மெய்யெழுத்து, மேல்வரிச்சட்டம்.

**உறுமு :** ஏவற்சொல்.

**உறுமுதல் :** உறுமென்று ஒலித்தல், எழும்புதல், முறுமுறுத்தல்.

**உறும்பு :** உலர்ந்த கரம்பை மண்ணின் கூரிய சிறு கட்டி.

**உறும்புதல் :** உறுமு.

**உறுவல் :** துன்பம்.

**உறை :** ஆயுதக்கூடு, ஆடையின் அழுக்கை நீக்கும் உவர் நீர், இருப்பிடம், உணவு, உயரம், உறைமோர், ஒழுகல், ஓரளவு, காணிக்கைப்பொருள், காரம், கிணற்றுறை, துன்பம், தூசி படாதவாறு மூடுகின்ற ஆடையுறை, நீர் முதலியவற்றின் துளி, நீளம், பண்டம் பெய்யும்

**உரைதல் :** தேய்தல், வீணுதல்.

**உரைத்தல் :** தேய்த்தல், பூசுதல், மாற்றறியத் தேய்த்தல், மெருகிடுதல்.

**உரைப்பு :** தேய்ப்பு, மாற்றறியவுரைக்கை.

**ஊரணி (ஊருணி) :** ஊரார் உண்ணுநீர்நிலை.

**ஊரல் :** ஈரம், கிளிஞ்சில், குளுவைப்பறவை, தினவு, தேமல்வகை, நகரல், படர்தாமரை நோய், பசுமை.

**ஊரு :** துன்பம், தொடை.

கூடு, பாம்பின் விஷப்பை, பெருமை, பொருள், போர்வை, மருந்து, மழை, மழைக்காலம், வாணுள், வெண்கலம்.

**உறைதல் :** இறுகுதல், ஒழுகுதல், செறிதல், வசித்தல்.

**உறைத்தல் :** அதட்டுதல், அமுக்குதல், அவமானித்தல், உதிர்தல், ஊன்றுதல், ஒத்தல், சுவையுறைத்தல். தாக்கிப் பயன் விளைத்தல், துளித்தல், மிகுதல், முள்முதலியன உறுத்தல், மோதுதல்.

**உறைப்பு :** அழுத்தம், ஊற்றம், காரம், கொடுமை, சுவைக்கூர்மை, தாக்குகை, மழைபெய்கை, வாய்ப்பு, வேதனை.

**ஊறணி :** ஊற்று, கசிவு நிலம், சேற்று நிலம், வருவாய்.

**ஊறல் :** ஊறுதல், உலோகக் கலப்பு, களிம்பு, சாறு, நீரூற்று, நீர்வற்ருப் பசுமை, மருந்தின் சாரம், வருவாய்.

**ஊறு :** இடையூறு, உடம்பு, உறுகை, காயம், கொலை, துன்பம், நாசம், பரிசம், வல்லூறு.

**ஊறுதல் :** ஊறுகாய்ப் பதமாதல், கசிதல், காயத்தில் ஊன்வளர்தல், நீரூறுதல், பால் முதலியன சுரத்தல், பெருகுதல், மெலிந்தவுடல் தேறுதல், மைமுதலியன ஊறுதல், வாயூறுதல்.



**எரி :** அக்கினிதேவன், இடபராசி, கந்தகம், கார்த்திகை, கேட்டை, நரகம், நெருப்பு, பிரகாசம், புனர்பூசம்.

**எரிதல் :** எரிச்சலுண்டாதல், கோபங்கொள்ளுதல், சுவாலித்தல், துயரமடைதல், பிரகாசித்தல், பொருமைகொள்ளுதல், முதிர்தல்.

**எரித்தல் :** அழற்றுதல், சீரணிக்கச் செய்தல், தீயால் வெந்தழியச் செய்தல், மருந்து முதலியன புடமிடுதல், விளக்கு பந்தம் முதலியன எரித்தல்.

**எரிப்பு :** எரிக்கை, கார்ப்புச்சுவை, நெஞ்செரிப்பு, பொருமை.

**ஏர :** ஓர் உவமவுருபு.

**ஏரான் :** பள்ளிக்கூடத்துக்கு முதல் முதல் வருபவன்.

**ஒருத்தல் :** ஒருசார் விலங்கின் ஆண் பெயர் (பன்றி, புல்வாய், புலி, மரை, உழை, எருமை, கரடி, கராம், கவரி, யானை).

**ஒருவு :** ஆடு, நீங்குகை.

**ஒருவுதல் :** ஒத்தல், ஒழிதல், கடத்தல், தப்புதல், விடுதல்.

**கர :** மறை எனும் ஏவல்.

**கரகரப்பு :** அலைக்கழிப்பு, ஓயாது

**எறி :** அடிக்கை, உதை, குறிப்பாகச் சொல்லுகை, வீச்சு.

**எறிதல் :** அடித்தல், அழித்தல், அறைதல், அறுத்தல், அலையெறிதல், இறையைப் பாய்ந்து எடுத்தல், உண்ணுமல் நீக்கி விடுதல், உதைத்தல், ஒதுக்கிவிடுதல், ஓட்டுதல், காற்று வீசுதல், கொடுக்கால் கொட்டுதல், கொள்ளையிடுதல், சீறுதல், செறுத்தல், தெறித்தல், நுகர்வித்தல், பறித்தல், பொழிதல், முறித்தல், வீசியெறிதல், வெட்டுதல், வெல்லுதல்.

**எறித்தல் :** உறைத்தல், ஒளிவீசுதல், தைத்தல், பரத்தல்.

**எறிப்பு :** கடும்வெயில், பிரகாசம்.

**ஏற :** அதிகமாக, உயர, முழுவதும், முற்பட.

**ஏறுன் :** (ஏற்றுன்) ஏரான்.

**ஒறுத்தல் :** அழித்தல், இகழ்தல், ஒடுக்குதல், கடிதல், குறைதல், தண்டித்தல், வருந்துதல், வெறுத்தல்.

**ஒறுவு :** வருத்தம்.

**கற :** கறத்தல் எனும் ஏவல்.

**கறகறப்பு :** கடித்ததற்கு ஒரு

வேண்டுகை, குரல் கனத்திருக்கை, தொண்டையரிப்பு.

**கரடு :** ஒருவகை முத்து, காற்பரடு, சிறு குன்று, புற்கரடு, மரக்கணு, முருட்டுக்குணம், முருடு, வளர்ச்சியற்றது, யானையின் மதவெறி.

**கரத்தல் :** அடைதல், அழித்தல், கவர்தல், கெடுதல், கொடாதிருத்தல், மறைதல், மறைத்தல்.

**கரப்பு :** கரப்பான் பூச்சி, களவு, மத்து, மறைக்கை, மீன்பிடிக்கும் கூடை பஞ்சரம் முதலியன, வஞ்சகம்.

**கரம் :** இடுமருந்து, உஷ்ணம், ஓலைக்கொத்தின் திரள், ஒளி, கழுதை, கிரணம், குடியிறை, கை, செய்வது, துதிக்கை, நஞ்சு, முழம், விலையேற்றம்.

**கரவு :** களவு, பொய், மறைவு, முதலை, வஞ்சனை.

**கரா :** ஆண்முதலை, முதலை.

**கராளி :** தீக்குணம்.

**கரி ;** அடுப்புக்கரி, கண்ணிடுமை, கரிந்தது, சாட்சி கூறுவோன், சாட்சியம், நஞ்சு, பெட்டைக் கழுதை, மரவைரம், யானை, விருந்தினன்-ள்.

**கரிதல் :** கரியாதல், கருமையாதல், தீய்தல்.

**கரித்தல் :** அசீரண முதலியவற்றால் கண்டத்தில் உறுத்தல், உப்புச் சுவை மிகுதல், உறுத்தல்,

பொருள் நறுமுறுவென்றிருத்தல், கறகறவென்று ஒலித்தல், தொண்டை யறுப்பு, தொந்தரவு செய்தல், மனஸ்தாபம்.

**கறடு :** தாழ்ந்த மதிப்புள்ள முத்துவகை.

**கறத்தல் :** கவர்தல், பால்கொடுத்தல்.

**கறப்பு :** கறத்தல்.

**கறம் :** கொடுமை.

**கறவு :** கப்பம்.

**கறா :** காடையின் குரல்.

**கறாளி :** அடங்காமை.

**கறி :** இறைச்சி, ஒரு நாழிகை நேரம், கடித்துத் தின்னுகை, மரக்கறி, மிளகு.

**கறித்தல் :** கடித்துத் தின்னுதல்.



எரித்துக் கரியாக்குதல், குற்றங் கண்டு குறை கூறுதல், தாளித்தல், வெறுத்தல்.

**கரு :** அஸ்திவாரம், ஆயுதப்பல், இயற்கையறிவு, உட்பொருள், கருப்பொருள், கருப்பம், கறுப்பு, குப்பைமேடு, குழந்தை, குட்டி, நடு, நிமித்தகாரணம், நிறம், ப்ரமாணு, பிறப்பு, முட்டை, முட்டைக்கரு.

**கருக்காய் :** பிஞ்சு, மணிபிடியாத நெல்.

**ருப்பு :** பஞ்சம்.

**கரும்பு :** கரும்பங்கழி, புனர்பூசம்.

**கருவம் :** கரு, செருக்கு.

**கரை :** இடம், எல்லை, கடற்கரை, கிராமப் பெரும் பங்கு, சீலை விளிம்பு, செய்வரம்பு, நீர்க்கரை, பக்கம், வார்த்தை.

**கரைதல் :** அழுதல், அழைத்தல், இளைத்தல், உருகுதல், ஒலித்தல், கரைந்து போதல், கெடுதல், கொண்டுபோதல், சொல்லுதல், தாமதித்தல், பதனழிதல், வருந்துதல்.

**கரைத்தல் :** அழித்தல், அழைத்தல், உருக்குதல், கரையச்செய்தல், நிமிண்டுதல்.

**கறு :** மனவைரம்.

**கறுக்காய் :** இளநீர்க்காயின் கண் பக்கத்திலுள்ள கயிர்.

**கறுப்பு:** அமின், இராகு, கறை, கருமை, குற்றம், தழும்பு, பேய்பிசாசுகள், வயிரக் குற்றத்திலொன்று, வெகுளி.

**கறும்பு :** துன்புறுத்து.

**கறும்புதல் ;** சிறிதுசிறிதாகக் கடித்துத் துண்ணுதல், துன்புறுத்தல்.

**கறுவம் :** வெகுளி.

**கறை :** இரத்தம், இருள், உரல், கறுப்பு நிறம், குடியிறை, குற்றம், நிறம், மாசு, மாதவிடாய், விஷம்.

**கரையான் :** கடற்கரைப் பக்கத்து வாழும் வலைஞன்.

**காரு :** வண்ணான்.

**காரை :** ஆடை, காட்டுச்செடிவகை, காறல் மீன், சுண்ணச்சாந்து, பல்லில் இறுகப்பற்றிய ஊத்தை, பாகல், மருக்காரைச் செடி.

**கிரசம் :** கடிவாளம்.

**கிராய் :** கருஞ் சேற்றுநிலம், புற்கரடு.

**கிராய்த்தல் :** சுவர் முதலியவற்றைத் தேய்த்துத் துலக்குதல்.

**கிரி :** பன்றி, பிணையாளி, மலை.

**குரங்கு :** கொக்கி, முசுமுசுக்கை, வளைவு, வானரம், விலங்கு.

**குரங்குதல் :** இரங்குதல், குறைதல், தங்குதல், தாழ்தல், தொங்குதல், வளைதல்.

**குரத்தி :** ஆசாரியபதவி வகிப்பவள், குருபத்தினி, தலைவி.

**குரம் :** குதிரைக்குளம்பு, தருப்பை, பாகல்.

**குரவன் :** அரசன் குரு தாய் தந்தை தமையன் என்ற ஐங் குரவர்களில் ஒருவர், பிரமன், மந்திரி.

**குரவை :** கூத்துவகையிலொன்று.

**கறையான் :** சிதல் (எறும்பு).

**காறு :** காலவளவு, கொழு, சலாகை.

**காறுதல் :** காறல் சுவையாதல், கோழையை மிடற்றினின்று கொணர முயலுதல், வைரங் கொள்ளுதல்.

**காறை :** ஒருவகை அணி, பூஞ்சாளம், வண்டி, வைக்கோல் முதலியவற்றின் தாள்.

**கிறும் :** குறும்பன்.

**கிறுய் :** புற்கரடு.

**கிறி :** சிறு குழந்தைகளின் கையில் அணியும் பவளவடம், தந்திரம், பொய், மாயம், வழி.

**கிறித்தல் :** மாயஞ்செய்தல்.

**குறங்கு :** கிளைக்கால், கொக்கி, துடை.

**குறத்தி :** குறச்சாதிப் பெண், நிலப்பனை.

**குறம் :** குறச்சாதி, குறத்திப்பாட்டு, குறி.

**குறவன் :** குறிஞ்சிநிலமகன், பாசாங்கு பண்ணுகிறவன், பாதரசம்.

**குறவை :** ஒருவகை மீன்.



**குருகு :** அன்றில் பறவை, கல்லால் வகை, குட்டி, குருக்கத்தி, குருத்து, கைவளை, கோழி, துருத்திவைத்தூதும் கொல்லுலை மூக்கு, நாரை, பறவை விலங்கு முதலியவற்றின் இளமை, பறவை, மூலநாள்.

**குருகுருத்தல் :** நமைத்தல், நெஞ்சை உறுத்தல், வேர்க்குரு உண்டாதல்.

**குருக்கு :** பனை முதலியவை நெருங்கிய தோப்பு.

**குருமை :** நிறம், பெருமை.

**குரை :** இசைநிறை, ஒலி, அசைச்சொல், குதிரை, பரப்பு, பெருமை.

**குறுகு :** சிறிதாகு எனும் ஏவல்.

**குறுகுதல் :** அணுகுதல், குள்ளமாதல், மாத்திரை குறைதல்.

**குறுகுறுத்தல் :** அச்சம் உறுத்திக் கொண்டிருத்தல், தினவுறுதல், மனம் உறுத்திக்கொண்டிருத்தல், வெறுப்புத்தோன்ற முருமுருத்தல்.

**குறுக்கு :** இடுப்பு, குறுக்களவு, சுருக்கம், மாறு, நெடுமைக்கு மாறான அகலம்.

**குறுக்குதல் :** குறையச் செய்தல், சமீபமாதல், சுருக்குதல், நெருங்கச் செய்தல்.

**குறுமை :** அண்மை, குள்ளம், குறுகிய தன்மை, குறைவு.

**குறை :** அரசிறை, ஆற்றிடைக் குறை, இன்றியமையாப் பொருள், எஞ்சியது, உண்ணுதற்குப் பக்குவப்படுத்திய தசை, காரியம், குறைபாடு, குற்றம், சொல்லின் எழுத்துக் குறை, துண்டம், பிரார்த்தனைக் கடன், மனக்குறை, வறுமை, வேண்டுகோள், வேண்டுவது.

**குறைதல் :** அரைகுறையாதல், அழிதல், குறைவுற்று வருந்துதல், சிறுகுதல், தைரியங்குன்றுதல், தோல்வியுறுதல், பற்றுமற்

போதல், மதிப்புத் தாழ்தல், வருந்தி உயிரொடுங்குதல், விலையேறும்படி பண்டம் அருகுதல், வெட்டப்படுதல்.

**குரைத்தல் :** ஆரவாரித்தல், குலைத்தல்.

**குறைத்தல் :** அராவுதல், அறுத்தல், சுருக்குதல், தறித்தல், முகத்தல்.

**குரைப்பு :** ஓசை.

**குறைப்பு :** குறைச்சல், குறைத்தல்.

**கூரல் :** இறகு, பெண்களது தலைமயிர்.

**கூறல் :** சொல்லுதல்.

**கூரை :** இறப்பு (வீட்டின் கூரை), சிறு குடிசை.

**கூறை :** ஆடை, புதுப்புடைவை.

**கொரடா :** குதிரைச் சவுக்கு.

**கொறடா :** குதிரைச்சவுக்கு.

**கொரி :** கன்றின் வாய்ப்பூட்டு.

**கொறி :** ஆடு, மேடராசி.

**கொறித்தல் :** அலப்புதல், சிறிது சிறிதாகப் பொறுக்கி உண்ணுதல், பல்லாலும் அலகாலும் தானியத்தைப் பிரித்துத் தின்னுதல், விட்டு விட்டு ஒலித்தல்.

**கோரம்பு :** தீம்பு.

**கோறம்பு :** ஒருவகை நெற்றியணி.

**கோரை :** ஒருவகைப்புல்.

**கோறை :** சிராய்ந்த காயம், துவாரம், பழுது, மணிபதிக்குங் குவளை.

**சரை :** கிழத்தனம், நரைமயிர், வாழைச்சருகு முதலியவற்றால் அமைக்கும் மூடிவகை.

**சறை :** தாழ்வு, பசுக்கள் ஓசை கேட்டு வருவதற்காக இடையன் இடிப்பில் கட்டும் மணி.

**சரைத்தல் :** கிழத்தனமடைதல், சிரைத்தல்.

**சிருக்கு:** யாகத்தில் உபயோகிக்கும் நெய்த்துடுப்பு.

**சிறுக்கு :** சிறிதாகச் செய் எனும் ஏவல்.

**சிறுக்குதல் :** கோபித்தல், சிறுகச் செய்தல்.



**சிரை :** குரங்கு, நரம்பு.

**சிறை :** அடிமைத்தனம், அடிமையாள், அடைக்கை, அணை, இறகு, கரை, காவல், காவலில் அடைக்கை, சிறைச்சாலை, நீர்நிலை, பக்கம், மதில், வரம்பு.

**சிறைதல் :** நிறங்கெடுதல்.

**சிரைத்தல் :** செதுக்குதல், மயிர் கழித்தல்.

**சிறைத்தல் :** சிறைசெய்தல், நீரைத் தடுத்தல்.

**சுரா :** கள்.

**சுறு :** உடம்பிற்பூக்கும் உப்பு, தேகத்தின் அழுக்கு, மகரமீன், மகரராசி.

**சுருக்கு :** அக்கரை, அடி, ஆடை முதலியவற்றின் மடிப்பு, உலோபம், கட்டு, கண்ணி, குழைச்சு, குழைவு, சுரணை, சுருக்கம், சுருங்குகை, பூமாலை வகை, யாகத்தில் உதவும் நெய்த்துடுப்பு, வில்வம், விரைவு.

**சுறுக்கு :** ஆத்திரம், கடுமை, காரம், கூர்மை, சுருசுருப்பு, விரைவு, விலையின் பிரியம், விலையேற்றம்.

**சுருக்குதல் :** ஆடை பை குடை முதலியன சுருக்குதல், உள்ளிழுத்தல், ஓலை முதலியன அணிதல், கட்டுதல், குறைத்தல், முலாம் பூசுதல்.

**சூரல் :** ஒரு செடி, சுழித்தடிக்கை, பிரம்பு.

**சூறல் :** தோண்டுகை.

**சூரன் :** சூரியன், நாய், நெருப்பு, வீரன்.

**சூறன் :** மூஞ்சூறு.

**சூரை :** ஒருசெடி, ஒரு மீன்.

**சூறை :** ஒருகுருவி, கழுத்தின்பின் குழி, கொள்ளை, சுழல்காற்று, பயிரில் விழும் ஒருநோய், பனிச்சை என்ற மயிர்முடி வகை.

**செரி :** சீரணம்.

**செறி :** நெருக்கம்.

**செறிதல் :** இறுகலாயிருத்தல் எல்லை கடவாதிருத்தல், கலத்தல், குளித்தல், திண்ணமாதல்,

**செரித்தல் :** சீரணமாதல், நிலையாகப் பெறுதல்.

**செரு :** சண்டை, போர்.

**செருத்தல் :** மாட்டு மடி.

**செருப்பு :** ஒரு மலை, பாதரட்சை.

**செருமு :** கனைப்பு.

**செருமுதல் :** அடைத்தல், கனைத்தல், நிரம்புதல், நெருக்கமாயிருத்தல், பதிதல், விக்குதல்.

**சேரல் :** சேரநாட்டரசன்.

**சேரி :** ஊர், தெரு, பறைச்சேரி.

**சொரி :** தினவு.

**சொரிதல் :** உதிர்தல், கொட்டுதல், சுழலுதல், பொழிதல், மழைமுதலியன தொகுதியாக விழு

திரளுதல், நெருங்குதல், புணர்தல், பொருந்துதல், மறைதல்.

**செறித்தல் :** அடக்குதல், அடைத்தல், அடைவித்தல், அணியாக இடுதல், இறுக்குதல், ஏற்காத பொருளை செய்யுளிற் புக விட்டு உரை கூறுதல், சேர்த்தல், சொல்லுதல், திணித்தல், திரட்டுதல், நெரித்தல், பதித்தல், பத்திரமாக வைத்தல், மூழ்குதல்.

**செறு :** குளம், கோபம், பாத்தி, வயல்.

**செறுதல் :** அடக்குதல், அழித்தல், சினத்தல், தடுத்தல், வருந்துதல், வெல்லுதல், வெறுத்தல், வேறுபடுதல்.

**செறுத்தல் :** அடக்குதல், உள்ளடங்கச்செய்தல், கொல்லுதல், கோபித்தல், தடுத்தல், தூர்த்தல், நீர் முதலியன அடைத்தல், நெருக்குதல், வெல்லுதல், வெறுத்தல்.

**செறுப்பு :** கட்டுப்பாடு, கொலை, நெருக்கம்.

**செறுமு :** கனையெனும் ஏவல்.

**செறுமுதல் :** கனைத்தல், தேம்பியழுதல்.

**சேறல் :** செல்லுகை.

**சேறி :** ஒரு மீன்.

**சொறி :** சொறிசிரங்கு, தினவு, மரம் முதலியவற்றில் காணும் சுரசுரப்பு.

**சொறிதல் :** கெஞ்சிக்கேட்டல், தினவுநீங்க நகத்தால் தேய்த்தல்.



தல், மிகக்கொடுத்தல், மிகுதல்.

**தரி :** இரும்பு, நன்செய் நிலம்.

**தரித்தல் :** அணிதல், அடக்கிக்கொள்ளுதல், அருப்புக்கொள்ளுதல், ஊன்றி நிற்றல், தாங்குதல், தாம்பூலம் தின்னுதல், நிலைபெற்று நிற்றல், பொறுத்தல்.

**தரை :** ஆணித்தலை, நிலம், பூமி.

**தரைதல் :** சம்மட்டி சுத்தி முதலியவற்றால் அடித்தல்.

**தாரு :** தேவதாரு, மரம், மரக்கிளை, மரத்துண்டு.

**தாழ்வரை :** மலையடிவாரம்.

**திரக்கு :** கூட்டம்.

**திரக்குதல் :** சுருங்குதல், தேடுதல்.

**திரம் :** உரம், உறுதி, நிலைவரம், பூமி, மலை, முத்தி, வலி.

**திரல் :** ஒருசெடி.

**திரை :** அலை, உடல் தோலின் சுருங்கல், கடல், திரைச்சீலை,

**தறி :** கோடரிவகை, தூண், நடுதறி, நெய்வதற்குரிய யந்திரம், பறையடிக்கும் குறுந்தடி, முளைக்கோல், வெட்டுகை.

**தறிதல் :** அறுபடுதல்.

**தறித்தல் :** கட்டவிழ்த்தல், கெடுத்தல், தானியம் புடைத்தல், பிரித்தல், வெட்டுதல்.

**தறை :** பூமி.

**தறைதல் :** ஆணியை அடித்து இறுக்குதல், ஆணியால் தைத்தல், குற்றப்படுத்துதல், தட்டையாதல்.

**தாறு :** அங்குசம், இரேகை, தாற்றுக்கோலிலுள்ள இருப்பூசி, முட்கோல், வாழைமுதலிய வற்றின் குலை, விற்குதை.

**தாழ்வறை :** நிலவறை.

**திறக்கு :** காரியம்.

**திறம் :** இயல்பு, உடம்பு, உபாயம், ஒழுக்கம், ஓர் இசை, கற்பு, காரணம், குலம், கூட்டம், கூறுபாடு, கோட்பாடு, சார்பு, சாமர்த்தியம், சுற்றம், செய்தி, நிலைபேறு, நேர்மை, பாக்கியம், பாதி, மிகுதி, மேன்மை, வகை, வரலாறு, வலிமை, வழி, விஷயம், வேடம்.

**திறல் :** ஒளி, தைரியம், பகை, போர், வலி, வெற்றி.

**திறை :** கப்பம்.

நதி, பஞ்சுச்சுருள், பூமி, வெற்றிலைச்சுருள், வைக்கோற்புரி.

**திரைதல் :** அலையெழுதல், ஆடையின் நூலிழை விலகுதல், சுருங்குதல், தோல்சுருங்குதல், பால்திரளுதல், மிதந்தாடுதல், மெதுவாதல்.

**திரைத்தல் :** அணைத்தல், ஆடை தொய்தல், ஒதுக்குதல், சுருக்குதல், தன்னுள் அடக்குதல்.

**துரத்தல் :** இருமல், தொண்டைப் புகைச்சல்.

**துரப்பு :** அகற்றுகை, மலையிற் குடையப்பட்டபாதை, முடுக்குகை, விடுகை.

**துரப்புதல் :** தேடுதல்.

**துரம் :** ஒருவாத்தியம், கோயிற் குரிய வரிவசூலிக்கும் உத்தியோக சாலை, சுமை, பொறுப்பு.

**துரவு :** தாது, பாசனத்துக்கு உதவும் பெருங்கிணறு, மணற்கேணி.

**துரை :** ஐரோப்பியன், தலைவன், மிகுதிப்பாடு, வேகம்.

**தூரல் :** துன்பம், நிறைகை.

**தெரி :** அறி.

**துற :** விடு எனும் ஏவல்.

**துறத்தல் :** கைவிடுதல், நீங்குதல், பற்றற்றுத் துறவு பூணுதல்.

**துறப்பு :** திறவுகோல், துறவு, பிரிவு, பூட்டு.

**துறம் :** துறவு.

**துறவு :** இரகசியம், சன்னியாசம், துறவறம், வாய்ப்பானநிலை, விடுகை, வெளியிடம்.

**துறை :** அகமும் புறமும் பற்றிய தமிழ்ப் பொருட்கூறு, ஆறு, இடம், உபாயம், ஒழுங்கு, கடல், கடற்றுறை, சபை கூடுமிடம், சாஸ்திரம், நீர்த்துறை, நியாயவழி, பகுதி, வண்ணான் துணி வெளுக்கும் இடம், வரலாறு.

**தூறல் :** சிறுமழை, பழிச்சொல்.

**தெறி :** அணி அங்கி முதலியவற்றின் கடைப்பூட்டு, குறும்புப் பேச்சு, சிதறுகை.



**தெரிதல் :** அரித்தெடுத்தல், அறிதல், ஆராய்தல், சிரவணஞ் செய்தல், தெரிந்தெடுத்தல், தோன்றுதல், மனமறிதல், விளக்கமாதல்.

**தெரித்தல் :** எழுதுதல், காலங்கழித்தல், கொழித்தல், குறிப்பிட்டு விளக்குதல், சொல்லுதல், தெரிந்தெடுத்தல், பங்கிடுதல், மாறுபடுதல், வெளிப்படுத்துதல்.

**தெரிபடுதல் :** தெரிந்தெடுக்கப்படுதல், தோன்றுதல்.

**தெரிப்பு :** அறிவிப்பு, ஆராய்வு, எழுதுகை, கொழிக்கப்பட்டவை, சீட்டு, சொல்லுகை, பிரிப்பு.

**தெரு :** வழி, வீதி.

**தேரம் :** நேரம்.

**தேரார் :** அறிவீனர், கீழ்மக்கள், பகைவர்.

**தேரை :** கல்லில் ஓடும் கோட்டுக்

**தெறித்தல் :** அறுதல், உடைத்தல், கருவமாயிருத்தல், குலைதல், குறும்பு பண்ணுதல், தவறுதல், தாக்கப்பட்டு வெளிப்படுதல், துளி அல்லது பொறியாய்ச் சிதறுதல், துள்ளுதல், நரம்பு துடித்து நோவுண்டாக்குதல், நீங்குதல், பிதுங்குதல், பிளத்தல், முறிதல், முற்றுதல், விரலால் உந்துதல், விரலால் சுண்டுதல், வேறுபடுதல்.

**தெறிபடுதல் :** அலைந்துலைதல், கலங்குதல், சிதறுண்ணல், தவறுதல், திக்கறுதல், தோற்றோடுதல்.

**தெறிப்பு :** அகந்தை மேலிட்ட ஒழுக்கம், கடைப்பூட்டு.

**தெறு :** அச்சம், கோபம், சுடுகை, துன்பம்.

**தெறுதல் :** அழித்தல், காய்ச்சுதல் கொட்டுதல், கொல்லுதல், கோபித்தல், சுடுதல், தங்குதல், தண்டஞ்செய்தல், நீங்குதல், நெரித்தல், மிகுத்தல், வருத்துதல்.

**தெறுத்தல் :** குவித்தல், நெரித்தல்.

**தேறம் :** மிகுதியாயிருப்பது.

**தேறார் :** அறியாதார், பகைவர்.

**தேறை :** மீன் வகை.

குற்றம், தவளைவகை, தூண்டிலில் உள்ள உணவு, தேங்காய் நோய்வகை, யோகவகையில் ஒன்று.

**நரனை :** பிரண்டைக்கொடிவகை.

**நரா :** கன்றுதல்.

**நருக்கு :** குட்டுகை.

**நருக்குதல் :** குட்டுதல், கொல்லுதல், துண்டாக்குதல், நொறுக்குதல்.

**நரும்பு :** பல்லாற்கடியெனு மேவல்.

**நரும்புதல் :** துண்டாக்குதல், பல்லைக் கடித்தல்.

**நருள் :** ஜனக்கூட்டம்.

**நரை :** இடபராசி, எருது, கவரிமான், சாமரை, நாரை, பறவைவகை, பெருமை, மரத்தினுள் விழும் சொத்தை அல்லது கேடு, மூப்பு, வெண்மை, வெளுத்தமயிர், வெள்ளைக் குதிரை.

**நரைத்தல் :** நிறம் வெளுத்தல், பயிர் வெளிறுதல், மயிர் வெளுத்தல்.

**நாரி :** கள், சேனை, தேன், நன்னரி, பார்வதி, பன்னாடை, பெண், யாழின் நரம்பு, வாசனை, வில்லின் நாணி.

**நிர-த்தல் :** ஒழுங்குபடுத்துதல், கலத்தல், சமபங்கிட்டு அளித்தல், சமாதானப்படுதல், நிரம்புதல், நெருங்குதல், பரத்தல், போதியதாதல்.

**நறனை :** பிரண்டைக் கொடிவகை, மரவகை.

**நறு :** கள், தேன், வாசனை.

**நறுக்கு :** ஓலைச்சீட்டு, துண்டு, நாகசுரத்தின் நாக்கு.

**நறுக்குதல் :** துண்டித்தல், நொறுக்குதல், வெட்டுதல்.

**நறும்பு :** பல்லாற்கடி எனும் ஏவல்.

**நறும்புதல் :** பல்லாற்கடித்தல், பல்லைக் கடித்தல்.

**நறுள் :** மரவகை.

**நறை :** கள், குற்றம், தேன், நறுநாற்றம், நறும்புகை, வாசனைக் கொடிவகை, வாசனைப் பண்டம்.

**நாறி :** கற்றாழை, நன்னாறி.

**நிறத்தல் :** சோபித்தல், நிறம்பிடித்தல், நிறம் முற்றுதல், பயனளித்தல்.



**நிரா :** பழம் முதலியவற்றின் கன்றின நிலை.

**நிருத்தம் :** நடனம், பற்றின்மை, வேதங்களின் சொற்களை ஆராயும் நூல்.

**நிரை :** ஒழுங்கு, கொடிப்படை, கோபுரம், நிரையசை, பசு, படை வகுப்பு, வரிசை, விளையாட்டு வகை.

**நிரைதல் :** ஒழுங்காக்குதல், ஓலை முதலியவற்றை வரிசையாக வைத்து மறைத்தல், திரளாதல், நிரப்புதல், முடைதல், முறைப்படுதல், வரிசையாதல்.

**நிரைத்தல் :** ஒலித்தல், ஒழுங்காய் நிறுத்தல், கோத்தல், சபை கூட்டுதல், தனித்தனியாகச் செல்லுதல், திரளுதல், தொடர்ந்து வருதல், நிரப்புதல், நிறைவேற்றுதல், பரப்புதல்.

**நெரி :** சீலையின் கொய்சகம், சொரசொரப்பு, நெரிவு, புண்புறப்பாடு முதலியவற்றால் கைகால் சந்துகளில் உண்டாகும் புடைப்பு, வியாதிவகை.

**நிறு :** நறு.

**நிறுத்தம் :** செங்குத்தாக நிறுத்துகை.

**நிறை :** அழிவின்மை, அறிவு, ஆசை, எடை, ஏகாக்கிரசித்தம், ஓர் அளவு, கற்பு, தவிசு, நிறுக்கை, நிறுத்துகை, நீதி, நீர்ச்சால், பிரதிக்ஞை, பூர்த்தி, மறைபிறர் அறியாமை, மனதைக் கற்புவழியில் நிறுத்துகை, மனவடக்கம், மாட்சிமை, வரையறை, வலி.

**நிறைதல் :** அமைதியாதல், திருப்தியாதல், நிரம்புதல், மிகுதல், வியாபித்தல்.

**நிறைத்தல் :** திணித்தல், நிரம்பச் செய்தல், பரவச்செய்தல்.

**நெறி :** ஆளுகை, உபாயம், கண் மண்டைக்குழி, குதிரை முதலியவற்றின் நடை, குலம், கோயில், சமயம், சுருள், செய்யுள் நடை, தாழ்ப்பாள், நல்லொழுக்கம், நெறிக்கட்டி, புறவிதழொடிக்கை, மனநிலை, முத்தி, வரிசை, வழி, விளைவு, விதி.

**நெரிதல் :** நிலைகெடுதல், நெருங்குதல், நொறுங்குதல், வளைதல்.

**நெரித்தல் :** குவித்தல், கையால் தானியங்களை நிமிண்டுதல், கைவிரல்களைச் சுடக்குதல், சாமர்த்தியமாய் நடத்துதல், துன்பம் முதலியவற்றால் மகளிர் கைவிரல்களை அழுத்திச் சேர்த்தல், நசுக்குதல், நிலைகெடச்செய்தல், நெருங்குதல், நொறுக்குதல்.

**பரட்டை :** செடி முதலிய தலை பரந்து நிற்றல்.

**பர-த்தல் :** அலமருதல், தட்டையாதல், பரவுதல்.

**பரப்பு :** அளவு, இடவிரிவு, உலகம், கடல், தொகுதி, படுக்கை, மிகுதி, முகடு, வியாபகம்.

**பரப்புதல் :** ஒழுங்கின்றி வைத்தல், நிலைபெறுத்தல், பரவச்செய்தல், பெருகக் கொடுத்தல், விரித்தல்.

**பரம்பு :** இடவிரிவு, உழுத வயலைச் சமப்படுத்தும் பலகை, பரவிய நிலம், மூங்கிற்பாய், வரப்பு.

**பரம்புதல் :** தட்டையாக விரிதல், நிறைதல், பரவுதல்.

**பரவை :** ஆடல், உப்பு, கடல், திடல், தேங்கிநிற்கும் நீர், பரப்பு, பரவல், மதில்.

**பரி :** அன்பு, உயர்ச்சி, கறுப்பு, குதிரை, குதிரைக்கதி, சுமை,

**நெறிதல் :** மயிர் குழற்சியாதல்.

**நெறித்தல் :** கையால் பிடித்து விடுதல், நிமிர்த்துதல், புருவத்தை வளைத்தல், புறவிதழொடித்தல், மயிர் குழலுதல், முறுக்காயிருத்தல்.

**பறட்டை :** ஒரு நிந்தைமொழி, கீரைவகை, செழிப்பற்றது, தூற்றுமயிர்.

**பறத்தல் :** அமைதியற்று வருந்துதல், அவசரப்படுதல், சிதறியொழிதல், பறவை பஞ்சு முதலியன ஆகாயத்தில் செல்லுதல்,வேகமாய்ச் செல்லுதல்.

**பறப்பு :** கவலை, துரிதம், பறக்கை.

**பறம்பு :** பாரியின் நாடு, பாரியின் மலை, மூலை.

**பறம்புதல் :** அடித்தல்.

**பறவை :** அம்மைவகை, அவிட்ட நாள், இறகு, புள், வண்டு.

**பறி :** இறக்கினபாரம், உடம்பு, கொள்ளை, பிடுங்குகை, பனை



செலவு, துலை, பரிசவுணர்வு, பருத்திச்செடி, பாதுகாக்கை, பெருமை, மாயம், வருத்தம், வேகம்.

**பரிதல் :** அஞ்சுதல், அழிதல், அழித்தல், அறிதல், அறுதல், அறுத்தல், இரங்குதல், உதிர்த்தல், ஓடுதல், கடத்தல், காதல் கொள்ளுதல், சார்பாகப் பேசுதல், நீங்குதல், பகுத்தறிதல், பற்றுவைத்தல், பிரிதல், முறிதல், வருந்திக் காத்தல், வருந்துதல், வாங்கிக்கொள்ளுதல், வெளிப்படுதல்.

**பரித்தல் :** அறுத்தல், ஓடுதல், சுமத்தல், சூழுதல், தரித்தல், நிருவகித்தல், பாதுகாத்தல், பொறுக்கியெடுத்தல்.

**பரிவு :** அன்பு, அனுதாபம், இன்பம், குற்றம், பக்குவம், பக்தி, வருத்தம்.

**பரிவை :** ஒருவகை மலர்ச்செடி.

**பருகு :** குடிக்கை.

**பருகுதல் :** உண்ணுதல், குடித்தல், நுகர்தல்.

**பரை :** ஒரு அளவு, சிவசக்தி, சீவான்மா தன் செயலற்றுச் சிவபெருமானது அருள் பெற்று நிற்கும் நிலை.

**பரைச்சி :**

**பாரு :** மரு.

யோலைப்பாய, பொன், மீன் பிடிக்கும் கருவி.

**பறிதல் :** அறுதல், இல்லாமற்போதல், உண்டாதல், எய்யப்படுதல், ஒட்டிப்போதல், ஒலியுடன் வெளிப்படுதல், ஓடிப்போதல், கட்டவிழ்தல், சேகரிக்கப்படுதல், தணிதல், தப்பிப்போதல், தீர்மானப்படாதிருத்தல், தூர நிலையாதல், நிலைபெயர்தல், முன்செல்லுதல், வெளிப்படுதல்.

**பறித்தல் :** அழித்தல், தோண்டுதல், நீக்குதல், பாரம் இறக்குதல், பிடுங்குதல், வலிதிற்கவர்தல்.

**பறிவு :** அதிர்கை, ஒட்டிப்போகை, கழிவு, நிலைபெயர்கை.

**பறிவை :** ஒரு செடிவகை.

**பறுகு :** குள்ளம், சிறுதூறு.

**பறை :** இறகை, ஒரு அளவு, ஒரு பிரபந்தம், குகை, சொல், பறக்கை, பறவை, பறைச்சாதி, முரசு, வட்டம், விரும்பிய பொருள்.

**பறைதல் :** அறைதல், சொல்லுதல், தேய்தல்.

**பறைத்தல் :** சொல்லுதல், நீக்குதல்.

**பறைச்சி :** பறைக்குடிப் பெண்.

**பாறு :** கழுகு, கேடு, பருந்து, மரக்கலம்.

**பாரை :** எரிபடை வகை, கடப் பாரை, செடிவகை, புல் செதுக்குங் கருவி, மீன்வகை.

**பிரத்தல் :** எழுத்திலாவோசை.

**பிரப்பு :** குறுணி அளவுப்பொருளை கொள்ளும் பாத்திரம்.

**பிரி :** புரி, வெருகு.

**பிரிதல் :** கட்டவிழ்தல், நினைத்தல், பருக்கப்படுதல், முறுக்கவிழ் தல், வகைப்படுதல், வசூலித் தல், விட்டுவிலகுதல், வேறுபடு தல்.

**பிரிதி :** உவகை, பட்சம், விருப்பம்.

**பிரித்தல் :** கட்டவிழ்த்தல், பகுத்தல், பங்கிடுதல், பிரியச்செய்தல், முறுக்கவிழ்த்தல், வகுத்தல்.

**பிரை :** உறைமோர், தொழிற்சாலை, பந்தலிட்ட இடம், பயன், பாதி.

**பீரு :** அச்சமுள்ளோன், புருவம்.

**புரணி :** ஊன், சாரமற்றது, தோல்.

**பாறுதல் :** அடிபடுதல், அழிதல், ஒழுங்கற்றுப் பரந்துகிடத்தல், கடத்தல், கிழிபடுதல், சிதறு தல், நிலைகெட்டோடுதல், பொருதல்.

**பாறை :** சிறுதிட்டை, பூமியிலுள்ள கருங்கற்றிரள், மீன்வகை.

**பிறத்தல் :** அச்சம், உடன்பிறந்த வர், உற்பத்தி, சனனம், சாதி, தொடக்கம், நெருக்கம், மகளிர் அணியும் முளைத்தாலி, மயக் கம்.

**பிறப்பு :** அச்சம், உற்பத்தி, சகோ தரம், துவக்கம், நெருக்கம்.

**பிறி :** பங்கிடு எனும் ஏவல்.

**பிறிதல் :** நீங்குதல், பங்குபடுதல், வேறுபடல்.

**பிறிதி :** அற்பம், எதிர், எழுதிச் சேர்த்தல், பகுதி, பதில், மூலம்.

**பிறித்தல் :** பங்குபடுத்தல், வேறு படுத்தல்.

**பிறை :** இளஞ்சந்திரன், மகளிர் தலையணிவகை.

**பீறு :** கிழிவு, குதம்.

**பீறுதல் :** கிழிதல், கிழித்தல், கீறு தல், பிளத்தல்.

**புறணி :** உழும்போது பொடிய காத மண்கட்டி, குறிஞ்சிநிலம்,



**புர-த்தல் :** அனுக்கிரகித்தல், காத் தல், மிகுதியாகக்கொடுத்தல், வணங்குதல்.

**புரம் :** இராசதானி, ஊர், கோயில் மேன்மாடம், சரீரம், திரிபுரம், தோல், நகரம், முன், வீடு.

**புரவு :** அரசனால் அளிக்கப்பட்ட வரியில்லாத நிலம், அரசிறை, ஆட்சியிடம், ஆறுமுதலியவற் றிலிருந்து நீர் பாயும் வயல் நிலம், கொடை, செழுமை, பாதுகாப்பு.

**பூரு :** புருவம்.

**பெருக்கு :** கடல் நீரேற்றம், பெருக் கல் கணக்கு, மிகுதி, வெள் ளம்.

**பெருக்குதல் :** ஓர் எண்ணை மற் றொரு எண்ணால் பெருக்குதல், குப்பை முதலியன கூட்டுதல், நீர் நிரப்புதல், விரியச் செய் தல்.

**பேரு :** கிராமத்தில் நீர்பாய்ச்சு வோனுக்குக் கொடுக்கும் வரி, சமுத்திரம், சூரியன், தீ, பொன்மலை.

தோல், புலால், புறங்கூறுகை, புறம்பானது, மரப்பட்டை, முல்லை நிலம்.

**புறத்தல் :** நீக்குதல்.

**புறம் :** அலர்மொழி, அன்னியம், இடம், இறையிலி நிலம், உடம்பு, காலம், திசை, பக்கம், பட்சபாதம், பின்புறம், புறங் கூற்று, புறக்கொடை (முதுகு காட்டுகை), புறத்திணை, புற நானூறு, மதில், மருதநிலம், முதுகு, வீரம், வெளியிடம்.

**புறவு :** காடு, குறிஞ்சிநிலம், சாகு படி நிலம், முல்லைக்கொடி, முல்லைநிலம், புரு.

**பூறு :** குதம்.

**பெறுக்கு :** பொறுக்கென்னேவல்.

**பெறுக்குதல் :** பொறுக்குதல்.

**பேறு :** அடையத்தக்கது, இரை, தகுதி, நல்லூழ், நன்கொடை, நிலத்தின் அனுபோகவகை, பயன், பெறுகை, மகப் பெறுகை, முகத்தல் அளவை யில் ஒன்றைக் குறிக்கும் சொல், லாபம், புருஷார்த்தம் (தருமம், அருத்தம், காமம்,

**பொரி :** எருமைக்கன்று, கரிந்த காடு, நன்றாகச் சமைக்காத சோறு, பொரிக்கறி, பொரிக்கப்பட்டது, பொரிந்த நெல் முதலியன.

**பொரிதல் :** அலப்புதல், உப்பு முதலியன தரையில் பூத்தல், தீய்தல், படிதல், பொருக்கு வெடித்தல், பொரியாதல், மெல்லென ஒலித்தல், வறுபடுதல், வாணப்பொரி மிகுந்து சொரிதல், விரைவாகப் பேசுதல்.

**பொரித்தல் :** அடைகாத்து குஞ்சு உண்டாக்குதல், கிழங்கு சுடுதல், குறைந்த விலைக்கு விற்றல், தீய்த்தல், புளியில்லாமல் சமைத்தல், பொரியச் செய்தல், போக்குதல், வறுத்தல்.

மோட்சம் எனும் உறுதிப் பொருள்). செல்வம் (புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் ஆகிய பதினாறு வகைப்பட்ட செல்வம்).

**பொறி :** அடையாளம், அறிவு, அனல் துகள், ஆண்குறி, இரேகை, இலக்குமி, இலாஞ்சனை, உத்தம அங்கலட்சணம், எழுத்து, எந்திரம், ஒளி, செல்வம், தந்திரம், தழும்பு, திரட்சி, தேமல், நெற்றிப்பட்டம், பதுமை, பீலி, புள்ளி, பூர்வ புண்ணியம், பொலிவு, மனம், மதில் உறுப்பு, மரக்கலம், மூட்டுவாய், மெய் வாய் கண் மூக்கு செவி என்ற ஐவகை இந்திரியம், வண்டு, வரி, விதி, விருது.

**பொறிதல் :** கலைதல், சரிதல், சறுக்குதல், தீச்சுடர் சிதறுதல், பறிதல், விழப்புகுதல்.

**பொறித்தல் :** அழுந்துதல், இலாஞ்சனையிடுதல், எழுதுதல், கலைத்தல், சித்தரித்தல், தெறித்தல்.



**பொரு :** உவமை, எதிர்த்தடை, ஒப்பு.

**பொருக்கு :** பருக்கை, சேறு முதலியன உலரும்போது மேலே காய்ந்தெழும் ஏடு, மரப்பட்டை.

**பொருதல் :** ஒப்பாதல், கடைதல், சூதாடுதல், தடவுதல், தாக்குதல், பெருக்குதல், பொருந்துதல், போர்செய்தல், மாறுபடுதல், முட்டுதல், வீசுதல்.

**பொருப்பு :** பக்கமலை, மலை.

**மர-த்தல் :** கால் முதலியன உணர்ச்சியில்லாதிருத்தல், பிரமித்தல், விறைத்தல்.

**மரம் :** மரக்கலம், விருட்சம்.

**மரல் :** சிறு செடிவகை.

**மரவை :** மரத்தாலான பாத்திரம்.

**மரி :** புளியமரம்.

**பொறு :** இரு, இங்கேயே அமர் எனும் ஏவல் வினைச்சொல்.

**பொறுக்கு :** அங்குமிங்கும் சிதறிய பொருளை தெரிந்து எடு எனும் ஏவல்.

**பொறுக்குதல் :** அங்குமிங்கும் சிதறிய பொருளை தெரிந்து எடுத்தல்.

**பொறுத்தல் :** அணிதல், இளக்கரம் கொடுத்தல், உத்திரவாதமாதல், உத்திரவாதமேற்றல், சகித்தல், சாந்தமாயிருத்தல், சுமத்தல், தாங்குதல், தாமதித்தல், தோணிதட்டிப்போதல், மன்னித்தல், மாட்டிக்கொள்ளுதல், விலைகொள்ளுதல்.

**பொறுப்பு :** உத்திரவாதம், தகுதி, பாரம், பொறுமை, முக்கியம், முட்டு, வரி.

**மறத்தல் :** அசட்டை செய்தல், அயர்த்தல், ஒழிதல்.

**மறம் :** கெடுதி, கொலைத்தொழில், சினம், பகை, பாவம், போர், மயக்கம், மறவர்குலம், யமன், வலி, வீரம், வெற்றி.

**மறல் :** எழுச்சி, குற்றம், கூத்து வகை, சாவு, பகை, பிணக்கு, போர், மயக்கம், மறதி, மறுக்கை, யமன், வறுமை.

**மறவை :** வன்கண்மையுடையது.

**மறி :** ஆடு குதிரை மான் முதலிய

**மரிதல் :** சாதல்.

**மரித்தல் :** சாதல், நினைத்தல்.

**மரிப்பு :** சாவு.

**மரு :** இடம், மருக்கொழுந்து, மருதநிலம், மலை, வாசனை.

**மருகு :** காட்டுமல்லிகை, மகர வாழை, மருகன்.

**மருகை :** பஞ்சுமூட்டை.

**மருக்கம் :** காற்று, குரங்கு, சரீரம், மருக்கொழுந்து, மிளகு.

**மருத்து :** காற்று, வாதநோய், வாயுதேவன்.

**மருப்பு :** இஞ்சி, பிறைச்சந்திரனது இருகோடு, மரக்கொம்பு,

வற்றின் இளமையும் பெண்மையும், ஆடு, செயல் நடக்கவொட்டாதபடி தடுத்து நிற்றல், மான், மேடராசி.

**மறிதல் :** அறுபடுதல், கிளர்தல், கீழ்மேலாதல், சாதல், சாய்தல், தடைப்படுதல், தள்ளுதல், நிலைகுலைதல், பலகாலுந்திரிதல், மீளுதல், முதுகிடுதல், முறுக்குண்ணுதல், விழுதல்.

**மறித்தல் :** அழித்தல், தடுத்தல், தடுத்தற்குறியாக கையசைத்தல், திருப்புதல், திரும்பச் செய்தல், மேல்கீழாக்குதல்.

**மறிப்பு :** நிறுத்துகை.

**மறு :** அடையாளம், களங்கம், குற்றம், தீமை, பாலுண்ணி, மச்சம், மற்ற.

**மறுத்தல் :** ஆட்சேபித்தல், இல்லாமற்போதல், இல்லையென்னுதல், தடுத்தல், நீக்குதல், வெட்டுதல்.

**மறுகு :** அறுத்ததாளிலிருந்து உண்டாகும் இரண்டாம் விளைச்சல், குறுந்தெரு, தெரு.

**மறுகுதல் :** அரைபடுதல், கொண்டுபோதல், சுழலுதல், சிதைதல், பலகாலுந்திரிதல், மனங்கலங்குதல், வருந்துதல்.

**மறுகை :** தெரு, நுங்கு, மாட்டின் பொதிப்பாரத்தில் பாதியளவு.

**மறுக்கம் :** சுழற்சி, துன்பம், மனக்கலக்கம்.

**மறுத்து :** மறுபடியும், மீள, மேலும்.

**மறுப்பு :** எதிர்க்கை, கண்டனம், மறுக்கை, மறுவுழவு.



விலங்குகளின் கொம்பு, யாழின் உறுப்பில் ஒன்று, யானைக்கொம்பு.

**மரை :** காட்டுமாடு, தவளை, தாமரை, திருகுவகை, மான்வகை.

**மாரன் :** மன்மதன்.

**மாராப்பு :** பெண்கள் தம் மார்பின் மேலிடுஞ் சீலைப்பகுதி.

**மாரி :** கள், துர்க்கை, நீர், புள்வகை, பூராடநாள், மரணம், மழை, மாரிக்காலம், மேகம், வைசூரி, வைசூரிக்குரிய தேவதை.

**முரம் :** கருங்கல்பொடி.

**முரி :** சிதைவு, துண்டு, நொய்யரிசி, முழுதிற் குறைவானது, வளைவு.

**முரிதல் :** ஒடிதல், குணங்கெடுதல், கெடுதல், சிதறுதல், தவறுதல், தளர்தல், தோல்வியுறுதல்,

**மறை :** ஆகமம், இரகசியம், இரண்டாம் உழவு, உபதேசப் பொருள், உபநிஷதம், உருக்கரந்தவேடம், எதிர்மறை, களவுப்புணர்ச்சி, கேடகம், சங்கின் முறுக்கு, சிறைக்கூடம், புகலிடம், புள்ளி, பெண்குறி, மந்திரம், மந்திராலோசனை, மறைக்கை, மறைவிடம், வஞ்சனை, விலக்குகை, வேதம்.

**மறைதல் :** ஒளிந்துகொள்ளுதல், தோன்றுதொழிதல்.

**மறைத்தல் :** ஒளித்தல், தீதுவராமல் காத்தல், மூடுதல்.

**மாறன் :** பகைவன், பாண்டியன்.

**மாறுப்பு :** உத்தரியத்தைத் தோள்களில் மாறியிடுகை.

**மாறி :** இரண்டகஞ் செய்வோன், பண்டமாற்றுவோன், பொன்மாற்று.

**முறம் :** தானியம் முதலியவை புடைக்குங் கருவி, விசாகம்.

**முறி :** இலை, உடைத்த தேங்காயிற் பாதி, உயர்ந்த வெண்கலம், ஓலையால் எழுதிய ரசீது, கொழுந்திலை, சேரி, தளிர், துண்டு, துணி, பத்திரம், பாதி, முருட்டுத்துணி, மூலையிடம்.

**முறிதல் :** அருள்மாறுதல், அழிதல், ஒடிதல், குலைதல், தன்மைமாறுதல், துளிர்த்தல், தோற்

நிலைகெடுதல், நீங்குதல், வளைதல்.

**முரித்தல் :** அழித்தல், ஒடித்தல், தோற்கச்செய்தல், நடத்துதல்.

**முரிப்பு :** திமில், முரிக்கை.

**முருகு :** அகில், அழகு, இளமை, எலுமிச்சை, எழுச்சி, கள், காதணிவகை, திருவிழா, தெய்வம், தேன், பூத்தட்டு, மணம், முருகன், விறகு, வெறியாட்டு, வேள்வி.

**முருகுதல் :** காய்ச்சுதலில் பக்குவம் அதிகமாதல், முதிர்தல்.

**முருக்கு :** கொலை, முள்ளுமுருக்கு மரம்.

**முருக்குதல் :** அழித்தல், உருக்குதல், கரைத்தல், கொல்லுதல், முறித்தல்.

**மோரை :** முகம், முகவாய்க் கட்டை.

**வரம் :** அடைக்கலாங் குருவி, அனுக்கிரகம், ஆசீர்வாதம், எறும்பு, ஒருநிதி, சூழல், தெய்வம் முதலியவற்றால் பெறும் பேறு, மஞ்சள், மேன்மை, விருப்பம், வேண்டுகோள்.

றல், நிலைகெடுதல், பதந்தப்புதல், பயனிலதாதல்.

**முறித்தல் :** ஒடித்தல், கீறுதல், தன்மை மாற்றுதல், நிறுத்தி விடுதல், நெசவுத் தறியில் உண்டை மறத்தல்.

**முறிப்பு :** கடுமை, கர்வம், சிநேகம் மாறுகை, மாற்றுமருந்து.

**முறுகு :** திண்மை.

**முறுகுதல் :** கடுமையாதல், காந்திப் போதல், செருக்குதல், திருகுதல், மிகுதல், மீறுதல், முதிர்தல், விரைதல்.

**முறுக்கு :** அரும்புத்தன்மை, கடுமை, செருக்கு, திரிக்கை, திருகாணியின் சுற்று, நூலுருண்டை, நெரிப்பு, மாவினாற் செய்த பணியாரவகை, மாறுபாடு, மிடுக்கு, வலிப்பு.

**முறுக்குதல் :** ஒடித்தல், கயிறு முதலியன திரித்தல், கைகால்களைப் பிசைந்து தேய்த்தல், சினத்தல், சுழற்றுதல், செருக்குதல், வெற்றிலையுண்ணுதல்.

**மோறை :** முருட்டுத்தனம்.

**வறம் :** கோடைக்காலம், நீரில்லாமை, பஞ்சம், வறண்டபூமி, வறுமை, வற்றுகை.



**வரவு :** உற்பத்தி, வணங்குகை, வரலாறு, வருகை, வருவாய், வழி.

**வரன் :** கடவுள், கணவன், சிறந்தவன், தமையன், மணமகன்.

**வருமை :** மறுபிறப்பு.

**வரை :** அளவு, இடம், எல்லை, எழுத்து, ஏற்றத்தாழ்வு, கல், காலம், கோடு, சிறுவரம்பு, நீர்க்கரை, நோக்குகை, பரியந்தம், பக்கமலை, மலைச்சிகரம், மூங்கில், விரலிறையளவு, ரேகை.

**வரைதல் :** அடக்குதல், அளவுபடுத்துதல், எழுதுதல், கைவிடுதல், சித்திரமெழுதுதல், தனக்குரியதாக்குதல், தாரதம்மியப்படுத்துதல், நியாய வழியிற் சம்பாதித்தல், நிர்ணயித்தல், மணஞ்செய்தல், விலக்குதல்.

**வாரு :** அள்ளு என்னும் ஏவல்.

**வாருதல் :** அரித்தல், அள்ளுதல், ஆவலோடு கொள்ளுதல், ஓலையை எழுதுதற்குரிய இதமாகச் செம்மை செய்தல், கவர்தல், கொழித்தல், திருடுதல், தொகுத்தல், தோண்டியெடுத்தல், பூசுதல், மயிர் முதலியன சீவுதல், மிகுதியாகக் கொண்டுசெல்லுதல், யாழ் நரம்பைத் தடவுதல்.

**விரகு :** உபாயம், உற்சாகம், சாமார்த்தியம், தந்திரம், பண்ணியாரம், விவேகம்.

**வறவு :** கஞ்சி.

**வறன் :** வற்றுகை.

**வறுமை :** தரித்திரம், திக்கற்ற தனிமை, துன்பம், வெறுமை.

**வறை :** பொரிக்கறி.

**வாறு :** அடையத்தக்கபேறு, வலிமை, விதம்.

**விறகு :** எரிக்குங் கட்டை, சமிதை.

**விரல் :** கைகால்களினிறுதியில் ஐந்தாகப் பிரியும் உறுப்பு.

**விராய் :** தளவாடம், பூச்செடி வகை, விறகு.

**விரை :** கலவைச்சாந்து, நறும் புகை, பூந்தேன், மலர், வாசனை, விதை.

**விரைதல் :** அவசரப்படுதல், ஆத்திரங் காட்டுதல், மனங்கலங்குதல், வேகமாதல்.

**விரைத்தல் :** பரவச்செய்தல், மணங் கமழ்தல், மரத்துப்போதல், விதைத்தல்.

**விரைப்பு :** நடுக்கம், விதைப்பு.

**வீராப்பு :** கருவம்.

**வெரு :** அச்சம்.

**விறல் :** உள்ளக் குறிப்புப் பற்றி உடம்பிற்றோன்றும் வேறுபாடு, பெருமை, வலி, விசேடம், வீரம், வெற்றி.

**விறல்(லு)தல் :** கோபத்தோடு எதிர்த்துச் செல்லுதல்.

**விறுய் :** செருக்கு.

**விறை :** நடுங்கு எனும் ஏவல்.

**விறைதல் :** குளிர் முதலியவற்றால் நடுங்குதல்.

**விறைத்தல் :** கர்வங்கட்டுதல், பிரமித்தல், மரத்துப்போதல்.

**விறைப்பு :** கர்வங்காட்டுகை, நடுக்கம், பிரமிப்பு, விறைத்துப் போகை.

**வீறுப்பு :** இறுமாப்பு.

**வெறு :** நீக்கு எனும் ஏவல்.

**வெறுத்தல் :** அருவருத்தல், கோபித்தல், துன்பமுறுதல், பகைத்தல், பற்றுவிடுதல், மிகுதல், விரும்பாதிருத்தல்.



## ல்

**அகலம் :** ஆகாயம், குறுக்களவு, பரப்பு, பூமி, பெருமை, வித்தாரக் கவி, விருத்தியுரை.

**அகலி :** அகலிகை.

**அகல் :** ஓர் அளவு, சட்டி, பெருமரம், விளக்குத் தகழி, வெள்வேல்.

**அகல்தல் :** கடத்தல், நீங்குதல், பிரிதல், விசாலித்தல், விருத்தியடைதல்.

**அடலை :** சாம்பல், சுடுகாடு, துன்பம், போர்.

**அட்டாலை :** காவற் பரண், மேல்வீடு.

… …

**அமலை :** ஆரவாரம், கடுக்காய், செறிவு, சோறு, சோற்றுத்திரளை, தேவி, பட்டவேந்தனைச்சூழ்ந்து நின்று வீரர் திரண்டு

## ழ்

… …

**அகழி :** கோட்டையைச் சூழ்ந்துள்ள கிடங்கு, வாயகன்ற பாத்திரம்.

**அகழ் :** அகழி, குளம்.

**அகழ்தல் :** அடியோடு களைதல், தோண்டுதல், பிடுங்குதல்.

… …

… …

**அதழ் :** இதழ்.

… …

## ள்

**அகளம் :** சாடி, நிஷ்களம், நீர்ச்சால், யாழின்பத்தர்.

**அகளி :** தாழி.

… …

… …

**அடளை :** கடல் மீன்வகை.

**அட்டாளை :** மேல்மாடி.

**அதள் :** தோல், மரப்பட்டை.

**அமளை :** கடுகுரோகணி, மரவகை.

| | | |
|---|---|---|
| ஆடுமாட்டம் அல்லது பாடும்பாட்டு, மிகுதி. | | |
| ... ... | ... ... | **அள :** நெல் முதலியன அளவெனும் ஏவல். |
| **அலகம் :** ஆனைத்திப்பிலி. | ... ... | **அளகம் :** நீர், பன்றிமுள், பெண்மயிர், மயிர்க்குழற்சி. |
| **அலகு :** அகலம், அளவு, அளவு கருவி, ஆண்பனை, ஆயுதம், ஆயுதத்தின் அலகு, இலட்சம் பாக்கு, எண், கூர்மை, கைம்மரம், செந்துக்களின் கொடிறு, தாடை, துடைப்பம், நுளம்பு, நூற்பாவினலகு, நெற்கதிர், பலகறை, பறவை மூக்கு, பொன்னைங் காணி, மகிழம்விதை, மணி (நெல்). | **அழகு :** கண்ட சருக்கரை, சிறப்பு, சுகம், சௌந்தரியம், நூல், வனப்பு. | **அளகு :** கார்த்திகை, கோட்டான் கோழி மயில் இவற்றின் பெண், சேவல். |
| **அலகை :** காட்டுக் கற்றாழை, பேய், பேய்க்கொம்மட்டி. | ... ... | **அளகை :** அளகாபுரி. |
| **அலக்கு :** தனிமை, துறட்டி. | **அழக்கு :** ஆழாக்கு. | ... ... |
| **அலத்தல் :** துன்பமுறுதல், வறுமைப்படுதல். | ... ... | **அளத்தல் :** அளவளாவுதல், அளவிடுதல், எட்டுதல், கருதுதல், கலத்தல், கொடுத்தல், பிரமானங் கொண்டறிதல், வரை |



| | | |
|---|---|---|
| | | யறுத்தல், வீண்பேச்சுப் பேசுதல். |
| **அலத்தி :** மின்மினி. | ... ... | **அளத்தி :** நெய்தல் நிலப் பெண். |
| **அலப்பு :** மனக்கலக்கம். | ... ... | **அளப்பு :** அலப்புகை, அளக்கை, ஆராய்ந்தறிகை, எல்லை, முறுமுறுக்கை. |
| **அலப்புதல் :** பிதற்றுதல், வீண்பேச்சுப்பேசுதல். | ... ... | ... ... |
| **அலமருதல் :** அசைதல், அஞ்சுதல், சுழலுதல், வருந்துதல். | ... ... | **அளமருதல் :** அலமருதல். |
| **அலம் :** கலப்பை. | ... ... | **அளம் :** உப்பளம், களர் நிலம், செறிவு, நெய்தல் நிலம். |
| **அலம்பல் :** அலக்குத்தடி, ஆரவாரம், உபத்திரவம், கழுவுதல், ததும்பல், பலர் வாய்ப்படல். | ... ... | **அளம்பல் :** வெடங்குறுணி (ஒரு கொடி). |
| **அலவன் :** கர்க்கடராசி, சந்திரன், நண்டு, பூனை. | ... ... | **அளவன் :** சோரபாஷாணம், தானியம் அளப்பவன். |
| **அலவு :** மனத்தடுமாற்றம். | ... ... | **அளவு :** சமயம், ஞானம், தன்மை, தருக்கப்பிரமாணம், தாளத்தில் மூன்று மாத்திரைக் காலம், நிலவளவு, பரிமாணம், மட்டும். |

**அலவுதல் :** சிந்துதல், வருந்துதல்.

**அலவை :** விடாது பிதற்றுபவன், விபசாரம்.

**அலறு :** உரக்கக்கத்து எனும் ஏவல்.

**அலறுதல் :** உரத்தழுதல், மாடுமுதலியன கத்துதல், மிக்கொலித்தல், வருந்துதல், விரிதல்.

**அலாவு :** சுரை.

... ...

**அலி :** ஆண்பெண் அல்லாதது, சோறு, நறுவிலி, நெருப்பு, பலராமன், யமன்.

... ...

... ...

... ...

**அழறு :** சேறு.

... ...

... ...

... ...

**அழி :** இரக்கம், கிராதி, கெடு, வைக்கோல், வைக்கோலிடுங்கிராதி.

**அழிதல் :** சிதைவுறுதல், செலவாதல், தவறுதல், தோற்றல், நாசமாதல், நிலைகெடுதல், பரிவுகூர்தல், பெருகுதல், மனம்

**அளவுதல் :** உசாவுதல், கலத்தல், கலப்புறுதல்.

**அளவை :** அளவைக் கருவி, அறிகுறி, எல்லை, சமயம், தன்மை, நாள்.

**அளறு :** காவிக்கல், குழம்பு, குழைசேறு, நரகம், நீர்.

**அளறுதல் :** சிதறிவெடித்தல், நெரிதல், பிளத்தல்.

**அளாவு :** உசாவு எனும் ஏவல்.

**அளாவுதல் :** உசாவுதல், கலத்தல், கையால் அளைதல், சென்று பொருந்துதல்.

**அளி :** அன்பு, அன்புகாரணத்தால் தோன்றும் அருள், ஆசை, உபசாரம், எளிமை, காய், கிராதி, குளிர்ச்சி, கொடை, மது, மாட்டுக்காடி, வண்டு.

**அளிதல் :** அறக்கனிதல், கலத்தல், குழைதல், பிரியமாயிருத்தல்.



... ...

... ...

**அலை :** கடல், கொலை, நீர்த்திரை, மிகுதி, வருத்துகை.

**அலைதல் :** அசைதல், தள்ளாடுதல், திரிதல், வருந்துதல்.

**அலைத்தல் :** அசைத்தல், அடித்தல், அலையச்செய்தல், அலைமோதுதல், உருட்டுதல், நிலைகெடுதல், வருத்துதல்.

**அலைப்பு :** அசைக்கை, வருத்தம்.

**அல் :** அந்திவேளை, ஆண்பாற் பெயர் விகுதி, இரா, இருள், உடன்

உடைதல், மனம் உருகுதல், வருந்துதல்.

**அழித்தல் :** உள்ளத்தை மாற்றுதல், கலைத்தல், குலைத்தல், கெடுதல், சங்கரித்தல், செலவழித்தல், தடவுதல், நீக்குதல், மறப்பித்தல்.

**அழித்து :** மாறுபாடாய், மீட்டும்.

**அழை :** அழுகை, கூப்பிடு எனும் ஏவல்.

... ...

**அழைத்தல் :** கதறுதல், கூப்பிடுதல், பெயரிட்டுக் கூப்பிடுதல், வரவழைத்தல்.

**அழைப்பு :** கூப்பிடுகை, பொருள்புணரா வோசை.

... ...

**அளித்தல் :** அருள் செய்தல், ஈனுதல், காத்தல், கொடுத்தல், செறித்தல், சிருட்டித்தல், சொல்லுதல், சோர்வை நீக்குதல், விருப்பமுண்டாக்குதல்.

**அளித்து :** அளிசெய்யத் தக்கது.

**அளை :** குகை, தயிர், புற்று, பொந்து, மோர், வெண்ணெய்.

**அளைதல் :** அனுபவித்தல், கலத்தல், கூடியிருத்தல், தழுவுதல், துளாவுதல்.

... ...

... ...

**அள் :** அள்ளப்படுவது, அள்ளுமாந்தம், செறிவு, நீர்முள்ளி, பற்றிரும்பு,

| | | |
|---|---|---|
| பாட்டு வியங்கோள் விகுதி, எதிர்காலத் தன்மை ஒருமைவிகுதி, எதிர்மறைக் குறிப்பு வினைப்பகுதி, ஒரு சாரியை, தொழிற் பெயர் விகுதி, மயக்கம், மெய்யெழுத்து. | ... ... | பூட்டு, பெண்பால்விகுதி, வன்மை, வண்டி வில் லேத் தாங்கும் கட்டை. |
| **அல்லல் :** துன்பம். | ... ... | **அள்ளல் :** ஏழுநரகத்தொன்று, சேறு, நெருக்கம். |
| **அல்லி :** அகவிதழ், ஆம்பல், காயா இளம்வேர், தாமரை, பூந்தாது, வெள்ளாம்பல். | ... ... | **அள்ளி :** வெண்ணெய். |
| ... ... | ... ... | **அள்ளு :** கூலியாகக்கையால் அள்ளிக் கொள்ளும் தானியம். |
| **அல்லுதல் :** பின்னிக்கொள்ளுதல், முடைதல். | ... ... | **அள்ளுதல் :** ஏற்றுதல், கையால் முகத்தல், செறிதல், நுகர்தல், வாரிக் கொண்டுபோதல். |
| **அல்லை :** ஒருகொடி. | ... ... | **அள்ளை :** பேய். |
| **அவலம் :** அழுகை, கவலை, குற்றம், சோகரசம், தரித்திரம், துன்பம், நோய், பயன்படாது ஒழிவது, பலவீனம், **மாயை.** | ... ... | **அவளம் :** தீமை. |



| | | |
|---|---|---|
| **அவல் :** குளம், நெற்பொரி யிடியல், பள்ளம், விளைநிலம். | ... ... | **அவள் :** அவனுக்குப் பெண்பால். |
| **ஆகுலி :** சிற்றரத்தை, துன்பம். | ... ... | **ஆகுளி :** ஒருவகைச் சிறுபறை. |
| **ஆலம் :** அகலம், ஆகாசம், கடல், கருமை, கலப்பை, நஞ்சு, நீர், மரவகை, மலர், மழை. | **ஆழம் :** ஆழ்ந்த கருத்து, **ஆழ்ந்திருக்கை.** | ... ... |
| **ஆலல் :** ஒலி, மயிற்குரல். | **ஆழல் :** கறையான். | ... ... |
| **ஆலி :** ஆலங்கட்டி, கள், காற்று, தலைப்பெயல் மழை, பூதம், மழைத் துளி. | **ஆழி :** ஆஞ்ஞா சக்கரம், கடல், கடற்கரை, கட்டளை, கணவனைப் பிரிந்த மனைவி இழைக்குங் கூடற்சுழி, குயவன் திகரி, சக்கரம், சக்கராயுதம், செடிவகை, யானைக்கைநுனி. | **ஆளி :** ஆள்வோன், கிளிஞ்சில் வகை, சிங்கம், செடிவகை, யானையாளி. |
| **ஆலித்தல் :** ஒலித்தல். | **ஆழித்தல் :** ஆழமாய்த்தோண்டுதல். | ... ... |
| **ஆலை :** கரும்பாலை, கரும்பு, கள், சாலை, யானைக் கூடம். | ... ... | **ஆளை :** அறுகம்புல். |
| **ஆல் :** அகற்சட்டி, ஆமெனல், கார்த்திகை, நஞ்சு, நீர், மரவகை, வெள்ளம். | **ஆழ் :** மூழ்கு எனும் ஏவல். | **ஆள் :** ஆண்மகன், ஆள்மட்டம், ஊழியன், கணவன், காலாள், சமர்த்தன், தொண்டன், வீரன், ஆட்சிசெய்கை. |

| ல | ழ | ள |
|---|---|---|
| ... ... | **ஆழ்தல் :** அகழ்தல், அழுந்துதல், ஆழமாதல், சோம்புதல், பதிதல், மூழ்குதல், வருந்துதல், விழுதல். | **ஆள்தல் :** அடக்கியாளுதல், அரசு செய்தல், ஆட்கொள்ளுதல், கைக்கொள்ளுதல், வழங்குதல். |
| ... ... | **ஆழ்வார் :** சுவாதி, பகவத் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுவோர். | **ஆள்வார் :** ஸ்வாமி. |
| **ஆவலி :** அழுகை. | ... ... | **ஆவளி :** வமிச பரம்பரை, வரிசை. |
| **இகல் :** அளவு, சிக்கு, பகை, புலவி, போர், வலிமை. | **இகழ் :** இகழ்ச்சி. | ... ... |
| **இகல்தல் :** ஒத்தல், போட்டி போடுதல், மாறுபடுதல். | **இகழ்தல் :** அசாக்கிரதையாதல், அவமதித்தல், மறத்தல். | ... ... |
| **இதல் :** கவுதாரி, சிவல். | **இதழ் :** உதடு, கண்ணிமை, கதவின் இலை, சாதிபத்திரி, பனையேடு, பாளை, புத்தகத்தின் தாள், பூவின்தோடு, மாலை. | **இதள் :** பாதரசம். |
| **இலவு :** தேற்றுமரம், மரவகை. | **இழவு :** எச்சில், கேடு, சரமகிரியை, சாவு, தொந்திரவு, நஷ்டம், வறுமை. | ... ... |
| **இலி :** இல்லாதவன். | **இழி :** இறங்கு எனும் ஏவல். | **இளி :** இகழ்ச்சி, இகழ்ச்சிக்குறிப்பு, குற்றம், சிரிப்பு, நகை, பஞ்சமசுரம். |
| ... ... | **இழிதல் :** இழிவுபடுதல், இறங் | **இளிதல் :** இகழப்பட்டு எளிய |



| ல | ழ | ள |
|---|---|---|
| | குதல், தாழ்தல், பிரவேசித்தல், வெளிப்படுதல். | ளுதல், இணங்குதல், உரித்தல். |
| ... ... | **இழித்தல் :** இறக்குதல், நிந்தித்தல். | **இளித்தல் :** அவமதித்தல், பரிகசித்தல், பல்லைக்காட்டுதல். |
| ... ... | **இழிவு :** இகழ்ச்சி, குறைவு, குற்றம், கேடு, தாழ்வு, தீட்டு, பள்ளம். | **இளிவு :** அருவருப்பு, இகழ்ச்சி, இழிதகவு. |
| **இலை :** அணிகளின் இலைத்தொழில், ஆயுதவலகு, கதவின் இலை, சக்கரத்தின் ஆர், பச்சிலை, படலைமாலை, பூவிதழ், மரஞ்செடிகளின் இலை, வெற்றிலை. | **இழை :** ஆபரணம், கையிற் கட்டுங் காப்பு, நூல், நூலிழை, மாதரணி, வடம். | **இளை :** இளமை, கட்டுவேலி, காவற்காடு, தலைக்காவல், பூமி, மேகம். |
| ... ... | **இழைதல் :** உராய்தல், உள்நெகிழ்தல், கூடுதல், சோறு குழைதல், நூற்கப்படுதல், நெருங்கிப் பழகுதல், பிணைதல், மூச்சுச்சிறுகுதல், மனம் பொருந்துதல். | ... ... |
| **இலைத்தல் :** அரோசித்தல், சுவைகுறைதல், சோர்தல், தன்மைகுன்றுதல், பச்சை நிறமாதல். | **இழைத்தல் :** அமைத்தல், இழையாக்குதல், கூறுதல், சங்கற்பித்தல், சூழ்தல், செதுக்குதல், செய்தல், திரட்டிவைத்தல், நிமிண்டுதல், நுண்ணிதாக ஆராய்தல், நுண் | **இளைத்தல் :** ஏழ்மைப்படுதல், சோர்தல், பின்னடைதல், மெலிதல், வளங்குறைதல். |

| ல | ழ | ள |
|---|---|---|
| | பொடியாக்குதல், நூற்றல், பஞ்சு முதலியன ஆய்ந்து எடுத்தல், பதித்துச் செய்தல், பின்னுதல், மா முதலியன மெதுவாக்குதல், மாத்திரை முதலியன இழைத்தல், மூச்சிரைத்தல், வரைதல், விதித்தல். | |
| **உலகு :** உலகம். | ... ... | **உளகு :** கிராம வொழுகு, (நிலக்கணக்கு), யாழின் தண்டு. |
| **உலங்கு :** கொதுகு, திரண்டகல். | ... ... | **உளங்கு:** கிராமவொழுகு. |
| **உலத்தல் :** அழிதல், கழிதல், குறைதல், சாதல், நீங்குதல், முடிவுபெறுதல். | **உழத்தல் :** பழகுதல், பிரயாசப்படுதல், வருந்துதல், வெல்லுதல். | ... ... |
| **உலப்பு :** ஒழிபு, கேடு, சாவு. | **உழப்பு :** உற்சாகம், பழக்கம், மனச் சஞ்சலம், முயற்சி, வருத்தம், வலிமை. | **உளப்பு :** நடுக்கம். |
| **உலப்புதல் :** அலப்புதல், ஆர்த்தல். | **உழப்புதல் :** காலங்கடத்துதல். பேர்லிவாதஞ் செய்தல், வார்த்தையால் மழுப்புதல். | ... ... |
| **உலம் :** கற்றிரள், திரண்டகல். | ... ... | **உளம் :** மனம், மார்பு. |



| ல | ழ | ள |
|---|---|---|
| **உலம்புதல் :** அலப்புதல், பேரொலி செய்தல். | **உழம்புதல் :** குழம்புதல், பலவோசை கலந்து ஒலித்தல். | **உளம்புதல் :** அலைத்தல், சத்தமிடுதல். |
| **உலிர்தல் :** காய்தல், வாடுதல். | **உழர்தல் :** கோதிவகிர்தல், புரளுதல், வருத்தமாற்றுதுபுரளுதல். | **உளர்தல் :** அசைதல், அசைத்தல், உறுதியற்றுடுதல், கலக்குதல், கோதுதல், சிதறுதல், சுழலுதல், தடவுதல், தாமதித்தல், தலை ஆற்றுதல், யாழ் முதலியன வாசித்தல். |
| **உலவு :** உலாவு எனும் ஏவல். | **உழவு :** உழுந் தொழில், படைச்சால். | **உளவு :** இரகசியம், இரகசியத்திலறிந்த செய்தி, உபாயம், உள்ளத்தன்மை, ஒற்றன், வேவு. |
| **உலவுதல் :** சஞ்சரித்தல். | ... ... | ... ... |
| **உலறல் :** காய்தல். | ... ... | **உளறல் :** குழறுபடையான மொழி, பேரொலி. |
| ... ... | ... ... | **உளறு :** தடுமாறிப்பேசு எனும் ஏவல். |
| **உலறுதல் :** காய்தல். | **உழறுதல் :** அளைதல், கலங்குதல், கலங்கவடித்தல், சஞ்சரித்தல். | **உளறுதல் :** ஆரவாரித்தல், கண்டபடி பிதற்றுதல். |
| ... ... | **உழி :** அளவில், ஏழனுருபு, பக்கம். | **உளி :** இடம், கணிச்சி, சித்தரிக்குங்கருவி, தச்சுக் கருவிகளி லொன்று, நகஞ்சீவி, |
| ... ... | **உழிதல் :** அலைதல். | ... ... |

| ல | ழ | ள |
|---|---|---|
| உலு : தினை முதலியவற்றின் பதர். | உழு : பிள்ளைப் பூச்சி, உழு வென்னேவல். | உளு : அரிக்கும் புழு, உளுத்தது. |
| உலுக்கு : குலுக்கெனும் ஏவல். | ... ... | உளுக்கு : ஓர் கருவி. |
| உலுக்குதல் : குலுக்குதல், நடுங்குதல். | ... ... | உளுக்குதல் : உளுத்தல், சுளுக்குதல். |
| ... ... | உழுதல் : கிண்டுதல், நிலத்தைக் கிளைத்தல், மயிரைக் கோதுதல். | ... ... |
| ... ... | உழுத்தல் : பதனழிதல். | உளுத்தல் : மரம் முதலியவை புழுவால் அரிக்கப்பட்டுக் கெடுதல். |
| உலுப்பு : உதிர். | ... ... | உளுப்பு : உளுக்கை, உளுத்த மரம். |
| உலுப்புதல் : உதிர்த்தல். | ... ... | ... ... |
| ... ... | உழுந்து : தானியவகை. | உளுந்து : உழுந்து. |
| ... ... | உழுவை : ஒரு மீன், புலி. | உளுவை : உழுவை. |
| உலை : கொல்லனுலை, சோறு சமைத்தற்காகக் கொதிக்கவைக்கும் நீர், நெருப்புள்ள அடுப்பு, மனநடுக்கம். | உழை : இடம், ஏழனுருபு, பக்கத்தில், பூவிதழ், மத்திமசுரம், மான், வைகறை, யாழின் ஒரு நரம்பு. | உளை : அழுகை, ஆண்மயிர், எடுத்தலோசை, குதிரை சிங்கம் முதலியவற்றின் பிடரி மயிர், குதிரையின் தலையாட்டம் என்னும் அணி, சேறு, தலை. |
| உலைச்சல் : தொந்தரவு. | ... ... | உளைச்சல் : குடைச்சல்நோவு, வயிற்றுளைவு. |
| உலைதல் : அஞ்சுதல், அலைதல், அழிதல், கலைந்து போதல், நிலைகுலைதல். | ... ... | உளைதல் : அழிதல், ஊளையிடுதல், குடைச்சல் நோவடைதல், சிதறிப் போதல், தோற்றல், பிரசவ வேதனைப்படுதல், மனம் வருந்துதல், வயிறுளைதல். |



| ல | ழ | ள |
|---|---|---|
| உலைத்தல் : அலைத்தல், கலைத்தல், கெடுத்தல். | உழைத்தல் : சம்பாதித்தல், பிரயாசப்படுதல், வருந்துதல். | உளைத்தல் : அழைத்தல், ஊளையிடுதல், வருத்துதல், வெறுத்தல், யாழ் ஒலித்தல். |
| உலைப்பு : அழிவு, முறியடிக்கை, வருத்துகை. | உழைப்பு : சம்பாத்தியம், பிரயாசை, முயற்சி. | உளைப்பு : குடைச்சல்நோவு, வயிற்றுளைவு. |
| உலைவு : அலைவு, அழிவு, ஊக்கங்குறைவு, சஞ்சலம், தரித்திரம், தோல்வி, நடுக்கம். | உழைவு : யாழின் உள்ளோசை. | உளைவு : குடைச்சல் நோவு, வயிற்றுளைவு. |
| உலி : தேங்காய் உரிக்குங் கருவி. | ... ... | உள் : அந்தரங்கமானது, இடம், உள்ளிடம், மனம், மனவெழுச்சி. |
| உல்லம் : ஒருவகை மீன். | ... ... | உள்ளம் : அகச்சான்று, ஆன்மா, ஊக்கம், கருத்து, மனம், விஞ்ஞானம். |
| உல்லி : ஒல்லி. | ... ... | உள்ளி : வெண்கலம், வெள்ளைப் பூண்டு. |
| ... ... | ஊழி : உலகம், பிரளயத்தால் உலகம் முடியுங்காலம், நெடுங்காலம், முறைமை, வாழ்நாள், விதி. | ஊளி : சத்தம், பசி. |
| ... ... | ஊழை : பித்தம். | ஊளை : தீநாற்றம், நரி முத |

**எலு :** கரடி, பிஞ்சு.

... ...

... ...

**எல் :** இரவு, ஒளி, சூரியன், நாள், பகல், பெருமை, வெயில்.

**எல்ல :** ஒரு விளிப்பெயர்.

**ஏலு :** ஒரு வாசனைப்பண்டம்.

**ஏலே :** ஏலம் (ஒரு செடி).

**ஏல் :** உணர்ச்சி, கிளிஞ்சல், பொருத்தம்.

**ஏல்தல் : (ஏற்றல்)** அன்புகூர்தல், இரத்தல், எதிர்கொள்ளுதல், ஒத்தல், ஒப்புக்

**எழு :** கதவை உள்வாயிற் படியில் தடுக்கும் மரம், தூண், படைக்கலவகை.

**எழுதல் :** உயிர்பெற்றெழுதல், எழுந்திருத்தல், துயிலெழுதல், தொடங்குதல், தொழில் உறுதல், தோன்றுதல், புறப்படுதல், பரவுதல், மனங்கிளர்தல், மிகுதல், மேல் எழும்புதல், வளர்தல்.

**எழுமை :** உயர்ச்சி, ஏழு முறை பிறக்கும் பிறப்பு, ஏழுவகையான பிறப்பு.

... ...

... ...

**ஏழு :** ஒரு எண்.

**ஏழை :** அறியாமை, அறிவிலான்-ள், தரித்திரன், பெண்.

**ஏழ் :** ஏழு.

... ...

லியவை இடுஞ்சத்தம்.

... ...

... ...

**எளுமை :** சுலபம்.

**என் :** ஒரு சிற்றளவு, ஒரு செடி, நிந்தை.

**என்ன :** ஓர் உவமவுருபு.

... ...

... ...

... ...

... ...



கொள்ளுதல், சம்பவித்தல், சுமத்தல், தருதல், துயிலெழுதல், மாறுபடுதல், மிகுதல், மேற்கொள்ளுதல்.

**ஒலி :** இடி, ஓசை, காற்று, சொல், பிறர்கேட்கச் செபிக்கை.

**ஒலிதல் :** தழைத்தல்.

**ஒலித்தல் :** ஆடைவெளுத்தல், சப்தித்தல், விளக்குதல்.

**ஒழி :** அழி எனும் ஏவல்.

**ஒழிதல் :** அழிதல், சாதல், தவிர்தல், தீர்தல், தீர்மானித்தல், விட்டு நீங்குதல், வெளிச்செல்லாது தங்குதல், வெறுமையாதல், வேலை செய்யாது சும்மா இருத்தல்.

**ஒழித்தல் :** அழித்தல், காலி செய்தல், தவிர்த்தல், நீக்குதல், முடித்தல்.

**ஒளி :** அரசனது கடவுட்டன்மை, எரிக்குந்தன்மை, கட்புலன், கண்மணி, காந்தி, கேட்டை, சந்திரன், சூரியன், செயற்கையழகு, சொன்மாலை, நட்சத்திரம், பார்வை மிருகம், புகழ், பெருமை, மறைகை, மறைவிடம், மின்னல், விளக்கு, வெயில், வேட்டைக்காரர் பதிவிருக்கும் மறைப்பு.

**ஒளிதல் :** தவிர்தல், மறைத்தல்.

**ஒளித்தல் :** பதுங்குதல், மறைத்தல், மனத்திலடக்குதல்.

| | | |
|---|---|---|
| **ஒலிப்பு :** பெருஞ்சத்தம். | **ஒழிப்பு :** விலக்கு. | **ஒளிப்பு :** ஒளிக்கை, பதுங்கி மறைகை, மறைவு, மனத்துள் அடக்குகை. |
| **ஒலிவு :** ஒருவகை மரம். | **ஒழிவு :** அவகாசம், இலயம், ஒழிகை, குறைவு, பற்றின்மை, பாரிசேடவளவை, மிச்சம், முடிவு. | **ஒளிவு :** பிரகாசம், மறைவிடம். |
| **ஒலுகு :** திண்டு. | **ஒழுகு :** நிலத்தின் வரலாறு குறிக்குங் கணக்கு, கோயிலின் வரலாறு கூறுவது. | ... ... |
| ... ... | **ஒழுகுதல் :** அமிழ்தல், இளகுதல், நடத்தல், நீர்ப்பாண்டம் சொட்டுதல், நீர்பாய்தல், நெடுமையாதல், நேர்மைப்படுதல், பரத்தல், மிகுதல், முறைப்படி நடத்தல், வளர்தல். | ... ... |
| ... ... | **கண்விழித்தல் :** கண்திறத்தல், தூங்காதிருத்தல், தோன்றுதல், நித்திரை நீங்குதல், வாடினபயிர் மீண்டும் செழித்தல். | **கண்விளித்தல் :** அழைத்தல். |
| **கம்பலம் :** ஆரவாரம், இரத்தினக் கம்பளம், யாழோசை. | ... ... | **கம்பளம் :** கம்பளிப்போர்வை, சர்க்கரைப் பூஷணி, செம்படாம், செம்மறிக்கடா, தொட்டிய சாதி, |



| | | |
|---|---|---|
| | | மயிர்ப்படாத்தாலாகிய ஆசனம். |
| **கம்பலி :** பறைவகை. | ... ... | **கம்பளி :** உரோமப்படாம், கம்பளிச் செடி, தாறுமாறு. |
| **கரும்புல் :** பனை. | ... ... | **கரும்புள் :** பெண் வண்டு, வண்டு வகை. |
| **கருவாலி :** கதுவாலி, மரவகை. | ... ... | **கருவாளி :** புத்திமான். |
| **கருவிலி :** பாம்புவகை. | **கருவிழி :** கண்மணி. | ... ... |
| ... ... | **கவழம் :** கவளம். | **கவளம் :** சோறு, யானைக்கு அளிக்கும் உணவு, வாயளவு கொண்ட உணவு. |
| **கல :** சேர் எனும் ஏவல். | ... ... | **கள :** களாச்செடி, தலைவனும் தலைவியும் பிறரறியாது தனியிடத்தில் எதிர்ப்பட்டு கூடுகை. |
| **கலகம் :** சச்சரவு, நாட்டுக் குழப்பம், பேரொலி, போர். | **கழகம் :** ஓலக்கம், கல்வி பயிலுமிடம், சூது, சூதாடுமிடம், படைமல் முதலியன பயிலுமிடம், புலவர் கூடிய சபை. | **களகம் :** அன்னம், சுண்ணம் புச்சாந்து, நெற்கதிர், பெருச்சாளி. |
| **கலக்கம் :** அச்சம், அழுகை, கலங்குகை, துன்பம், புத்திமாறுட்டம், மனக்குழப்பம். | ... ... | **களக்கம் :** குற்றம். |
| ... ... | **கழங்கம் :** சூதாடுகருவி. | **களங்கம் :** அடையாளம், களிம்பு, கறுப்பு, குற்றம், |

| | | |
|---|---|---|
| | | துரு, நீலம், மறு, வயிரக் குற்றத்திலொன்று. |
| **கலங்கு :** மயங்கெனும் ஏவல். | **கழங்கு :** கழற்சிக்காய், கழங்குப் பருவம், கழற்சி விளையாட்டு, சூது. | **களங்கு :** களங்கம், பாதரசம் முதலிய உலோகங்களால் உண்டாக்கிய குகை. |
| **கலங்குதல் :** அஞ்சுதல், தவறுதல், துன்பமுறுதல், நீர் முதலியன குழம்புதல், மயங்குதல், மனங்குழம்புதல். | ... ... | ... ... |
| **கலத்தல் :** கூடுதல், கூட்டுதல், கூட்டுறவாதல், தோன்றுதல், நெருங்குதல், பரத்தல், புணர்தல், பொருந்துதல். | ... ... | ... ... |
| **கலபம் :** மயிலின் தோகை. | ... ... | **களபம் :** கலவை, கலவைச் சாந்து, சுண்ணச்சாந்து, யானை, யானைக்கன்று. |
| **கலப்பு :** கலக்கை, கலந்து கட்டியாகுகை, நட்பாதல், மெய்யுறுபுணர்ச்சி, வந்து கூடுகை. | **கழப்பு :** சோம்பல். | **களப்பு :** கடலில் ஆழமில்லாத இடம். |
| ... ... | **கழப்புதல் :** வேலைசெய்யாது காலம் போக்குதல். | ... ... |
| **கலமர் :** பாணர். | ... ... | **களமர் :** அடிமைகள், சூத்திரர், மருதநில மக்கள், வீரர். |



| | | |
|---|---|---|
| **கலம் :** ஆபரணம், ஆயுதம், இரேவதி, உழுபடை, ஒருமுகத்தல் அளவு, ஓலைப்பாத்திரம், குப்பி, பத்தி (பத்திரிகையின் உட்பகுதி), பாத்திரம், மரக்கலம், யாழ். | ... ... | **களம் :** இடம், இன்னோசை, உள்ளம், கடலில் விழும் திட்டு, கண்டம், கருமை, களர் நிலம், களாச் செடி, சபை, நெற்களம், போர்க்களம், மேகம், யாகசாலை, விஷம். |
| **கலர் :** கீழோர், தீயமக்கள். | ... ... | **களர் :** உவர்நிலம், கழுத்து, கறுப்பு, கூட்டம், சேற்று நிலம். |
| **கலல் :** குழப்பம். | **கழல் :** கழற்சிக்காய், கால் மோதிரம், காற்ருடி, சிலம்பு, செருப்பு, பாதம், வீரக்கழல். | ... ... |
| **கலவம் :** கலாபம் என்னும் இடையணி, மயில், மயிற்றோகை. | ... ... | **களவம் :** களபம், களாச் செடி. |
| **கலவன் :** கலப்பானது. | ... ... | **களவன் :** நண்டு. |
| **கலவு :** உடலின் மூட்டுவாய், கலத்தல், கலவுதல். | ... ... | **களவு :** களவுப் புணர்ச்சி, களாச்செடி, திருடிய பொருள், திருட்டு, வஞ்சனை. |
| **கலன் :** ஆபரணம், வில்லங்கம். | ... ... | **களன் :** ஒலி, கழுத்து, தொடர்பு, பொய்கை, மயக்கம், மருதநிலம். |
| ... ... | **கழாய் :** கமுகு, கழைக் கூத்தன் ஏறிநின்று ஆடுதற்கு நாட்டும் மூங்கிற் கம்பம், மூங்கில். | **களாய் :** பாத்திரங்கட்குப் பூசப்படும் ஈயம். |

| | | |
|---|---|---|
| **கலாவம் :** மயிற்றோகை. | ... ... | **களாவம் :** இடையணி. |
| **கலி :** ஒலிகடல், கலித்தொகை, கலிப்பா, கலிபுருஷன், கலியுகம், சனி, செருக்கு, தரித்திரம், துளக்கம், துன்பம், போர், மனவெழுச்சி, வஞ்சகம், வலி. | **கழி :** ஆயுதக்காம்பு, உப்பளம், கடலையடுத்த உப்புநீர்ப்பரப்பு, கோல், நுகத்துளையில் இடுங்கழி, நூற்சுருள், மாமிசம், மிகுந்த, **வரிச்சல்.** | **களி :** உருக்கின உலோகநீர், உள்ளச் செருக்கு, உன்மத்தம், கள், கஞ்சி, கட்குடியன், களிமண், கள்ளுண்டு களிக்கை, குழம்பு, குழைவு, தேன், மகிழ்ச்சி, மா முதலிய வற்றால் ஆக்கிய களி, யானைமதம், மண்டல். |
| **கலிகம் :** கண்ணிடும் மருந்து. | ... | **களிகம் :** வாலுளுவை மரம். |
| **கலிகை :** நாகமல்லி, மொட்டு. | ... ... | **களிகை :** ஒருவகை கழுத்தணி, மொட்டு. |
| **கலிதம் :** இந்திரியம் நழுவுகை. | ... ... | **களிதம் :** பெருங்கல், வழுக்கல். |
| | **கழிதல் :** அச்சங்கொள்ளுதல், அழிதல், உடம்பினின்று மலம் முதலியன வெளிப்படுதல், ஒத்தல், ஒழிதல், கடத்தல், கடந்துபோதல், குறைபடுதல், சாதல், நடத்தல், முடிவடைதல், வயிற்றுப் போக்காதல், வருந்துதல், மிகுதல். | ... ... |
| **கலித்தல் :** உண்டாதல், எழுதல், ஒலித்தல், செருக்குதல், செழித்தல், செலுத் | **கழித்தல் :** ஒதுக்குதல், குறைத்தல், நீக்குதல், பெரிய எண்ணிலிருந்து சிறிய | **களித்தல் :** கள்ளைப் பருகி வெறிகொள்ளுதல், செருக்குதல், மகிழ் |



| | | |
|---|---|---|
| துதல், நழுவுதல், நீக்குதல், நெருங்கி யிருத்தல், பெருகுதல், மகிழ்தல், வேகமாதல். | எண்ணை குறைத்தல், போக்குதல், மலம் முதலியவற்றை வெளிப்படுத்துதல், வருவுதல். | வடைதல், மதமுடையதாதல். |
| **கலிப்பு :** ஒலிக்கை, தரா (ஓர் உலோகம்), பொலிவு. | **கழிப்பு :** ஒழிக்கை, கழித்தல், குற்றம், சாந்திகழிக்கை, தள்ளுண்டபொருள். | **களிப்பு :** சிற்றின்பம், செருக்கு, மண்ணின் பசை, மதுவெறி, மயக்கம், மனமகிழ்ச்சி. |
| ... ... | **கழிப்புதல் :** செய்துமுடித்தல், போக்குதல். | ... ... |
| **கலியன் :** இரட்டைக்குழந்தைகளில் ஆண், கலிபுருஷன், சனி, தரித்திரன், பசித்தவன், படைவீரன். | ... ... | **களியன் :** குடியன். |
| **கலினி :** கைம்பெண், திப்பிலி. | **கழினி :** இடுதிரை. | ... ... |
| **கலை :** அமிசம், அறுபத்திநாலு கலை, ஆண்குரங்கு, ஆண்மான், இடைக்கலை பிங்கலை முதலியவை, ஒரு பாகையின் அறுபதிலொன்று, ஒரு தாளப்பிரமாணம், ஒளி, சந்திரனது பதினாறு பாகத்தொன்று, சரீர சாத்திரம், கல்வி, கர்ப்பூரவகை, சீலை, சுறுமீன், பாஷை, மகரராசி, மரக்கவடு, மகர | **கழை :** ஓடக்கோல், கரும்பு, குத்துக்கோல், தண்டு, புனர்பூசம், மூங்கில், மூங்கிற் குழாய், வேய்ங்குழல். | **களை :** அயர்வு, அழகு, குற்றம், சந்திரகலை, பயிர் வளர்வதற்குத் தடையாக முளைக்கும் பூடு. |

| ல | ழ | ள |
|---|---|---|
| ராசி, மேகலை காஞ்சி யெனும் இடையணிகள், வண்ணப்பாட்டின் ஒரு பாகம், மரவயிரம், குதிரைக் கலனே. | | |
| **கலைஞன் :** கல்விமான். | ... ... | **களைஞன் :** களைபறிப்போன், சண்டாளன். |
| **கலைதல் :** அழிதல், இராகம் மயங்குதல், குலைதல், சுருதியாதல், நிலைகுலைதல், பலகை முதலிய வற்றில் எழுதப்பட்டவை அவிதல். | ... ... | **களைதல் :** அரிசி கழுவுதல், அழித்தல், ஆடையணி முதலியன கழற்றுதல், குழைதல், கூட்டி முடித்தல், நீக்குதல், பிடுங்கியெறிதல். |
| **கலைத்தல் :** எண்ணங்கலைதல், ஓட்டுதல், குலைத்தல், சுருதி கலைத்தல், பிரித்து நீக்குதல். | ... ... | **களைத்தல் :** களைப்புறுதல். |
| **கல் :** இரத்தினம், காவிக்கல், சாச்சடங்கில் இறந்தார் பொருட்டு நாட்டப்படுங் கல், வீரக்கல், வெட்டியெடுக்கப்படும் கல். | ... ... | **கள் :** களவு, தேன், மது, வண்டு. |
| **கல்லம் :** செவிடு, மஞ்சள். | ... ... | **கள்ளம் :** களவு, குற்றம், பொய். |
| **கல்லல் :** தோண்டல். | ... ... | **கள்ளல் :** களவு செய்தல். |
| **கல்லறை :** கல்லாலாகிய அறை, குகை, பிரேதக் குழி. | ... ... | **கள்ளறை :** பிறர் அறியாதபடி அமைந்துள்ள அறை, பெட்டி முதலியவற்றி |



| ல | ழ | ள |
|---|---|---|
| | | லும் அறியாவகை அமைக்கும் அறை. |
| **கல்லன் :** தீயோன். | ... ... | **கள்ளன் :** ஒருசாதி, திருடன், வஞ்சகன். |
| **கல்லி :** ஆமை, ஊர்க்குருவி, கேலி, பருவத்திற்குமேற்பட்ட நுண்ணறிவு, மேலங்கியுறுப்பு, வேடிக்கை. | ... ... | **கள்ளி :** ஒரு செடி, கள்ளச்சாதிப்பெண், சாதிக்காய் மரம், திருடி, வேலை செய்யாது கழப்புபவள். |
| **கல்வம் :** மருந்து அரைக்கும் குழியம்மி. | ... ... | **கள்வம் :** திருட்டுச்செயல். |
| **கன்முலை :** இறுகிய பசுமடி. | **கன்முழை :** மலைக்குகை. | ... ... |
| ... ... | **காலாழ் :** சேறு. | **கலாள் :** நாள்வகைச் சேனையுளொன்று, பாசனக் காலில் நீர்பாய்ச்சுவோன். |
| **காலகம் :** சேங்கொட்டை. | **காழகம் :** ஆடை, கடாரம், (பர்மா), கருமை, கைக்கவசம். | **காளகம் :** எக்காளம், கருமை, சேங்கொட்டை, மருக்காரை. |
| **காலம் :** இசைக்குரிய திரிகாலம், தக்கசமயம், தாளப்பிரமானத் தொன்று, தொழில் நிகழ்ச்சியைக் குறிக்கும் முக்காலம், பருவம், பருவப் பயிர், பொழுது, மரணகாலம், விடியல். | **காழம் :** உடைவிசேடம். | **காளம் :** அவுரி, ஊதுகொம்பு, எட்டி, கருமை, கழு, சூலம், நஞ்சு, நல்வினைவுக்குக் காரணமான பெருமழை, பாம்பு, மேகம். |
| **காலி :** ஒருவகை மரம், உப | **காழி :** உறுதி, சீகாழி. | **காளி :** கக்கரி, காட்டுமுருக்கு, |

யோகமற்றவன், துன்மார்க்கம், பசு, பசுக்கூட்டம்.

... ...

**காலை :** அடைப்பு, தொழுவம், பொழுது, விடியற்காலம்.

**கால் :** அடிப்பாகம், அளவு, பின்னுதற்கு வகுத்த மயிரின் பகுதி, இடம், இயமன், இன்முறை, எழுத்தின் கால், கருநிறம், காலன், காற்று, கிரணம், கைப்பிடி, குறுந்தறி, கோல், செவ்வி, தடவை, தூண், தேருருள், நடை, நாலிலொன்று, நெசவுத்தறியின் மிதி, பஞ்சபூதம், பாதம், பிரிவு, பிறப்பிடம், பூவின்தாள், மரக்கன்று, மகன், மரக்கால், மழைக்கால், மூலை, மூனை, வண்டி, வமிசம், வழி, வனம், வாதரோகம், வாய்க்

**காழியன் :** உப்பு வாணிகன், பிட்டுவாணிகன்.

...

**காழ் :** இரத்தினம், இருப்புக்கம்பி, ஒளி, ஓடஞ்செலுத்தற்குரிய தண்டு, கட்டுத்தறி, கதவிற் செறியுந்தாழ், கருமை, கழி, கனியின் தோல், காம்பு, குற்றம், கொட்டை, தூண், நாற்சாடு, பருக்கைக்கல், பளிங்கு, பூமாலை, மணிவடம், மரவைரம், மனவுறுதி, முத்து, விதை, விறகு, யானையைச் செலுத்தும் பரிக்கோல்.

சிங்கம், துர்க்கை, பாம்பின் நச்சுப்பல் நான்கனுள் ஒன்று, பார்வதி, மனத்தக்காளி.

**காளியன் :** கண்ணபிரான் தன் பாதங்களால் தலையில் ஆடப்பெற்றபாம்பு.

**காளை :** ஆண்மகன், இளஎருது, கட்டிளப்பருவத்தினன், வீரன்.

... ...



கால், பொழுது

... ...

**காவாலி :** சிவன்.

**கிலம் :** அற்பம், சிதைந்தது.

**கிலி :** பயம்.

... ...

... ...

**கீலி :** தந்திரமுள்ளவன்.

**கீல் :** உடல் பொருத்து, கதவின் கீல், பூசுந்தார்.

**காழ்த்தல் :** அளவு கடந்து மிகுதல், உறைத்தல், மனவைரம் கொள்ளுதல், முற்றுதல்.

... ...

**கிழம் :** முதுமை, முதுமையடைந்தவன்—ள்.

**கிழி :** கதிர்க்கிழி, கிழிபட்டதுகில், கீழுடை, சீலையில் எழுதிய சித்திரப்படம், வெற்றி பெறுவோர்க்குப் பரிசாகச் சீலையில் முடிந்த நிதிப்பொதி.

**கிழிதல் :** அழிதல், தோல்வியுறுதல், பிளந்துபோதல், பீறுண்டுபோதல்.

**கிழித்தல் :** அங்காத்தல், கீறுதல், கோடுவரைதல், சாதித்தல், சொல்லாற் கண்டித்தல், தின்னுதல், பீறச்செய்தல், பேர்த்தல்.

... ...

**கீழ் :** இழிந்தவன், கடிவாளம், கயமை, கிழக்கு, கிழிடம், கீழே, குற்றம்,

... ...

**காவாளி :** காட்டு மல்லிகை, வேளைச்செடி.

... ...

**கிளி :** கிளிவகை, பறவைவகை, வெட்டுக்கிளி.

... ...

... ...

**கீளி :** கடல் மீன்வகை.

**கீள் :** கூறு.

| ல | ழ | ள |
|---|---|---|
| ... ... | பள்ளம், மறதி, முற்காலம். | ... ... |
| | **கீழ்(ழு)தல் :** கிழித்தல், கோடு கிழித்தல், சினத்தல், தோண்டுதல், பறியுண்ணுதல், பிளத்தல், மீறுதல். | |
| **குந்தாலி :** கணிச்சி, குத்தித் தோண்டுங்கருவி. | ... ... | **குந்தாளி :** குந்தாலி. |
| **குமிலி :** துளசி. | **குமிழி :** ஊற்றுவாய், நீர் முதலியவற்றிலெழுங் குமிழி, பாதத்துறட்டின் குமிழ். | ... ... |
| ... ... | **குழகு :** அழகு, இளமைச் செவ்வி, குழந்தை. | **குளகு :** இலைகறி, குறிஞ்சிநில மக்கள் உடையாகக் கொள்ளும் தழை, விலங்கின் இலையுணவு. |
| ... ... | **குழகுதல் :** கொஞ்சிவிளையாடுதல், வசீகரித்தல். | ... ... |
| **குலப்பம் :** கக்குவான், செம்பு, மணல். | **குழப்பம் :** இராசகலகம், கலகம், கொந்தளிப்பு, தாறுமாறு, மனக்கலக்கம். | ... ... |
| **குலம் :** அரண்மனை, அழகு, இனம், குடி, குழு, கூட்டம், கோயில், சாதி, நன்மை, மகன், மலை, மூங்கில், வீடு, ரேவதி. | ... ... | **குளம் :** ஏரி, சர்க்கரை, தடாகம், நெற்றி, மார்கழி, வெல்லம். |
| ... ... | **குழம்பு :** காய்கறிக் குழம்பு, | **குளம்பு :** ஒரு சார்விலங்கின் |



| ல | ழ | ள |
|---|---|---|
| ... ... | குழைசேறு, குழம்பான பொருள். | பாதம். |
| | **குழம்புதல் :** கலங்குதல், நிலைகுலைதல், மனங்கலங்குதல். | ... ... |
| ... ... | **குழவி :** அம்மி முதலியவற்றில் அரைக்குங் கல், ஒருசார் விலங்கின் பிள்ளைப் பெயர், கைக்குழந்தை, புல் மரம் முதலியவற்றின் இளமைப் பெயர். | **குளவி :** கொட்டுமியல்புள்ள ஈ வகை, வண்டு வகை. |
| **குலவு :** வளைவு. | **குழவு :** இளமை. | ... ... |
| **குலவுதல் :** உலாவுதல், குவிதல், தங்குதல், நெருங்கியுறவாடுதல், மகிழ்ச்சி கொள்ளுதல், விளங்குதல். | **குழவுதல்:** கூடுதல். | ... ... |
| **குலி :** மனைவி, யாக்கை. | **குழி :** ஓர் அளவு, சதுரவடி, நீர் நிலை, பள்ளம், பாத்தி, வயிறு. | **குளி :** முத்துக்குளி, ஸ்நானம். |
| **குலிசம் :** இருப்பை வன்னி முதலிய மரங்கள், கற்பரிபாஷாணம், வச்சிராயுதம், வயிரம். | ... ... | **குளிசம் :** இரட்டையாகக் கட்டிக்கொள்வது, பாம்பாட்டிகள் விஷமிறக்குவோர் முதலானவர் கையில் இரட்டையாகக் கட்டிக் கொள்ளும்வேர். |
| ... ... | **குழிதல் :** உட்குழிவாதல். | ... ... |

| ல | ழ | ள |
|---|---|---|
| ... ... | **குழித்தல் :** குழியாக்குதல், செதுக்குதல். | **குளித்தல் :** அழுந்துதல், தைத்தல், தோல்வியுறுதல், நீராடுதல், மறைதல், முத்துக்களை மூழ்கியெடுத்தல், வலிய உட்புகுதல். |
| ... ... | **குழிப்பு :** குழிசெய்கை, செய்யுட் சந்தவகை, தாழ்வு. | **குளிப்பு :** நீராடுகை. |
| ... ... | **குழியம் :** திரள்வடிவு, வளைதடி, வாசனை உருண்டை. | **குளியம் :** உருண்டை, மருந்து. |
| ... ... | **குழியல் :** ஒருவகை உலோகப் பாத்திரம். | **குளியல் :** குளைச்சு, நாலிலொன்று, நீராடுகை. |
| **குலை :** ஈரல் குலை முதலியன, கொத்து, செய்கரை, நாணி, பாலம், வில்லின் குதை. | **குழை :** ஆகாசம், காடு, காது, குண்டலம், குழல், சேறு, தளிர், துளை, நெய்தல். | ... ... |
| **குலைச்சல் :** அழிவு. | **குழைச்சல் :** வணக்கங் காட்டுகை. | ... ... |
| **குலைதல் :** அவிழ்தல், அழிதல், கலைதல், கோபக்குறி காட்டுதல், நடுங்குதல், நிலைகெடுதல், மனங் குழைதல். | **குழைதல் :** இளகுபதமாதல், சோறு அளிதல், தளர்தல், துவளுதல், நெருங்கி உறவாடுதல், மனமிளகுதல், வருந்துதல், வளைதல், வாடுதல். | ... ... |
| **குலைத்தல் :** அசைத்தல், அதைரியப்படுத்தல், அவிழ்த்தல், அழித்தல், குலை | **குழைத்தல் :** அசைத்தல், இளகுவித்தல், கலக்கப்பண்ணுதல், குழையச் | ... ... |



| ல | ழ | ள |
|---|---|---|
| யாக ஈனுதல், குழறிப் பேசுதல், தாறுமாறுக்குதல், நாய் குலைத்தல், பிரித்தல். | | |
| **குல்லம் :** முறம். | ... ... | **குள்ளம் :** குட்டையானது, கொடுமை, தந்திரம். |
| **குல்லி :** ஒருவகைப்பூண்டு. | ... ... | **குள்ளி :** குள்ளமானவள். |
| **குவலை :** கஞ்சா, துளசி. | ... ... | **குவளை :** ஒருவகைப் பாத்திரம், ஒருபேரெண், ஒரு நீர்ப்பூக்கொடி, கண்குழி, கோளை. |
| ... ... | **குறழ் :** குனி. | **குறள் :** குள்ளன், குறளடி, குறுமை, திருக்குறள், பூதம். |
| **கூலம் :** கடைத்தெரு, குரங்கு, நீர்க்கரை, நெல் முதலிய பதினெண்வகைப் பண்டம், பசி, பண்ணிகாரம், (Peppermint) பாகல், மரை, முறை, விலங்கின் கால். | **கூழம் :** எள். | **கூளம் :** சண்டு (வைக்கோலின் துண்டு பாகம்), திப்பி. |
| ... ... | **கூழன் :** தெளிந்த அறிவில்லாதவன், பலாவகை. | **கூளன் :** பயனற்றவன். |
| **கூலி :** கூலிக்கா—ரன்—ரி, வாடகை, வேலைக்குப் பெறும் ஊதியம். | ... ... | **கூளி :** எருது, கற்பில்லாதவள், குடும்பம், குள்ளம், குற்றம், கூட்டம், சிவகணங்களாகிய பூதம், படைத்தலைவன், பெருங்கழுகு, பொலி எருது. |

| | | |
|---|---|---|
| **கெலி :** ஆசை, பெரும்பயம். | **கெழி :** நடப்பு. | ... ... |
| **கெலித்தல் :** அச்சங்கொள்ளுதல், ஆசைகொள்ளுதல், வெல்லுதல். | ... ... | **கெளித்தல் :** கெளிர்துபோதல். |
| **கேலி :** பரிகாசம், விகடம் விளையாட்டுப் பேச்சு. | ... ... | **கேளி :** தென்னைவகை, மகளிர் விளையாட்டு. |
| ... ... | **கேழ் :** ஒப்பு, ஒளி, நிறம். | **கேள் :** உறவு, கணவன், நட்பு, நண்பன். |
| **கொலு :** ஓலக்க இருப்பு, நவராத்திரிப் பண்டிகையில் பொம்மை முதலியவற்றை அலங்காரமாக வைத்தல். | **கொழு :** உலோகக் கோல், ஏர்க்கொழு, கொழுப்பு, துளையிடும் பெரிய ஊசி. | **கொளு :** செய்யுள் முதலியவற்றின் கருத்து விளக்கும் சொற்றொடர், பழுவெலும்பு. |
| ... ... | **கொழுத்தல் :** உடற்கொழுப்பு மிகுதல், குழம்பாயிருத்தல், செழித்தல், திமிர் கொள்ளுதல், பூமிமதர்த்தல். | ... ... |
| **கொலை :** இமிசை, உயிர் வதை. | ... ... | **கொளை :** இசை, கை முதலியவற்ருல் தாளமிட்டு ஒற்றறுக்கை, கோட்பாடு, பயன், பாட்டு, பிடிப்பு. |
| **கொல் :** கொலைத் தொழில், கொல்தொழில், கொல்லன், பூட்டு, வருத்தம். | ... ... | **கொள் :** காணம், குடைவேலாமரம், முற்காலத்து வழங்கிய சிறு நிறையளவு. |
| **கொல்(லு)தல் :** அழித்தல், துன்பப் படுத்துதல், | ... ... | **கொள்(ளு)தல் :** அங்கீகரித்தல், உடலிற் காயம்படுதல், |



| | | |
|---|---|---|
| வதைத்தல், வெட்டுதல். | | உரிமையாக்கிக் கொள்ளுதல், ஒத்தல், கருதுதல், கவர்தல், கற்றுக் கொள்ளுதல், கையால் எடுத்துக் கொள்ளுதல், கொண்டாடுதல், தன்னுட்கொள்ளுதல், நன்கு மதித்தல், பெறுதல், பொருந்துதல், மனம் பொறுத்தல், முகத்தல், மேற்கொள்ளுதல், விவாகம் செய்தல். |
| **கொல்லம் :** மலையாள நாட்டில் உள்ள ஓர் ஊர். | ... ... | **கொள்ளம் :** சேறு. |
| **கொல்லல் :** கொல்லுதல். | ... ... | **கொள்ளல் :** பாத்திர முதலியவற்றின் உள்ளே அடங்குதல், மனதிலே பிடித்தல், வாருதல். |
| **கொல்லாமை :** உயிர்க் கொலை செய்யாமை. | ... ... | **கொள்ளாமை :** பகை, மிகை. |
| **கொல்லி :** ஒரு மலை, கொல்லுபவன்–ள், கொல்லிப் பாவை, கொல்லுவது. | ... ... | **கொள்ளி :** எரிகட்டை, கலகம் மூட்டுபவன், நெருப்பு, பொருமையும் முன்கோபமும் உள்ளவன், மகன். |
| **கொல்லை :** தரிசு, தோட்டம், புழைக்கடை, புன்செய் நிலம், மலம், மலங்கழிக்குமிடம், முல்லை நிலம், | ... ... | **கொள்ளை :** கூட்டம், சூறை கொள்ளுகை, தடை, பயன், பெருவாரிநோய், மிகுதி, விலை. |

| ல | ழ | ள |
|---|---|---|
| வரம்பு கடந்து ஒழுகுப வன்—ள். | | |
| **கோலகம் :** திப்பிலி. | ... ... | **கோளகம் :** தாளகம், திப்பிலி, மிளகு, விரியன். |
| **கோலம் :** அழகு, அலங்காரம் (கற்பொடி முதலியவற்றா லிடுங்கோலம்), ஆபரணம், இலந்தை மரம், உருவம், குரங்கு, சிறு நீரோட்டம், தன்மை, தெப்பம், நிறம், பன்றி, பாக்கு, பீர்க்கு, பெருந்துன்ப நிலை, மா, முயற்சி, முள்ளம்பன்றி, விளையாட்டு, வேடம். | **கோழம் :** சங்கபாஷாணம். | **கோளம் :** உருண்டை, பிராணிகளின் உடலில் நீரூறும் தசைப்பற்று. |
| **கோலா :** ஒருவகை பானம் (சோடா வகை), ஒரு வகை மீன், திப்பிலி. | ... ... | **கோளா :** ஒருவகை மாமிச உணவு, கஞ்சா உருண்டை. |
| **கோலி :** இலந்தைமரம், சிறு குண்டு வடிவான விளையாட்டுக்கருவி, சிற்றமிஞ்சில் புன்கு முதலிய மரங்கள், திப்பிலி, மயிர். | **கோழி :** உறையூர், ஒருசெடி, குக்குடம், விட்டில். | **கோளி :** குதிரை கழுதைகளின் பெட்டை, கொழிஞ்சி, கொள்வோன், பூவாது காய்க்கும் மரம், விதவை பெற்ற மகன். |
| **கோலை :** மிளகு. | **கோழை :** இரக்கம், உமிழ் நீர், கபம், சிறுபிள்ளை, மனத்திட்ப மின்மை, மனத்திடமில்லாதவன். | **கோளை :** எலி, குவளை. |



| ல | ழ | ள |
|---|---|---|
| **கோல் :** அணியின் சித்திர வேலை, அம்பு, அரசாட்சி, அளவுகோல், இலந்தை மரம், ஈட்டி குடை முதலியவற்றின் காம்பு, ஊன்றுகோல், கம்பு, குதிரைச்சவுக்கு, கொழு, சித்திரம் தீட்டுங்கோல், செங்கோல், திரட்சி, தீக்கடைக்கோல், துலாக்கோல், துலாராசி, தெப்பம், மரக்கொம்பு, முத்திரைக்கோல், யாழின் நரம்பு. | **கோழ் :** கொழுப்பான, செழிப்பான, வழுவழுப்பான. | **கோள் :** அனுபவம், இடையூறு, ஒளி, கிரகம், குலை, குறளை, கொலை, கொழு, கொள்ளுகை, தனிமை, தீமை, துணிபு, பரிவேடம், பாம்பு, பொய், மதிப்பு. |
| **சகலம் :** எல்லாம், துண்டு. | ... ... | **சகளம் :** உருவத்திருமேனி. |
| **சகலன் :** தன் மனைவியின் உடன்பிறந்தாள் கணவன். | ... ... | **சகளன் :** சிவன். |
| **சலகன் :** விதையடித்த பன்றி. | ... ... | **சளகன் :** நிலையற்ற மனமுடையவன். |
| **சலக்கு :** நவச்சாரம். | **சழக்கு :** குற்றம், தளர்ச்சி, தீமை, பயனின்மை. | ... ... |
| **சலங்கு :** கட்டுப்படகு, முத்துச்சலாபம். | **சழங்கு :** முதுமைத் தளர்ச்சி. | ... ... |
| ... ... | **சழங்குதல் :** சோர்தல், தொங்கியசைதல், நெகிழ்தல். | ... ... |
| **சலம் :** அசையும் அம்புக்குறி, இயங்குதிணை, | ... ... | **சளம் :** துன்பம், மூர்க்கம், வஞ்சனை. |

| ல | ழ | ள |
|---|---|---|
| இலாமிச்சை, கோபம், சீழ்நீர், சுழற்சி, தணியாக்கோபம், தீயசெயல், நடுக்கம், நீர், பட்சபாதம், பிடிவாதம், பொய்ம்மை, போட்டி, முட்பன்றியின்முள், மூத்திரம், மாறுபாடு, வஞ்சனை. | | |
| **சலி :** (சல்லடை முதலியவைகளால்) சலிஎனும் ஏவல். | ... ... | **சளி :** கபம், குளிர்ச்சி, பிசின், மூக்குச்சளி, ஜலதோஷம். |
| **சலித்தல் :** அடைதல், அருவருப்புக் காட்டுதல், ஒலித்தல், கோபங்கொள்ளுதல், சல்லடையாற் சலித்தல், சேர்தல், மனம் சஞ்சலப்படுத்துதல், வெறுத்தல். | ... ... | **சளித்தல் :** சளிநோய்கொள்ளுதல், தளர்தல், பதனழிதல், புளித்தல். |
| **சலிப்பு :** சோர்வு, வெறுப்பு. | ... ... | **சளிப்பு :** ஊழற்சதைபிடிக்கை, பதனழிகை, ஜலதோஷம். |
| ... ... | ... ... | **சள்ளு :** முற்றாத இளங்காய். |
| **சல்லுதல் :** சல்லடையாற் சலித்தல், நீர் தெளித்தல். | ... ... | **சள்ளுதல் :** அபானவாயு விடுதல், இளகுதல், சிக்குதல். |
| **சாலகம் :** அரும்பு, சலதாரை, சிலந்திவலை, பலகணி, | ... ... | **சாளகம் :** இசைப்பாவுக்குரிய சாதியோசை மூன்ற |



| ல | ழ | ள |
|---|---|---|
| பறவைக்கூடு, வலை, ஜலம். | | னுள் ஒன்று. |
| **சாலம் :** அகலம், அரும்பு, ஒரு கொடி, ஒரு மரம், கல்வி, குறளை, கூட்டம், சபை, சாலவித்தை, நடிப்பு, பலகணி, மதில், வலை, வைத்திய நூல். | ... ... | **சாளம் :** குங்கிலியம், மணல். |
| **சாலல் :** மிகுதியாயிருத்தல். | **சாழல் :** ஓர் பிரபந்தம், கரடி, மகளிர் விளையாட்டிலொன்று. | ... ... |
| **சாலி :** ஒருவகை மரம், கவசம், கள்வகை, செந்நெல், நெற்பயிர்ப்பொது, புழுகுச்சட்டம். | ... ... | **சாளி :** ஒருவகை மரம், வண்டு. |
| **சாலிகை :** கவசம். | ... ... | **சாளிகை :** சாடி, பணப்பை, வண்டு. |
| **சாலை :** அரண்மனை, அறச்சாலை, இருபக்கமும் மரம் செறிந்த பாதை, குதிரை முதலியன கட்டுமிடம், பள்ளிக்கூடம், பொது மண்டபம், வீடு. | **சாழை :** குடிசை, மகளிர் கைகொட்டி ஆடும் விளையாட்டு. | **சாளை :** ஒரு மீன், குடிசை, வழிந்துவிழும் வாய்நீர். |
| **சிதல் :** ஈசல், கறையான். | ... ... | **சிதள் :** புண்ணின் அசடு, மீன்செதிள். |
| **சிலை :** அம்மி, ஒளி, கல்விற் செதுக்கிய உருவம், தனுராசி, மலை, மார்கழி, | ... ... | ... ... |

| ல | ழ | ள |
|---|---|---|
| முழக்கம், மூலநட்சத்திரம், வால், வில், வானவில். | | |
| **சிலேத்தல் :** ஒலித்தல், கொட்டுதல், கோபங்கொள்ளுதல், பின்னிடுதல், முழங்குதல், யாழொலித்தல். | … … | **சிளேத்தல் :** சோர்தல். |
| **சிறுமலே :** பொற்றை. | **சிறுமழை :** சிறுதூறல். | … |
| **சீல் :** பருந்து, முத்திரை. | **சீழ் :** நாவின் நுனியை மடித்துச் செய்யும் ஒலி. | … |
| … … | **சுழி :** அச்சரச் சுழி, உச்சி, உச்சிப்பூ, கடல், சுழலுகை, தலேவிதி, தீக்குணம், நீர்ச்சுழி, பூச்சியம், மயிர்ச்சுழி. | **சுளி :** புழியாறை. |
| … … | **சுழிதல் :** இறத்தல், கபடமாதல், கோபம் வெறுப்பு முதலியவற்றின் குறியாக முகஞ் சுருங்குதல், சுழிபோல் வளேதல், மனங் கலங்குதல். | **சுளிதல் :** சினத்தல். |
| … … | **சுழித்தல் :** அடிபடாமல் ஒதுங்குதல், அலேயச் செய்தல், கண் குழிதல், கோபித்தல், சுழலுதல், சுழியுண்டாக்குதல், தவறிப் போதல், நீர்ச்சுழியுண்டாதல், பரீட்சையில் தேருதபடி செய்தல், மறைத்தல், முகத்தை சுருக்குதல். | **சுளித்தல் :** காலால் துகைத்தல், கோபித்தல், வருந்துதல், வெறுத்தல். |



| ல | ழ | ள |
|---|---|---|
| **சுல் :** வெள்ளி. | … … | **சுள் :** அற்பம், கருவாடு. |
| **சுல்லி :** அடுப்பு, மடைப்பள்ளி. | … … | **சுள்ளி :** உலர்ந்த சிறுகொம்பு, எலும்பு, சிறுகோல், சிறுமை, மரக்கிளே. |
| **சுல்லு :** வெள்ளி. | … … | **சுள்ளு :** உறைப்பு. |
| **சூலம் :** இடிதாங்கி, கழு, மாட்டுக்கிடும் சூட்டுக்குறி, முப்பிரிவான முனேயுடைய ஆயுதம், வர்ரசூலே. | … … | **சூளம் :** சீழ்க்கை. |
| **சூலி :** கருப்பவதி, சிவன், துர்க்கை. | **சூழி :** உச்சி, உச்சிக்கொண்டை, கடல், சேணம், நீர் நிலே, மேலிடம், யானேயின் முகப்படாம், வீட்டிறப்புத் தாங்கும் கழி. | **சூளி :** உச்சிக்கொண்டை. |
| **சூலிகை :** இடிதாங்கி. | **சூழிகை :** கள். | **சூளிகை :** செய்குன்று, தலேயணிவகை, நிலாமுற்றம், நீர்க்கரை, யானேச் செவியடி. |
| | | … … |
| **சூலுதல் :** குடைதல். | **சூழுதல் :** சூழ்ந்திடல். | |
| **சூலே :** ஓர் வியாதி, ஓர் ஆங்கில மாதம். | … … | **சூளே :** ஈமவிறகு, செங்கல் முதலியன சுடும் காளவாய், வேசி. |
| **சூல் :** கருப்பம், சூலம், முட்டை, மேகம் நீர் | **சூழ் :** ஆராய்ச்சி, ஆலோசனே, கடலே, சுற்று, | **சூள் :** ஆணே, சபதம், சாபம், தீவட்டி. |

| ல | ழ | ள |
|---|---|---|
| நிரம்பியிருக்கை. | தலைக்கணி மாலை. | |
| **சூல்தல் :** அறுத்தல், கருப்பங் கொள்ளுதல், தோண்டுதல். | **சூழ்தல் :** அறிதல், ஆராய்தல், எழுதல், கருதுதல், சதியாலோசனை செய்தல், சுற்றியிருத்தல், சுற்றிவருதல், தாக்குதல், தேர்ந்தெடுத்தல், பண்ணுதல். | **சூள்தல் :** ஆணையிடுதல், வஞ்சினங் கூறுதல். |
| **செங்கலம் :** செந்தாமரை. | ... ... | **செங்களம் :** போர்க்களம். |
| **செல்லு :** நிகழ்தல், வீழ்தல். | ... ... | **செள்ளு :** உண்ணிவகை, தெள்ளுப் பூச்சி. |
| **சேலம் :** ஆடை, ஓர் ஊர். | **சேழம் :** மீதி. | **சேளம் :** மீதி. |
| **சேல் :** கெண்டைமீன் வகை. | **சேழ் :** மேலிடம். | ... ... |
| ... ... | **சோழகம் :** தென்காற்று. | **சோளகம் :** குடுமிவைக்குஞ் சடங்கு. |
| ... ... | **சோழம் :** சோழ நாடு, விடாது பற்றி துன்புறுத்துவோன். | **சோளம் :** ஒருவகை தானியம். |
| **சோலி :** காரியம், தொந்தரவு, தோணியில் ஒதுக்கிடம், ரவிக்கை வகை. | **சோழி :** பலகறை (சோகி). | **சோளி :** பிச்சைக்காரனது பை. |
| **ஞாலம் :** உலகம், உயர்ந்தோர், தோணி அசையாது நிற்க இடும்பாரம், பூமி, மாயவித்தை. | ... ... | **ஞாளம் :** தண்டு. |
| **தலப்பம் :** ஒருவகைப் பனை. | ... ... | **தளப்பம் :** ஒருவகைப் பனை, காதணி வகை, மனவுலைவு. |



| ல | ழ | ள |
|---|---|---|
| **தலப்பு :** சம்பளம். | ... ... | **தளப்பு :** கேடு. |
| **தலம் :** இடம், இலை, உடலுறுப்பு, உலகம், பூமி, வயல், வீடு, க்ஷேத்திரம். | **தழம் :** தயிலம். | **தளம் :** இலை, உபரிகை, கனம், கூட்டம், சாடி, சாணைபிடியாத கெம்பு, செஞ்சாந்து, தட்டு, தளவரிசை, படை, பூவிதழ், முல்லை, மேடை, வெண்சாந்து. |
| **தலை :** ஆகாசம், ஆள், உச்சி, உயர்ந்தோன், ஒப்பு, கபாலம், சிரம், சிறந்தது, தலைமயிர், தலைவன், தபாற்றலை, நுனி, முடிவு, முதல், மேலே. | **தழை :** இலை, இலையோடு கூடிய சிறுகொம்பு, ஒருவகை மாலை, சீட்டாட்டத்தில் எண்ணிக்கையிற் சேர்க்கப்படாத சீட்டு, தழைதல், தளிர், பீலிக்குடை, மயில் தோகை. | **தளை :** ஆண்மக்கள் மயிர், கட்டு, கயிறு, காற்சிலம்பு, சிறை, தொடர்பு, பாசம், மலர் முறுக்கு, வயல், விலங்கு. |
| **தலைதல் :** கூடுதல், பரத்தல், மழை பெய்தல், மிகக் கொடுத்தல், மேன்மையாதல். | **தழைதல் :** செழித்தல், தளிர்த்தல், தாழ்தல். | **தளைதல் :** பிணித்தல், |
| **தலைப்படு :** பிரவேசி. | ... ... | **தளைப்படு :** கட்டுப்படு எனும் ஏவல். |
| **தலைப்படுதல் :** எதிர்ப்படுதல், ஒன்று கூட்டுதல், தலைமையாதல், தொடங்குதல், புகுதல், பெறுதல், முன்னேறுதல், மேற்கொள்ளுதல், வழிப்படுதல். | ... ... | **தளைப்படுதல் :** கட்டுப்படுதல், சிறையாதல். |

**தலையல் :** புதுப்புனல் வரவு, மழைபெய்து விடுகை, முதல் மழை.

... ...

**தலையிடு :** புகு எனும் ஏவல்.

**தலையிடுதல் :** அனுவசியமாகப் பிறர் காரியத்திற் புகுதல், கூட்டுதல், பிரவேசித்தல்.

**தலைவலி :** தலைநோவு, தொந்தரவு.

... ...
... ...

**தலைவைத்தல் :** தலை யிடுதல், நீர் முதலியன பாயத் தொடங்குதல்.

**தல்லு :** புணர்ச்சி.

**தல்லுதல் :** இடித்து நசுக்குதல்.

... ...

**தலையழித்தல் :** அடியோடு கெடுத்தல், தலைமை தீர்த்தல்.

... ...
... ...

**தலைவழி :** நிரம்ப.

**தலைவழிதல் :** நிரம்பி வழிதல்.

**தலைவழித்தல் :** அளவுப்படி தலைமீதாகவுள்ள தானியத்தை வழித்தல், தலைச் சவரம் பண்ணுதல்.

... ...

... ...

... ..

**தளையல் :** கட்டுகை, மறியற் படுத்துகை.

**தளையளித்தல் :** கருணையோடு நோக்குதல், கா வரிசைசெய்தல்.

**தளையிடு :** பிணி எனும் ஏ.

**தளையிடுதல் :** பிணித்தல்.

**தலைவளி :** முதல் அழைப்பு.

... ...
... ...

**தளைவைத்தல் :** உடையார் உத்தியோகங் கொடுத்தல்.

**தள்ளு :** அகற்றுகை, கணக்கிற் கழிவு, கைவிடுகை, நீக்குகை.

**தள்ளுதல் :** அங்கீகரியாதிருத்தல், அமுக்குதல், உபேட்சித்தல், கழித்தல், காலங் கழித்தல், குன்றுதல், கைவிடுதல், கொல்லுதல், தடுமாறுதல், நிராகரித்தல், தவறுதல், தூண்டுதல், தோணி செலுத்துதல், புத்தக இதழ் திருப்புதல், புறம்பாக்குதல், மறத்தல், மறப்பாற் சோர்தல், முன்செல்லுமாறு தாக்குதல், வலியுடைத்தாதல், விலகுதல், வெட்டுதல், வெளியேறுதல்.



**தல்லை :** இளம்பெண், தெப்பம்.

**தவலம் :** ஒரு பாஷாணம்.

**தவலை :** ஒரு பாத்திரம்.

**தவல் :** குறைவு.

... ...

**தறிதலை :** அடங்காதவன்.

**தாலம் :** உண்கலம், உலகம், தட்டம், தேன், நா, பனை, பூமி, யானைக்காது.

**தாலி :** ஒருவகை மண் பாத்திரம், மணமானவளின் அடையாள உரு.

... ...
... ...
... ...

**தவழ் :** நகரு எனும் ஏவல்.

**தவழ்தல் :** நகருதல்.

... . ...

**தாழம் :** அமைதி, ஓசை முதலியவற்றின் தாழ்வு, தாமதம்.

**தாழி :** அரிதாரம், இறந்தோரை அடக்கம் செய்துவைக்கும் பாண்டம், ஒரு கொடி, கடல், சாடி, பரணி, வாயகன்ற

**தள்ளை :** தாய்.

**தவளம் :** வெண்மை.

**தவளை :** தப்பளை.

... ...
... ...

**தறிதளை :** நெசவுத்தறிகட்கு இட்டவரி.

**தாளம் :** கைத்தாளக் கருவி, பாடுகையிற் காலத்தை அறுதியிடும் அளவு.

**தாளி :** கொடி செடி வகை, பனைவகை, மண்ணுற் செய்த விளக்கின் அகல்.

| ல | ழ | ள |
|---|---|---|
| ... ... | சட்டி.<br>... ... | **தாளித்தல் :** கண்டித்தல், கருவங் கொள்ளுதல், குழம்பு நறுமண முண்டாக கடுகு முதலியவைகளை வறுத்து இடுதல், சுண்ணும்பு குழுத்தல், தன் அத்தஸ்த்துக்கு மீறி ஆடம்பரமாக வாழ்தல், புனைந்துரைத்தல். |
| ... ... | **தாழுதல் :** தாழ்தல். | **தாளுதல் :** இயலுதல். |
| **தால் :** தாலாட்டு, தாலப்பருவம், நா. | **தாழ் :** சுவர்ப்புறத்து நீண்ட தாங்குகல், தாழக்கோல், நீளம், வணக்கம். | **தாள் :** ஆதி, ஒற்றைக் காகிதம், கால், தாடை, தாழ்ப்பாள், திறவுகோல், படி, பூ முதலியவற்றின் அடித்தண்டு, மர முதலியவற்றின் அடிப்பகுதி, முயற்சி, விளக்குத்தண்டு, விற்குதை, வைக்கோல். |
| ... ... | **தாழ்தல் :** அமிழ்தல், அழிதல், ஆழ்ந்திருத்தல், ஈடுபடுதல், கீழே தாழ்தல், சாய்தல், தங்குதல், தழைத்தல், தாமதித்தல், தோற்றல், நிலைகெடுதல், நீண்டு தொங்குதல், பதிதல், மனங் குலைதல், | ... ... |



| ல | ழ | ள |
|---|---|---|
| ... ... | மெல்லோசை யாதல், மேலிருந்து விழுதல், வணங்குதல், வளைதல், விரும்புதல்.<br>**தாழ்த்தல் :** தாமதித்தல், தாழச்செய்தல், தாழ்மைப்படுத்துதல், மந்தமாயிருத்தல். | ... ... |
| **திரல் :** காட்டாமணக்கு. | ... ... | **திரள் :** உண்டை, குலை, கூட்டம், சேனை, மிகுதி. |
| **திவலுதல் :** சாதல். | ... ... | **திவளுதல் :** துவளல், மெலிதல். |
| **துலக்கம் :** தெளிவு, பிரகாசம், மெருகு. | ... ... | **துளக்கம் :** அச்சம், அசைவு, ஒலி, ஒளி, சோதிநாள், மனக்கலக்கம். |
| **துலக்கு :** மினுக்கு. | ... ... | **துளக்கு :** அசைவு, வருத்தம். |
| **துலக்குதல் :** தீட்டுதல், பிரகாசிக்கப் பண்ணுதல், மெருகிடுதல், வெளிப்படையாக்குதல். | ... ... | **துளக்குதல் :** அசைத்தல், வணங்குதல், விளக்குதல். |
| **துலங்கு :** தொழுமரம். | ... ... | **துளங்கு :** விளங்கு எனும் ஏவல். |
| **துலங்குதல் :** ஒப்பமிடப்படுதல், கலங்குதல், சிறத்தல், தெளிவாதல், தொங்கியசைத்தல், பிரகாசித்தல், பிரசித்தமாதல். | ... ... | **துளங்குதல் :** அசைதல், ஒலித்தல், தளர்தல், நிலைகலங்குதல், பிரகாசித்தல், வருந்துதல். |

| ல | ழ | ள |
|---|---|---|
| **துலம் :** கனம், துலாநிறை, நிறைகோல், பருத்தி. | … … | **துளம் :** மயிலிறகினடி, மாதுளை. |
| **துலவம் :** பருத்தி. | … … | **துளவம் :** துளசி. |
| **துலி :** பெண்ணாமை. | … … | **துளி :** ஒரு சொட்டளவு, சிறிதளவு, திவலை, துளிக்கை, பெண்ணாமை, மழை, விஷம். |
| … | … … | **துளித்தல் :** சொட்டுதல், துளியாய்த் தெளித்தல், மழைபெய்தல். |
| **துலை :** ஒரு அளவு, ஏற்ற மரம், ஒப்பு, கனம், துலாராசி, தூரப்பிரதேசம், தோட்டம், நிறைகோல், மடைமுகம், வெகுதூரம். | **துழை :** துழாவு எனும் ஏவல். | **துளை :** உட்டொளை, சுருட்சி, துவாரம், மூங்கில், வாயில். |
| **துலைதல் :** அழிதல். | **துழைதல் :** துடுப்பால் துழாவிச் செலுத்துதல். | **துளைதல் :** அழுந்திக்கிடத்தல், நீரில் விளையாடுதல். |
| **துலைத்தல் :** அழித்தல். | … … | **துளைத்தல் :** ஊடுருவுதல், காரிய விவரம் உசாவுதல், துவாரஞ் செய்தல், வருத்துதல். |
| **துல்லம் :** பேரொலி. | … … | **துள்ளம் :** சிறுதுளி. |
| **துவல் :** அருச்சிக்கும்பூ, விரைவு. | … … | **துவள் :** ஒசிவு, குற்றம். |
| **துவல்(லு)தல் :** சாதல், துளித்தல், நிறைதல், விரைதல். | … … | **துவள்(ளு)தல் :** அடர்தல், ஒசிதல், ஒட்டுதல், ஒழிதல், கசங்குதல், துடித்தல், |



| ல | ழ | ள |
|---|---|---|
| | | தொடுதல், புணர்தல், நெளிதல், மெல்லியதாயிருத்தல், வருந்துதல், வாடுதல். |
| **துவலை ;** கூட்டம், நீர்த்திவலை, மழைத்தூவல். | … … | **துவளை :** மேற்பூச்சு, வாட்டம், வேப்பெண்ணெய் முதலியவற்றில் தோய்த்திடும் ஒத்தடம். |
| **தூலம் :** ஆகாயம், இலவு, உத்திரம், கண்ணுக்குப் புலனாவது, கோரை, நஞ்சு, நெற்போரடிக்குங் கோல், பஞ்சு, பருத்தி, பருமை, பொதுமை. | … … | **தூளம் :** விபூதியை நீரிற் குழையாது பூசுகை. |
| **தூலி :** எழுதுகோல். | | **தூளி :** ஆர்ப்பு, ஏணை, குதிரை, டோலி, புழுதி, பூந்தாது. |
| **தூலித்தல் :** பருத்தல், பெருகுதல். | … … | **தூளித்தல் :** பருத்தல், விபூதியை உத்தூளனஞ் செய்தல். |
| … … | **தெழி :** ஒலி. | **தெளி :** ஒளி, சாறு, தெளிவு, விதைப்பு. |
| … … | … … | **தெளிதல் :** அமைதியுறுதல், அறிதல், ஆராய்தல், இலாபங்காணுதல், ஐயநீங்குதல், ஒழிதல், ஒளிர்தல், குணப்படுதல், செழித்தல், துளைத்தல், |

| ல | ழ | ள |
|---|---|---|
| | | தெளிவாதல், நம்புதல், முடிவுக்கு வருதல், வெண்மையாதல். |
| ... ... | **தெழித்தல்** : அடக்குதல், அதட்டுதல், ஆரவாரம், ஒலித்தல், பிரித்தல், முழக்குதல், வருத்துதல். | **தெளித்தல்** : உருக்கியோட வைத்தல், ஊடலுணர்த்தல், கொழித்தல், சாறு வடித்தல், சூளுறுதல், துப்புரவாக்குதல், தூவுதல், தெளிவித்தல், நீக்குதல், நிச்சயித்தல், புடைத்தல், விதைத்தல், வெளிப்படுத்துதல். |
| ... ... | **தெழிப்பு** : ஆரவாரம். | **தெளிப்பு** : கொழிக்கை, சுத்தஞ்செய்கை, தூவுகை, வடிக்கை, விதைப்பு. |
| **தெல்** : தெல்லுக்காய். | ... ... | **தெள்** : ஒருவகைப் பூச்சி. |
| **தெல்லு** : தெல்லுக்காய், நெடும்பாத்தி, நெடுங்கிடங்கு, விளையாட்டு வகை. | ... ... | **தெள்ளு** : இரிக்கி, ஒருவகைப் பூச்சி. |
| ... ... | ... ... | **தெள்ளுதல்** : அலைகொழித்தல், அனுபவமுதிர்தல், ஆராய்தல், கொழித்தல், தெளிவாதல், புடைத்தல். |
| **தொலி** : உமி, தோல். | ... ... | **தொளி** : சேறு, வீதி. |
| ... ... | **தொழிதல்** : சிதறுதல். | ... ... |



| ல | ழ | ள |
|---|---|---|
| **தொலித்தல்** : உமி அல்லது தோடுபோக இடித்தல், உரித்தல், புடைத்தல். | **தொழித்தல்** : ஒலித்தல், கோபித்தல். | ... ... |
| **தொலை** : அக்கரைச் சீமை, அழிவு, ஒப்பு, தூரம். | ... ... | **தொளை** : துவாரம், மூங்கில். |
| **தொலைதல்** : அழிதல், காணமற்போதல், சோர்தல், தோற்றல், நீங்குதல், முடிதல், முற்றுதல், வழி முதலியன கழிதல். | ... ... | ... ... |
| **தொலைத்தல்** : அழித்தல், கழித்தல், கெட்டுப் போக்குதல், சிதைத்தல், தோற்பித்தல், நீக்குதல், முடித்தல், முற்றுப்பெறச் செய்தல். | ... ... | **தொளைத்தல்** : துளையிடுதல். தொந்தரவு செய்தல், விஷயம் தெரிதற்பொருட்டு ஆழம் பார்த்தல். |
| **தொல்லை** : செயல், துன்பம், பழமை. | ... ... | **தொள்ளை** : அறியாமை, குழி, குற்றம், துளை, துளையுடைப்பொருள், மரக்கலம், மரக்கால். |
| **தோலன்** : அற்பன். | **தோழன்** : நண்பன். | ... ... |
| **தோலி** : அரக்கு, உபயோகமற்றவள், டோலி, பழத்தோல், மீன்வகை. | **தோழி** : அரக்கு, செவிலித்தாயின் மகள், தேவி, பணிசெய்பவள், பாங்கி. | **தோளி** : அரக்கு, அவுரி, டோலி, மீன்வகை. |
| **தோல்** : அழகு, ஒரு நூல், சருமம், துரதிருஷ்டம், துருத்தி, தோல்வி, பக்கரை, புகழ், புறணி, | ... ... | **தோள்** : கை, தொளை, புயம். |

| ல | ழ | ள |
|---|---|---|
| மூங்கில், வார்த்தை, விதையின் மேற்றோல், யானை. | | |
| **தோல்தல் :** (தோற்றல்) அபசயப்படுதல், இணங்குதல், இழத்தல், ஒப்பிற்குழ்தல். | … … | **தோள்(ளு)தல் :** துளைத்தல், தோண்டுதல், நீக்குதல். |
| **நகல் :** சிரிக்கை, நட்பு, பரிகாசம், பிரகாசம், பிரதி, மகிழ்ச்சி. | … … | … … |
| … … | **நகழ்தல் :** துன்பப் படுதல், நகர்ந்து செல்லுதல். | **நகள்(ளு)தல் :** நகர்ந்து செல்லுதல், நசுக்குண்ணுதல். |
| **நரலை :** ஒலி, கடலை, மதிலுறுப்புகளொன்று. | … … | **நரளை :** பிரண்டைச்செடிவகை. |
| **நலம் :** அழகு, அன்பு, ஆசை, இன்பம், உபகாரம், உயர்வு, எருக்குவிதை, கண்ணோட்டம், குணம், சுக்கு, சுகவாழ்வு, செம்மைநிறம், நன்மை, நிறம், பயன், புகழ், விருச்சிகராசி. | … … | **நளம் :** அகலம், தாமரை, நளவசாதி. |
| **நலி :** நோவு, மெலிவு. | … … | **நளி :** அகலம், இங்கிதம், குளிர்ச்சி, கூட்டம், செருக்கு, செறிவு, தேள், பெருமை. |
| **நலிதல் :** அழிதல், சரிகை, சரிதல், சுவரிதம், தோற்றல், நெருக்கி வருத்துதல், | … … | **நளிதல் :** ஒத்தல், செறிதல், பரத்தல். |



| ல | ழ | ள |
|---|---|---|
| மெலிகை, மெலிதல், வருந்துதல். | | … … |
| **நலித்தல் :** துன்புறுத்தல். | … … | |
| **நலிவு :** கேடு, துன்பம். | … … | **நளிவு :** செறிவு. |
| **நலுங்கு :** மணமக்களுக்கு நலங்கு நடத்துதல். | **நழுங்கு :** வழுவென்னேவல். | **நளுங்கு :** அழுங்கு, கிளிஞ்சில். |
| … … | **நழுங்குதல் :** கீறப்பெறுதல், மழுங்குதல், வழுவுதல். | … … |
| **நல் :** நல்ல, வறுமை. | … … | **நள் :** இரவு, உச்சிப்போது, செறிந்த, திருவோணம், நடு. |
| … … | … … | **நள்(ளு)தல் :** அடைதல், நட்புக்கொள்ளுதல், விரும்புதல். |
| **நல்லார் :** கற்றவர், நற்குணமுடையோர், பெரியார், மகளிர். | … … | **நள்ளார் :** பகைவர். |
| **நல்லி :** பெண், முதுகெலும்பு, விலங்குக் காலின் எலும்பு. | … … | **நள்ளி :** உறவு, கர்க்கடராசி, நண்டு. |
| **நாலம் :** தாமரைப்பூ முதலியவற்றின் காம்பு. | … … | **நாளம் :** உட்டுளை, தண்டு, நரம்பு, பொன்னரிதாரம். |
| | | … … |
| **நாலல் :** தணக்கு. | **நாழல் :** ஞாழல். | |
| **நாலி :** கந்தைத்துணி, கார்த்திகைப்பூ, முத்து. | **நாழி :** அம்புருத்தூணி, உட்டுளைப்பொருள், ஒருபடி, காற்படி, நாழிகை, பூரட்டாதி. | **நாளி :** கள், நாய், நாழிகை. |

| ல | ழ | ள |
|---|---|---|
| **நாலிகம் :** எருமை, காகம், தாமரை. | ... ... | **நாளிகம் :** இலாமிச்சை, கோட்டை மதிற்சுவரில் அமைக்கப்படும் எறி படைவகை, தாமரை, வள்ளை. |
| **நாலிகை :** மூங்கில். | **நாழிகை :** அறுபது விநாடி கொண்ட நேரம், உத்திரட்டாதி. | ... ... |
| **நால் :** நான்கு. | **நாழ் :** இல்லாததை சொல்லுகை, குற்றம், சாமர்த்தியம், செருக்கு, நாள். | **நாள் :** அன்றலர்ந்த மலர், ஆயுள், இளமை, காலம், காலை, திதி, தினம், நட்சத்திரம், நல்லநாள், புதுமை, முற்பகல். |
| **நால்(லு)தல் :** கழுத்தில் சுருக்கிட்டுக் கொள்ளுதல், தொங்குதல். | ... ... | ... ... |
| **நீலம் :** இருள், கண்ணிலிடும் மை, கருங்குவளை, கறுப்பு, துரிசு, நவமணியிலொன்று, நீல ஆடை, நீலநிறம், நீலச்சாயம், பழைய நாணயம், பனைமரம், மாணிக்கவகை, விஷம். | ... ... | **நீளம் :** தாமதம், தூரம், நெடுமை, பறவைக்கூடு. |
| **நீலி :** அவுரி, கருநிறம், கொடியவள், துரிசு, நீலாம்பரம், பாம்பின் நச்சுப் பற்களில் ஒன்று, பார்வதி, பெண்பேய். | ... ... | **நீளி :** நெடியது, நெடியவன். |



| ல | ழ | ள |
|---|---|---|
| **நீல் :** காற்று, நீலம். | ... ... | **நீள் :** உயரம், நீளம். |
| | **நுழை :** குகை, சிறுவழி, துவாரம், நுண்மை, பலகணி, புத்திநுட்பம். | **நுளை :** ஈனம், குருடு, வலைச்சாதி. |
| | [illegible] படுதல், கடத்தல், கூரிதாதல், சாடைசொல்லுதல், சேர்ந்துகொள்ளுதல், நுண்மையாதல், பதிதல், புகுதல், மட்டுக்கட்டுதல். | ... ... |
| ... ... | **நுழைத்தல் :** புகுத்துதல். | ... ... |
| **நோலை :** எட்கசிவு, எள்ளுருண்டை. | ... ... | **நோளை :** பிணியுண்ட நிலை. |
| **பங்காலி :** வெளவால் | ... ... | **பங்காளி :** உடன்கூட்டாயிருப்பவன், தயாதி. |
| **பசலி :** நிலவரிச் சகாப்தம். | ... ... | **பசளி :** பசளைச்செடி, மடைமுகம். |
| **பசலை :** அழகுதேமல், இளமை, கவலையின்மை, பொன்னிறம், மனச்சஞ்சலம், வருத்தம். | ... ... | **பசளை :** உரம், கீரைச்செடி வகை, குழந்தை. |
| **பசல் :** சிறுவன். | ... ... | **பசள் :** பலாமரம். |
| **பயலி :** பசளை. | ... ... | **பயளி :** தலைவன் பிரிவால் அடையும் நோய். |
| **பயலை :** பயளி. | ... ... | **பயளை :** சிற்றுமுட்டிவேர். |
| **பலகம் :** அடுக்கு, கேடகம், நாற்காலி. | ... ... | **பளகம் :** பவளம், மலை. |

... ...

... ...

**பலம் :** ஆயுதநுனி, இலை, உறுதி, கலப்பையின் கொழு, கனி, காய், கிழங்கு, கேடகம், செல்வாக்கு, நிமிஷம், நிறைவகை, நெற்றி, படை, பயன், பருமன், பொன், மகளிர் சூதகம், மாமிசம், வட்டத்தின் பரப்பு, வலி, வேகம்.

**பலி :** கந்தகம், கப்பம், காக்கை, காக்கை முதலியனவற்றிற்கு உண்ண இடுஞ்சோறு, காய்கனிகள் உள்ள மரம், சாம்பல், சோறு, திருநீறு, தேவர்க்கிடும் உணவுப் பொருள், பலிப்பது, பலியிடுதற்குரிய பிராணி முதலியன, பிச்சை, மரவகை.

**பலிதம் :** இலாபமாகை, கனிமரம், நரை, பலிக்கை, பயன்.

**பழகு :** பழகு எனும் ஏவல்.

**பழகுதல் :** இணக்கமாதல், உறவுகொள்ளுதல், ஊடாடுதல், சாதுவாதல், நாட்படுதல், பயிலுதல்.

**பழம் :** அனுகூலம், ஆட்டக்கெலிப்பு, கனி, முக்கால், வயது முதிர்ந்தோன்.

**பழி :** அலர், ஒன்றுக்கும் உதவாதவன், குறை, குற்றம், சலஞ்சாதிப்பு, நிந்தை, பாவம், பொய், விரோதம்.

... ...

**பளகு :** குற்றம்.

... ...

... ...

... ...

**பளிதம் :** ஒருபேரெண், கற்பூரம், பச்சடி.



**பலித்தல் :** கொடுத்தல், செழித்தல், நேர்தல், பயன்விளைத்தல், மிகுதல்.

**பலிப்பு :** சித்தி, நன்ருய் விளையுந்தன்மை, பயன், வினைப்பயன்.

**பலு :** பலகறை.

... ...

**பலை :** திரிபலை, பழம்.

**பல் :** எயிறு, சீப்புப்பல், தேங்காய் உள்ளீட்டின் சிறு துண்டு, நங்கூர நாக்கு, பூண்டு முதலியவற்றின் உள்ளீடு, யானை பன்றி முதலியவற்றின் கொம்பு, வாள் முதலியவற்றின் கூர்.

**பழித்தல் :** நிந்தித்தல், புறங்கூறுதல்.

**பழிப்பு :** குறளை, குறை, குற்றம், நிந்தனை.

**பழு :** ஏணியின் படிச்சட்டம், சட்டம், செந்நிறம், பேய், விலாவெலும்பு.

**பழுத்தல் :** அனுகூலப்படுதல், குழைதல், கைவருதல், செழித்தல், நிறம் மாறுதல், பக்குவமாதல், பரு முதலியன முற்றுதல், பழமாதல், பழுப்பு நிறமாதல், முதிர்தல், மூப்படைதல், மனங்கனிதல், மிகுதல்.

**பழை :** கள்.

... ...

... ...

... ...

**பளு :** கடுமை, கனம்.

... ...

**பளை :** விலங்கு முதலியவற்றின் வளை.

**பள் :** நாடகப் பிரபந்தவகை, பள்ளச்சாதி.

| | | |
|---|---|---|
| **பல்கு :** மிகுவெனும் ஏவல். | … … | **பள்கு :** பதுங்கு எனும் ஏவல். |
| **பல்குதல் :** பலவாதல், மிகுதல். | … … | **பள்குதல் :** பதுங்குதல். |
| **பல்லம் :** அம்பு, ஆயுதவகை, ஒரு பேரெண், கரடி, குதிரைக்கலனை, சேங்கொட்டை. | … … | **பள்ளம் :** ஆழம், குழி, தாழ்ந்த நிலம், தாழ்வு. |
| **பல்லி :** கிராமத்தின் அரைக்கூறு, சிறுபிராணிவகை, பலுகுக்கட்டை, பூடுவகை, பெரிய பல்லுடையவள், வெற்றிலைக் கணுவில் அரும்புங்குருத்து. | … … | **பள்ளி :** அறச்சாலை, அறை, இடம், இடைச்சேரி, குறும்பர், சாலை, சைனபௌத்த கோயில், தூக்கம், நகரம், பள்ளசாதிப்பெண், பள்ளிக்கூடம், மக்கட்படுக்கை, முனிவர் ஆச்சிரமம், விலங்கு துயிலிடம். |
| **பல்லு :** எயிறு. | … … | **பள்ளு :** நாடகப் பிரபந்த வகை. |
| **பாதாலம் :** பாதாளம், வடவைத்தீ. | … … | **பாதாளம் :** கீழ்உலகம், நரகம், பிலம். |
| **பாலம் :** நீரின் அணைச்சுவர், நெற்றி, பூமி, மரக்கொம்பு, மழு, வாராவதி. | … … | **பாளம் :** உலோகக்கட்டி, சீலையின் கிழிவு, தகட்டு வடிவம், தோலுரிவு, பளபளப்பு, வெடித்த தகட்டுத் துண்டு, வெடியுப்பு. |
| **பாலாக்குதல் :** சாதுவாக்குதல், பங்கிடுதல். | **பாழாக்குதல் :** அழித்தல், கெடுத்தல். | … … |
| **பாலி :** ஆலமரம், கள், செம்பருத்தி, பாலாறு, பௌத்த சமய நூல்கள் எழுதப்பட்ட பழைய பாஷை. | **பாழி :** அகலம், ஆகாயம், இடம், இறங்குதுறை, எலிவளை, கடல், குகை, கோயில், சிறுகுளம், சுபாவம், சடை, சொல், நகரம், பகைவரூர், ப்ாசறை, பெருமை, போர், மக்கள் துயிலிடம், மருத நிலத்தூர், முனிவர்வாசம், வலிமை, விலங்கு துயிலிடம், வெறுமை. | **பாளி :** அடையாளம், பணித்தூசு, விதானச்சீலை. |



| | | |
|---|---|---|
| **பாலிதம் :** பெருந்தேக்கு. | … … | **பாளிதம் :** குழம்பு, பாற்சோறு. |
| **பாலித்தல் :** காத்தல், கொடுத்தல், விரித்தல். | … … | … … |
| **பாலை :** ஒருவகையாழ், குழந்தை, சிவசக்தி, பதினாறு ஆண்டுக் குட்பட்ட பெண், பாலைநிலம், பெண், மரவகையில் ஒன்று. | … … | **பாளை :** கமுகு தென்னை பனை முதலியவற்றின் பாளை, பதர். |
| **பால் :** இடம், உரிமை, ஊழ், குணம், குலம், சாறு, தகுதி, திக்கு, பகுதி, பக்கம், பாதி, பிரித்துக் கொடுக்கை, முலைப்பால், வரிசை, வெண்மை. | **பாழ் :** ஆகாயம், இழிவு, இன்மை, ஒன்றுமில்லா இடம், குற்றம், கெடுதி, கேடு, தரிசுநிலம், நட்டம், நாசம், புருடன், மூலப் பிரகிருதி, விளையாநிலம், வீண், வெறுமை. | … … |
| … … | **பாழ்த்தல் :** அழிவடைதல், சீர் | … … |

| ல | ழ | ள |
|---|---|---|
| | குன்றுதல், பயனறுதல். | |
| **பிங்கலம் :** பொன், பொன்னிறம், வடக்கு. | ... ... | **பிங்களம் :** களிம்பு, பேதம், வஞ்சகம். |
| **பிரவாலம் :** இளந்தளிர். | ... ... | **பிரவாளம் :** பவளம். |
| ... ... | ... ... | **பிள :** பிளவெனும் ஏவல். |
| **பிலத்தல் :** பலத்தல். | ... ... | **பிளத்தல் :** ஊடுருவப்படுதல், ஊடுருவுதல், கட்டுக்குலைத்தல், திறந்திருத்தல், பாகுபடுத்துதல், பிரிவுபடுதல், போக்குதல், போழ்தல், போழப்படுதல், மனமுடைதல், வெடிபடுதல், வெடிக்கச்செய்தல், வெல்லுதல், |
| **பிலா :** பலா. | **பிழா :** இறைகூடை, கொள்கலம், தட்டுப்பிழா. | **பிளா :** பிழா. |
| **பிலி :** பூனைக்காஞ்சொறி. | **பிழி :** கள். | ... ... |
| ... ... | **பிழிதல் :** கையால் இறுக்கிச் சாறு எடுத்தல். | ... ... |
| **பிலிற்றுதல் :** கொப்பளித்தல், தூவுதல், வெளிவிடுதல். | ... ... | **பிளிற்றுதல் :** ஆரவாரித்தல், கக்குதல், வெகுளுதல். |
| **பில்லை :** வில்லை (தகட்டு வட்டமான பொருள்). | ... ... | **பிள்ளை :** மகன், சில விலங்கு பறவை மரம் முதலியவற்றின் இளமைப் பெயர். |
| ... ... | **பிறழ் :** மாறுதல். | **பிறள் :** மற்றவள். |



| ல | ழ | ள |
|---|---|---|
| ... ... | **பீழை :** துன்பம். | **பீளை :** கண்மலம். |
| **பீல் :** முலைப்பாலின் பீச்சுத் துளி. | ... ... | **பீள் :** இளங்கதிர், இளமை, கரு. |
| ... ... | **பீழ்தல் :** பிடுங்குதல். | ... ... |
| **புகல் :** இருப்பிடம், உடம்பு, உபாயம், கொண்டாடுகை, சரண், சொல், தானியக்குதிர், துணை, பற்றுக்கோடு, பாடுமுறை, புகுகை, போக்கு, விருப்பம், வெற்றி. | **புகழ் :** அருஞ்செயல், கீர்த்தி, துதி, வாகை. | ... ... |
| **புகல்(லு)தல் :** ஒலித்தல், சொல்லுதல், தெரிதல், மகிழ்தல், விரும்புதல். | **புகழ்தல் :** துதித்தல், பாராட்டுதல். | ... ... |
| **புலக்கம் :** வழக்கம். | **புழக்கம் :** அறிமுகம், இடைவெளி விட்டதன்மை, தோற்றம், பழக்கம். | ... ... |
| **புலம் :** அறிவு, இடம், இந்திரிய உணர்ச்சி, திக்கு, வயல். | ... ... | **புளம் :** அண்ணம், குதிரை நடையிலொன்று. |
| **புலி :** உண்ணுக்கு, சிங்கம், சூதுகருவிகளிலொன்று, நால்வகைச் சாந்துள் ஒன்று, மயிர்ச்சாந்து, விலங்குவகை, வேங்கை. | ... | **புளி :** தித்திப்பு, புளிங்கறி, புளிச்சுவை, மரவகை. |
| ... ... | ... ... | **புளித்தல் :** கன்றுதல், கைக்கெட்டாதென்ற கார |

| ல | ழ | ள |
| --- | --- | --- |
| | | ணத்தால் விடப்படுதல், செறிதல், தன்மை திரிதல், புளிப்பேறுதல், வெறுத்துப் போதல், வேலைக்கு உதவுமாறு சுண்ணம்பு முதலியவை களிப்பாக இருத்தல். |
| **புலு :** பத்தைக் குறிக்கும் குழூஉக்குறி. | **புழு :** கரு, கிருமி. | ... ... |
| ... ... | **புழுகு :** அம்புத்தலை, சுத்தப் பொய், புழுகுபூனை, வாசனைப் பண்டவகை. | **புளுகு :** கற்பனை, சுண்ணம்பு முதலியவை, சுத்தப் பொய். |
| ... ... | **புழுகுதல் :** புளுகுதல். | **புளுகுதல் :** மெய்போற் பொய் கூறல். |
| ... ... | **புழுத்தல் :** கருத்தரித்தல், தூஷித்தல், பயனற்றதாதல், புழுச் செனித்தல், மிகுதல். | ... ... |
| **புலை :** அசுத்தம், இழிவு, ஊன், கீழ்மகன், தீட்டு, தீநாற்றம், தீயநெறி, பொய், வியபிசாரம். | **புழை :** ஏவறை, ஒடுக்கவழி, காட்டுவழி, குழாய், சாளரம், சிறுவாயில், துளை, நரகம், வாயில். | **புளை :** அலங்கரிஎனும் ஏவல். |
| ... ... | ... ... | **புளைதல் :** அலங்கரிக்கப் படுதல். |
| ... ... | **புழைத்தல் :** துளையிடுதல். | **புளைத்தல் :** அலங்கரிக்கப்படுதல். |
| **புல் :** அற்பம், அனுடம், இழிவு, ஒருசார் விலங் | ... ... | **புள் :** அவிட்டநாள், கிட்டி, கிட்டிப்புள், கைவளை, |



| ல | ழ | ள |
| --- | --- | --- |
| கின் உணவான பூடுவகை, கம்பு, கபிலநிறம், சிவல், தாவரவர்க்கம், திரணசாதி, தென்னை, பனை, புணர்ச்சி, புதர், புலி, புல்லரிசி, புன்செய்த்தானியம் | | பறவை, பறவை நிமித்தம், மதுபானம், வண்டு. |
| **புல்லம் :** இடபராசி, எருது, பூ, வசைமொழி. | ... ... | **புள்ளம் :** அரிவாள்மணை, அரிவாள்வகை, கொடுவாள். |
| **புல்லி :** புறவிதழ், பூவிதழ். | ... ... | **புள்ளி :** ஆள், ஆய்தவெழுத்து, இமயமலை, எழுத்தின்மேலிடுங்குத்து, கவற்றின் கட்டம், நண்டு, பல்லி, பெருந்தொகை, பேரேடு, பொட்டுக்குறி, மதிப்பு, மெய்யெழுத்து. |
| **புல்லியம் :** ஒரு கொடி. | ... ... | **புள்ளியம் :** சிறுகுறிஞ்சா (ஒரு கொடி). |
| ... ... | **பூவாழை :** வாழைமர வகை. | **பூவாளை :** மீன்வகை. |
| ... ... | **பூழை :** சிறுவாயில், துவாரம், மலைக்கணவாய். | **பூளை :** இலவு, செடிவகை, பீளை, வெற்றிப்பூ. |
| **பூல் :** ஒரு செடி. | **பூழ் :** காணங்கோழி, துவாரம். | **பூள் :** ஆண்குறி. |
| **பேல் :** கால் நரம்பில் உண்டைகட்டும் குதிரை நோய்வகை. | **பேழ் :** பெருமை. | ... ... |

**பொலி :** தானியமாகக் கொடுக்கும் வட்டி, தூற்று நெற்குவியல், தூற்றிய நெல், புணர்ச்சி (மிருகச் சேர்க்கை), விளைவின் அளவு.

**பொலிதல் :** சம்பவித்தல், சிறத்தல், செழித்தல், நீடு வாழ்தல், புணர்தல், பெருகுதல், மங்கலமாதல், மிகுதல், விளங்குதல்.

... ...

**பொலிப்பு :** புணர்ச்சி.

**பொலிவு :** அழகு, எழுச்சி, செழிப்பு, புணர்ச்சி, தோற்றப் பொலிவு, பொன், மிகுதி, முகமலர்ச்சி, வெறுந்தோற்றம்.

**பொல் :** பதர்.

**பொழி :** உரிக்கப் பட்டது, கடலுக்கும் கழிநீர்நிலைக்கும் இடையிலுள்ள சிறு கரை, கணு, வயல் வரம்பு.

**பொழிதல் :** உதாரமாய்க் கொடுத்தல், தங்குதல், தட்டுத் தடங்களின்றிப் பேசுதல், நிறைதல், நிறைந்து ஒழுகுதல், பெய்தல், மிகச் செலுத்துதல்.

... ...

**பொழிப்பு :** அநுமானம், குறிப்பு, நூற்பதிகம், பொருளைத் திரட்டிக் கூறும் உரை (பொழிப்புரை).

**பொழிவு :** ஆதாயம், நிறைவு, பொழிகை, விருத்தி.

... ...

**பொளி :** உளியாலிட்டதுளை, பாய் முடைவதற்கு வகிர்ந்துவைக்கும் ஓலை, மண்வெட்டியாற் புல்லோடு சேர்த்தெடுத்த மண், மண் வெட்டியின் வெட்டு.

**பொளிதல் :** இடித்தல், உளியாற் கொத்துதல், ஓட்டையாதல், துளைசெய்தல், பள்ளமாதல், பிளத்தல்.

**பொளித்தல் :** கிழித்தல், துளை செய்தல்.

... ...

**பொளிவு :** பொளிதல்.

**பொள் :** உட்டொளை, விரைவுக் குறிப்பு.



**பொல்லு :** பதர்.

**பொல்லுதல் :** துளைத்தல்.

8

... ...

**போலி :** ஒப்புடைய — வன், -வள், -து, ஒப்பு, கள்ளப் பொருள், சாயல், நியாயாபாசம், வஞ்சகம்.

**போல் :** அசைச்சொல், உவம உருபு, உள்ளீடில்லாதது, படை, பதர், பொய், மூங்கில், வாள், வெற்றி.

**போல்(லு)தல் :** இணையொத்தல், ஒத்தல்.

**மகிலம் :** மயிலிறகு.

**மலை :** ஈட்டம், பருவதம், போர்த்தொழில், மிகுதி.

**மலைதல் :** ஒத்தல், எதிர்த்தல், சூடுதல், பகைத்து மாறுபடுதல், பறித்தல், மயங்குதல், மேற்கொள்ளுதல், வாதாடுதல்.

... ...

... ...

**போழம் :** மாறுபடுஞ் சொல்.

... ...

**போழ் :** தகடு, துண்டம், தோலால் அமைந்தவார், பிளவு.

**போழ்தல் :** அழித்தல், ஊடுருவிச் செல்லுதல், பிரிவுபடுதல், பிளத்தல், பிளவுபடுதல்.

**மகிழம் :** மரவகை.

**மழை :** கருமை, குளிர்ச்சி, மிகுதி, மேகத்தினின்று பொழியும் நீர்.

... ...

... ...

**பொள்(ளு)தல் :** கிழிதல், கொப்புளம் உண்டாதல், துளைத்தல், பொளித்தல்.

**போளம் :** நிலக்கடம்பு, வாசனைப் பண்டவகை.

**போளி :** கோதுமைமாவினிற் செய்யப்பட்ட பணியார வகை, மூடன்.

... ...

... ...

... ...

... ...

... ...

| ல | ழ | ள |
|---|---|---|
| **மலைத்தல் :** பிரமித்தல், பொருதல், மயங்குதல், மாறுபடுதல், வருத்துதல். | **மழைத்தல் :** கருநிற மாதல், குளிர்தல், மழை நிறைந்திருத்தல். | ... ... |
| **மல்லம் :** கதுப்பு, கிண்ணம், தட்டு, பள்ளியறை, மல்யுத்தம், வலிமை, யாகசேடம். | ... ... | **மள்ளம் :** வலிமை. |
| **மல்லல் :** அழகு, செல்வம், பொலிவு, மிகுதி, வலி, வளம். | ... ... | **மள்ளல் :** வலிமை. |
| **மல்லன் :** பெருமையிற் சிறந்தோன், மற்போர் செய்வோன். | ... ... | **மள்ளன் :** இளைஞன், குறிஞ்சி நிலத்தில் வாழ்வோன், திண்ணியோன், படைத்தலைவன், படைவீரன், மருதநிலத்தில் வாழ்வோன். |
| **மாலம் :** குங்குமம், பேய். | ... ... | **மாளம் :** கஸ்தூரி. |
| **மாலிகை :** மாலை, வரிசை. | ... ... | **மாளிகை :** அரண்மனை, கோயில், மாடமுள்ள பெருவீடு, வீடு. |
| **மாலை :** அந்திப் பொழுது, இயல்பு, இரா, இருள், குணம், குற்றம், சமயம், தொடுக்கப்பட்டது, தொடுத்த பூந்தொடை, பாசம், பிரபந்தவகை, பெண், மாதரணிவடம், வரிசை, விறலி. | **மாழை :** அழகு, இளமை, உலோகக்கட்டி, ஓலை, திரட்சி, நீண்டமரவகை, பேதைமை, பொன், மாதர் கூட்டம், மாமரம், மாவடு. | **மாளை :** புளியம்பட்டை. |



| ல | ழ | ள |
|---|---|---|
| **மால் :** அரண்மனை, அரசிறைவகை, அருகன், ஆசை, இந்திரன், இலாயம், எல்லை, எழுதகக் கருவி, கண்ணேணி, கருமை, காமம், காற்று, காளவாய், செங்கற்கட்டளை, சொத்து, திருமால், பழைமை, புதன், பெருமை, பெருமையுடையவன், மயக்கம், மலை, மாதிரி, மேகம், வள்மை, விஷ்ணுகரந்தை. | ... ... | **மாள் :** சா எனும் ஏவல். |
| **மால்(லு)தல் :** எழுதகம் அமைத்தல், மயங்குதல், மாட்சிப்படுதல். | ... ... | **மாள்(ளு)தல் :** அழிதல், இயலுதல், கழிதல், சாதல். |
| **மிலை :** சூட்டு எனும் ஏவல். | ... ... | **மிளை :** கட்டுவேலி, காவல், காவற்காடு, குறுங்காடு, சிறுதூறு. |
| **மிலைதல் :** சூடுதல். | ... ... | ... ... |
| **மிலைத்தல் :** கனைத்தல், மயங்குதல். | ... ... | ... ... |
| **முக்கால் :** ஒன்றில் நாளில் மூன்று பாகம், ஒருவகைச் சந்தம், திரிகால சந்தி, மும்முறை, மூன்றுவது முறை. | **முக்கால் :** மூன்று கோவையாலான முத்துவடம். | ... ... |

| | | |
|---|---|---|
| **முக்குலம் :** இராஜகுலம். | ... ... | **முக்குளம் :** கங்கை யமுனை சரசுவதி நதிகள் கூடுமிடம், பூராடம். |
| **முதல் :** அடிப்பாகம், ஆதி, இசைப்பாட்டுள் ஒன்று, இடம், இடம் முதலியவற்றில் முதலாயிருப்பது, காரணம், கிழங்கு, சிலாக்கியம் அல்லது ஏற்றம், செலவுக்காகச் சேமிக்கும் பொருள், சொத்தின் கொள்முதல் விலை, பிண்டப்பொருள், மரமுதலிய வற்றினடி, மூலதனம், விசேடியம், வேர். | ... ... | **முதள் :** மொக்கு. |
| **முப்பலம் :** திரிபலை. | **முப்பழம் :** மா பலா வாழைக் கனிகள். | ... ... |
| **முப்பால் :** அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று பகுப்புகள், திருக்குறள். | **முப்பாழ் :** மூன்றுவகையான நிலக்கேடு, (குடி, வெயில் வெள்ளம்). | ... ... |
| **முரல் :** ஒலி, கதறு, பாடு, மீன்வகை. | ... ... | **முரள் :** இப்பிவகை. |
| ... ... | **முழவு :** குடமுழா, தம்பட்டம், பாத்திர முதலியன வார்ப்பதற்குரிய கருவி, பால்கறத்தற்குரிய பாத்திரம், முரசு. | **முளவு :** முட்கோல், முள்ளம் பன்றி. |



| | | |
|---|---|---|
| ... ... | **முழவுதல் :** நெருங்கிப் பழகுதல். | ... ... |
| ... ... | **முழா :** முழவு. | **முளா :** முள்ளங்கிச் செடி, முள்ளம்பன்றி. |
| ... ... | **முழி :** எலும்புப்பூட்டு, விழி. | **முளி :** உடல்மூட்டு, உலர்ச்சி, கணுக்கால், செம்முள்ளிச்செடி, மரக்கணு, வற்றியபொருள், வாட்டம். |
| ... ... | **முழிதல் :** உமிழ். | **முளிதல் :** உலர்தல், கெடுதல், தோய்தல், பொங்குதல், முற்றுதல், வேதல். |
| ... ... | **முழித்தல் :** விழித்தல். | **முளித்தல் :** உலர்த்தல், காய்தல், வறத்தல். |
| ... ... | **முழு :** எல்லாம், பருத்த. | **முளு :** பொங்குஎனும் ஏவல். |
| ... ... | **முழுதல் :** முழுகுதல். | **முளுதல் :** பொங்குதல். |
| ... ... | **முழுத்தல் :** முழுமையாதல். | ... ... |
| **முலை :** ஸ்தனம். | **முழை :** குகை, துடுப்பு. | **முளை :** இளமை, ஒரு பழைய நாணயம், கதவு முதலிய வற்றின் குடுமி, குறுந்தறி, தண்டாயுதம், திரிகையின் கைப்பிடி, புண்முளை, மகன், மரக்கன்று, முத்திரையச்சு, மூளை, மூங்கில், மூலமுளை, வித்தினின்று வெளிப்படுவது. |
| ... ... | **முழைதல் :** நுழைதல். | **முளைதல் :** வித்தினின்று வெளிப்படுவது. |

| ல | ழ | ள |
|---|---|---|
| ... ... | **முழைத்தல் :** எழுத்தில்லா மொழி, எழுத்தில்லா வோசை, துளைத்தல். | **முளைத்தல் :** உதித்தல், முளை முதலியன தோன்றுதல். |
| **மூலி :** காரணபூதன், செடி கொடி, மூலிகை. | **மூழி :** அகப்பை, கமண்டலம், சோறு, நீர்நிலை. | **மூளி :** அழகற்றவள், உறுப்பறை, உறுப்புக்குறை, குறைவுற்றது, தலைப் பகுதியிற் பின்னப்பட்டிருப்பது, வழக்கமாயுள்ள அணிகலன் இல்லாதவள். |
| **மூலை :** கோணம், மூலைத் திசை, வீடு. | **மூழை :** அகப்பை, குழிந்த இடம், சோறு, நீர்நிலை, மத்து. | **மூளை :** அறிவு, மண்டையின் உள்ளீடு. |
| ... ... | **மூழ் :** (மூழ்கு) அமுங்கு எனும் ஏவல். | **மூள் :** (மூட்டு) பற்றச்செய் எனும் ஏவல். |
| ... ... | **மூழ்தல் :** மூழ்குதல். | **மூள்தல் :** நெருப்பு முதலிய பற்றல். |
| ... ... | **மொழ்த்தல் :** மொய்த்தல். | ... ... |
| **மெலுக்கு :** மென்மை, விழிப்பு, வெளியலங்காரம். | **மெழுக்கு :** சாணம், தேனடையின் சக்கை, பிசின், மெழுகை, மெழுகும் பொருள். | ... ... |
| **மேலகம் :** மாடி. | **மேழகம் :** ஆடு, கவசம். | **மேளகம் :** கஞ்சி. |
| ... ... | **மேழம் :** ஆடு, கவசம். | **மேளம் :** இராகவுறுப்பு, கலவை மருந்து, கவலையற்ற இன்பவாழ்வு, தவல் வாத்தியம், நல்ல சாப்பாடு. |



| ல | ழ | ள |
|---|---|---|
| **மேலை :** அடுத்த, முந்தின, முன்பு, மேலிடமான, மேற்கிலுள்ள, மை, வருங்காலம். | **மேழை :** கஞ்சி, காடி, கொம்பில்லா விலங்கு. | ... ... |
| ... ... | ... . | **மொள் :** மொள்ளு என்னும் ஏவல். |
| **மொல்லு :** சண்டைக்கு முன் கைகால்களைத் தட்டச் செய்யும் ஆரவாரம். | ... ... | **மொள்ளு :** மொள்ளு எனும் ஏவல். |
| ... ... | ... ... | **மொள்(ளு)தல் :** தண்ணீர் முதலியன முகத்தல். |
| **மோலி :** மணிமுடி. | **மோழி :** புளிக்கோசு போன்ற குழம்பு வகை. | ... ... |
| **வலப்பம் :** சிலேட்டுக்குச்சி. | **வழப்பம் :** வழக்கம். | **வளப்பம் :** செழுமை, நன்மை, மாட்சிமை, வழக்கம். |
| **வலம் :** ஆணை, இடம், கனம், சேனை, பிரதட்சிணம், மேலிடம், வலப்பக்கம், வலி, வெற்றி. | ... ... | **வளம் :** அழகு, உணவு, செழுமை, செல்வம், தகுதி, நன்மை, பக்கம், பதவி, பயன், புனல், மாட்சிமை, மிகுதி, வருவாய், வழி வியாபாரப் பண்டம், வெற்றி. |
| **வலவன் :** சமர்த்தன், திருமால், தேர்ப்பாகன், வெற்றியாளன். | ... ... | **வளவன் :** சோழன், வேளாளன். |
| **வலன் :** சமர்த்தன், சேனை, மேலிடம், வலப்பக்கம், வலப்பக்கத்தி விருப்பவன், வலி, வெற்றி. | ... ... | **வளன் :** வளம். |

| ல | ழ | ள |
|---|---|---|
| **வலாகம் :** கொக்கு, நீர். | ... ... | **வளாகம் :** இடம், உலகம், திணைப்புனம், தேசம், தோட்டம், பரப்பு, பூ கண்டம், வளைக்கை. |
| **வலி :** அகங்காரம், இசிவு நோய், இரேகை, ஒலி, கஷ்டம், குரங்கு, சபதம், நறுவிலிமரம், பலவந்தம், பற்றிரும்பு, பற்றுக் கோடு, வஞ்சம், வல்லெழுத்து, வன்மை, வன்மை பெற்றவன். | **வழி :** இடம், உபாயம், ஒழுக்கம், உதாரணம், சகோதரன், சுவடு, சுற்றம், திரட்சி, பரம்பரை, பரிகாரம், பழைமை, பின்சந்ததி, பின்பு, பின்னனது, மரபு, மலைப்பக்கம், மார்க்கம், முறைமை, வரம், வழக்கு, வழிநூல், வழிபாடு. | **வளி :** அண்டவாத நோய், உடலிலுள்ள வாதக் கூறு, காற்று, சிறுகால அளவு. |
| **வலிதல் :** இழுத்தல், உச்சரிப்பில் அழுத்தமாதல், உய்தல், தங்குதல், தானாக முன்வந்து செய்தல், திண்ணியாதல், துணிவு கொள்ளுதல், நேர்வழியிற் பொருள் கொள்ளாது இடர்ப்படுதல், பலவந்தப் படுத்துதல், மீறுதல், முயலுதல். | **வழிதல் :** தோல் வழலுதல், நிரம்பிவடிதல், வடிதல். | ... ... |
| **வலித்தல் :** அழுத்தி உச்சரித்தல், ஆலோசித்தல், இசிவுகாணுதல், இழுத்தல், உடன்படுதல், இடர்ப்பட்டு பொருள் கொள்ளுதல், ஏங்குதல், | **வழித்தல் :** அரைத்த சந்தன முதலியவற்றை திரட்டியெடுத்தல், ஆடையைத் திரைத்தல், சவரம் பண்ணுதல், பூசுதல், வடித்தல். | ... ... |



| ல | ழ | ள |
|---|---|---|
| கருத்தொடு செய்தல், கொழுத்தல், சொல்லுதல், திண்ணியதாதல், துணிதல், நோவுண்டாதல், பலவந்தப் படுத்துதல், பற்றிக் கொள்ளுதல், புகை குடித்தல், முயலுதல், வற்றச் செய்தல், வற்றுதல், வளைத்தல். | | |
| **வலியன் :** கருக்குருவி, சாமர்த்தியசாலி, வலிமையுள்ளவன். | **வழியன் :** குஷ்டரோகி. | **வளியன் :** பருத்த பீஜமுள்ளவன். |
| **வலு :** எட்டென்னும் எண்ணைக் குறிக்கும் குழூஉக் குறி, ஒருவகைப் பசை, கனம், சாமர்த்தியம், பலம், பலமான, பற்று, பெரும் கொசுருவகை, மிகுதியான. | **வழு :** கேடு, தவறு, பழிப்புரை, பாவம். | **வளு :** இளமை, இளைது. |
| **வலுத்தல் :** திரப்படுதல், வன்மையாதல். | **வழுத்தல் :** சொல்லல், துதித்தல். | ... ... |
| **வலை :** சூழ்ச்சி, பிராணிகளை யகப்படுக்கும் கருவி. | **வழை :** சுரபுன்னை மரம், புதுமை. | **வளை :** எலி முதலியவற்றின் பொந்து, கைவளை, சக்கராயுதம், சங்கு, சிறிய உத்திரம், சுற்றிடம், துளை, தூதுவளைச்செடி, நீண்ட மரத்துண்டு. |

| ல | ழ | ள |
|---|---|---|
| ... | ... ... | **வளைதல் :** கோணுதல், சுற்றி வருதல், சுற்றுதல், சூழ்தல், தாழ்தல், திடமறுதல், தோற்றல், நேர்மையினின்று விலகுதல், வருந்துதல். |
| ... ... | ... ... | **வளைத்தல் :** அணிதல், கவர்தல், சித்திரமுதலிய எழுதுதல், தடுத்தல், பற்றுதல், வளையச்செய்தல். |
| **வலையம் :** வட்டம். | ... ... | **வளையம் :** எல்லை, குளம், கைவளை, சுற்று, தாமரைச்சுருள், முடியில் வளைத்துச் சூடும் மாலை, வட்டம். |
| **வல் :** சூதாடுகருவி, திறமை, முலைக்கச்சு, மேடு, வலிமை, விரைவு. | ... ... | **வள் :** கடிவாளம், காது, கூர்மை, நெருக்கம், படுக்கை, பெருமை, வலிப்பற்றிரும்பு, வலிமை, வளம், வீரர், வாள், வாளுறை. |
| **வல்லம் :** ஆற்றல், இரண்டு மஞ்சாடி நிறை, ஓலையால் முடைந்த கூடை, மனைவி, வாழை. | ... ... | **வள்ளம் :** உண்ணுங்கலமாக உதவும் வட்டில்வகை, சிறுதோணி, நாழிகை வட்டில், நான்கு மரக்கால் கொண்ட அளவு. |
| **வல்லி :** அளவுவகை, இடைச்சேரி, இளம்பெண், உபநிடதம், கலியாணம், | ... ... | **வள்ளி :** குறிஞ்சிநிலப்பெண், கூத்துவகை, கைவளை, கொடி, கொடிபோன்று |



| ல | ழ | ள |
|---|---|---|
| கால்விலங்கு, கொடி, சூதாடுபவன், பதாகை, பிரிகை, விரைவு. | | தொடர்ந்திருப்பது, சந்திரன், தண்டு, தொய்யிற்கொடி, முருகனின் தேவி. |
| **வல்லை :** கோட்டை, பெருங்காடு, மேடு, வட்டம், வயிற்றுக்கட்டி வகை, வருத்தம், வலிமை, விரைவாக. | ... ... | **வள்ளை :** ஒரு கொடி. |
| **வறல் :** உலர்கை, சுள்ளி, நீரில்லாமை, வறட்சியான நிலம், வறுக்கை, வற்றல். | ... ... | **வறள் :** உலர்கை, மணற்பாங்கு. |
| **வாலகம் :** விலங்கின்வால். | **வாழகம் :** வெள்ளைக் குங்கிலியம். | **வாளகம் :** வெட்டிவேர். |
| **வாலம் :** கந்தைத்துணி, தனியாக கட்டடம் செய்த புத்தகம், தலைமயிர், நீண்டு அகலம் குறுகிய துண்டு, பிண்டிபாலம், வால், வாலிபம். | ... ... | **வாளம் :** சக்கரவாகம், சக்கரவாளம், நேர்வாளம், வட்டம், வாள், யாளி. |
| **வாலாமை :** அசுத்தம், ஆசௌசம், மகளிர் சூதகம். | ... ... | **வாளாமை -** அலட்சியம், உள்ளீடின்மை, பயனின்மை, மௌனம். |
| **வாலி :** ஒரு புல், ஒரு வானர வீரன், கரிக்குருவி, மழைத்தூறல், வாலுடையது. | **வாழி :** வாழ்க என்னும் வியங்கோள் பொருளில் வருஞ்சொல். | **வாளி :** அம்பு, ஒருவகைக் காதணி, நீர்ச்சால்வகை, வட்டமாடுகை, வாள் வீரன். |

**வாலிகை :** மணல்.

**வாலை :** இருதுவாகாதபெண், சுத்தம், திராவகம் வடிக் கும் பாண்டம், பாத ரசம்.

**வால் :** இளமை, சேட்டை செய்பவன்-ள், தூய்மை, நன்மை, நீளமானது, பெருமை, மிகுதி, விலங் குகளின் ஓர் உறுப்பு, வெண்மை.

... ...

... ...

... ...

**விரல் :** கைகால் விரல்.

**விலக்கம் :** ஊரைவிட்டு நீங் குகை, புறம்பாக்குகை, மாதவிடாய், வழங்கா மல் விலக்குகை, விலகி யிருக்கை.

... ...

**வாழை :** ஒரு மரம்.

**வாழ் :** முறைமை.

**வாழ்தல் :** இருத்தல், சீவித் தல், சுமங்கலியாக இருத் தல், செழித்திருத்தல், மகிழ்தல், விதிப்படி ஒழு குதல்.

**வாழ்த்தல் :** வாழ்த்துதல் (ஆசிகூறுதல்).

**வியாழம் :** ஒரு கிரகம், தேவ குரு, பாம்பு, வியாழக் கிழமை.

... ...

... ...

**வாளிகை :** ஒரு வகைக் காதணி.

**வாளை :** ஓர் மீன்.

**வாள் :** உழுபடையின் கொழு, ஈர்வாள், ஒளி, கச்சு, கத்தி, கத்திரிகை, கயிறு, கலப்பை, கூர்மை, கொடுமை, கொல்லுகை, நீர், வார்த் தைக் கீர்த்தி, விளக்கம்.

... ...

... ...

**வியாளம் -** கெட்ட குண முள்ள யானை, பாம்பு, புலி, யாளி.

**விரள் -** பயம்.

**விளக்கம் -** அதிகம், ஒளி, சந் திரகலை, தெளிவான பொருள், தெளிவு, புகழ், மோதிரம், விளக்கு, விசாரணை.



**விலக்கு :** தனி, மாதவிடாய், வழு, வேண்டாத தென்று ஒதுக்குகை.

**விலக்குதல் :** கூடாதென்று தடுத்தல், தடைசெய்தல், மாற்றுதல், விலகச்செய் தல், வேண்டாதவற்றை நீக்கிவிடுதல், வேலியி னின்று தள்ளுதல்.

**விலங்கம் :** கை கால்களில் மாட்டப்படுந்தளை.

**விலங்கு :** குறுக்கானது, குன்று, கைகால்களில் மாட்டப்படுந்தளை, தடை, மாவும்புள்ளும்.

**விலங்குதல் :** அழிதல், எறி தல், களைதல், குறுக்கிடு தல், கொல்லுதல், செல விடுதல், தடுத்தல், மாறு படுதல்.

**விலம் :** பள்ளம்.

... ...

... ...

**விலவு :** மார்பின் பக்கம், விலாவெலும்பு.

**விலா :** மார்பின் பக்கம், விலாவெலும்பு.

... ...

... ..

... ...

... ...

... ...

... ...

**விழர்பு :** சோறு.

... ...

**விழவு :** அவா, மிதுனராசி, விழா, விளையாட்டு.

**விழா :** உற்சவம், விவாகக் கொண்டாட்டம்.

**விளக்கு :** ஒளிதருங்கருவி, ஒளிப்பிளம்பு,ஒளிபெறச் செய்கை, சோதிநாள்.

**விளக்குதல் :** சுத்தமாக்குதல், துடைப்பத்தாற் பெருக் குதல், துலக்குதல், தெளிவாக்குதல், பரிமா றுதல், பிரசித்தப்படுத்து தல்.

**விளங்கம் :** ஒருகொடி.

**விளங்கு :** சிற்றரத்தை.

**விளங்குதல் :** அறிதல், தெளி வாதல், பளபளப்பா தல், பிரகாசித்தல், பிர சித்தமாதல், மிகுதல், விருத்தியாதல்.

**விளம் :** அடம்பு, விளாமரம்.

**விளம்பு :** சொல்.

**விளம்புதல் :** எழுத்தின்மேல் எழுதுதல், சொல்லுதல்.

**விளவு :** அகில், இளமை, நிலம் முதலியவற்றின் பிளப்பு, விளாமரம்.

**விளா :** உழவில் வருஞ்சுற்று, ஒரு மரம்.

| | | |
|---|---|---|
| **விலாசு :** வலுவாக அடியெனும் ஏவல். | ... ... | **விளாசு :** விடாது அடித்தல். |
| **விலாசுதல் :** அழகுற அணிதல், முற்றுந் தோல்வியுறச்செய்தல், வலுவாக அடித்தல். | ... ... | **விளாசுதல் :** அடித்தல், மனத்தில் உறுத்தப் பேசுதல். |
| ... ... | **விழி :** கண், ஞானம், மிண்டை. | **விளி :** அழைப்பு, இசைப் பாட்டு, ஓசை, கொக்கரிப்பு, சொல். |
| ... ... | ... ... | **விளிதல் :** அவமானமடைதல், அழிதல், இறத்தல், ஓய்தல், கழிதல், குறைதல், கோபித்தல், சொல்லுதல்,நாணமடைதல், மறிதல், வருத்தப்படுதல். |
| ... ... | **விழித்தல் :** கண்திறத்தல், கவனித்து நோக்குதல், சாக்கிரதையாயிருத்தல், நித்திரைதெளிதல். | **விளித்தல் :** அழித்தல், அழைத்தல், கொல்லுதல், சொல்லுதல், பாடுதல், பேராவாரஞ் செய்தல். |
| ... ... | **விழிப்பு :** சாக்கிரதை, சிறந்து விளங்குகை, விழிக்கை. | **விளிப்பு :** ஓசை, சத்தமிடுகை. |
| **விலை :** கிரயத்தொகை, மதிப்பு, விற்கை. | **விழை :** விரும்பெனும் ஏவல். | **விளை :** அனுபவம், நகர்சூழ் காவற்காடு, நரம்பு, நீரேறுத மேட்டுநிலம், விளைபொருள். |
| ... ... | **விழைதல் :** ஒத்தல், நன்கு மதித்தல், நெருங்கிப் பழகுதல், விரும்புதல். | **விளைதல் :** உண்டாதல், சம்பவித்தல், தானியம் முதலியன உற்பத்தியாதல், பயன்தருதல், முதிர்தல். |



| | | |
|---|---|---|
| ... ... | ... ... | **விளைத்தல் :** உண்டாக்குதல், பயிர் முதலியன வளரச் செய்தல், புரிதல். |
| **வில் :** அம்பு எய்தற்குரிய கருவி. | ... ... | **விள் :** விள்ளு எனும் ஏவல். |
| **வில்தல் (விற்றல்) :** கிரயஞ் செய்தல், விற்கப்படுதல். | ... ... | **விள்(ளு)தல் :** உடைதல், சொல்லுதல், வாய் முதலியன திறத்தல், வெடித்தல், வெளிப்படுத்துதல். |
| **வெண்டலை :** தசை நீங்கி எலும்பு மாத்திரமாகிய தலை, தலையோடு. | ... ... | **வெண்டளை :** வெண்பாவிற்குரிய தளை. |
| **வெலி :** பலி, புறம்பாக்குகை. | ... ... | **வெளி :** ஆகாசம், இடைவெளி, மேற்பார்வைக்குக் காணுங்காட்சி, மைதானம். |
| ... ... | ... ... | **வெளித்தல் :** தந்திரம் முதலியன வெளியாதல், தெளிவாதல், பயனிலவாதல். |
| **வெல் :** வெற்றியுறு என்னும் ஏவல். | ... ... | **வெள் :** உள்ளீடற்ற, ஒளிபொருந்திய, கலப்பில்லாத, கூர்மை. |
| **வெல்(லு)தல் :** ஒத்தல், ஒழித்தல், செயித்தல், மேம்படுதல். | ... ... | ... ... |
| **வெல்லம் :** கருப்பஞ்சாற்றுக் கட்டி. | ... ... | **வெள்ளம் :** ஒரு பேரெண், கடல், கடலலை, நீர், நீர்பெருக்கு, மிகுதி. |


| ல | ழ | ள |
|---|---|---|
| **வெல்லி :** சமர்த்தி, சிற்றேலம். | ... | **வெள்ளி :** அறிவின்மை, சந்திரன், சுக்கிரன், விந்து, வெண்ணிறமுள்ள உலோக வகை, வெண்மை, வெள்ளிக்கிழமை, வெள்ளிநாணய வகை. |
| **வேலம் :** தோட்டம். | **வேழம் :** கரும்பு, நாணல், பரணி, பீர்க்கு, மூங்கில், யானை, விளாம் பழத்துக்கு வருவதொரு நோய். | **வேளம் :** வாசஸ்தலம், பகைவரின் பெண்களை வைக்கும் தனி இடம். |
| **வேலன் :** முருகன், முருகபூசை செய்பவன். | ... | **வேளன் :** குயவரது சாதிப் பட்டபெயர். |
| **வேலான் :** வேற்படை தாங்கியவன். | ... | **வேளான் :** ஒரு சாதிப் பட்டப்பெயர், குயசாதிப் பட்டப்பெயர். |
| **வேலை :** அலை, உத்தியோகம், கடல், கடற்கரை, கரும்பு, காரியம், காலம், கானல், தொழில், வெண்காரம். | ... | **வேளை :** கருமவினை, காலம், தைவேளைச்செடி, நாய் வேளைச்செடி. |
| **வேல் :** ஆயுதப்பொது, திரிசூலம், நுனிக்கூர்மையுடைய ஆயுதவகை, பகை, மரவகை, வெல் லுகை. | ... | **வேள் :** கலியாணம், சிறந்த ஆண்மகன், சிற்றரசன், மணம், மன்மதன், முருகன், விருப்பம், வேளிர் குலத்தான். |



சோவியத்அரசாங்கம்
அரசியல்
விலை ரூ. 1-8-0




மரகதம்
நாவல்
விலை ரூ. 5-0-0



விஞ்ஞானமும் சமூகமும்
ஆராய்ச்சி
விலை ரூ. 3-8-0



பாசவலை
நாவல்
விலை ரூ. 1-8-0



கலையும் கலைவளர்ச்சியும்
கட்டுரை
விலை ரூ. 2-0-0


கார்த்திகேயினி பிரசுரம்
இராமச்சந்திரபுரம் P.O. : : திருச்சி ஜில்லா

மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை.


www.thamizham.net